


VIRAKESARI
# வீரகேசரி
THE PREMIER NATIONAL TAMIL DAILY IN SRI LANKA
Registered as a Newspaper at the G.P.O No. QD/133/News/2021 www.virakesari.lk
பிராந்திய, நகரப்பதிப்பு




மலர் :92 இதழ்:101 கொழும்பு பிலவ வருடம் கார்த்திகை மாதம் 17ஆம் திகதி வெள்ளிக்கிழமை (03.12.2021) ஹிஜ்ரி—1443 ர.ஆகிர் 27 விலை :ரூ.30 பக்கங்கள் : 20

பயங்கரவாத தடை சட்டம், ஐ.சி.சி.பி.ஆர். சட்டத்தின் கீழான குற்றச்சாட்டுக்கள்

## அசாத் சாலி விடுதலை



### கொழும்பு மேல் நீதிமன்றம் தீர்ப்பு; 261 நாள் சிறை வாழ்வை முடிவுக்கு கொண்டுவந்தார் நீதிபதி அமல் ரணராஜா

(எம்.எப்.எம்.பஸீர்)

ஊடக சந்திப்பொன்றினை நடத்தி மத, இன பேதங்களை தோற்றுவிக்கும் வன்மத்தை தூண்டும் வகையில் கருத்து வெளியிட்டதாக கூறி மேல் மாகாண முன்னாள் ஆளுநர் அசாத் சாலிக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கின் அனைத்து குற்றச்சாட்டுக்களிலிருந்தும் அவரை விடுதலை செய்வதாக கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று தீர்ப்பறிவித்தது. 10

## எல்லைகளை முடக்கி ஒமிக்ரோன் திரிபு பரவலை தடுக்கவே முடியாது

### எதிர்காலத்தில் இலங்கையில் அந்த வைரஸ் பரவும்; வைத்திய நிபுணர்கள் தெரிவிப்பு

(ஆர்.யசி)

உலகில் 24 நாடுகளில் அடையாளம் காணப்பட்டுள்ள ஒமிக்ரோன் வைரஸ் தொற்றானது ஐரோப்பிய நாடுகளில் கடந்த நவம்பர் மாதத்திலேயே பரவ ஆரம்பித்துள்ள காரணத்தினால் வைரஸை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் காலதாமதம் 09

## சஹ்ரானின் மனைவி ஹாதியாவுக்கு வழக்கு

### குற்றப்பகிர்வு தாக்கல் செய்தார் சட்ட மா அதிபர்

(எம்.எப்.எம்.பஸீர்)

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ், உயிர்த்த ஞாயிறு தின தொடர் தற்கொலை தாக்குதல்களின் பிரதான 09

## இலங்கையில் ஒமிக்ரோன் வைரஸ் அடையாளம் காணப்படவில்லை

### வெளிநாடுகளில் இருந்து வருகைதந்தவர்களின் உடற்கூறு மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டுள்ளன என்கிறார் சந்திம ஜீவந்தர

(ஆர்.யசி)

வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்கு வருகை தந்துள்ளவர்களின் உடல்நிலை மாதிரிகள் பெறப்பட்டுள்ள நிலையில் அவர்களிடம் ஒமிக்ரோன் வைரஸ் தொற்று இருப்பது அடையாளம் காணப்படவில்லை. அதற்கமைய இலங்கையில் இதுவரை 10

முதலீட்டு சபையின்

## தலைவர் உள்ளிட்ட சிலர் இராஜினாமா

நாட்டில் இடம்பெறும் முதலீடுகளை ஊக்குவிப்பதற்கான அரச கட்டமைப்பான இலங்கை முதலீட்டுச்சபையின் உயர்மட்ட அதிகாரிகள் உள்ளடங்கலாக சிரேஷ்ட உறுப்பினர்கள் சிலர் தமது பதவிகளிலிருந்து 09

## முசம்மில், ஜயநந்த, நிமலுக்கு மன்றில் ஆஜராக அறிவித்தல்

### அசாத் சாலி தரப்பின் வாதத்தால் நீதிமன்றம் உத்தரவு

(எம்.எப்.எம்.பஸீர்)

மேல் மாகாண முன்னாள் ஆளுநர் அசாத் சாலிக்கு எதிராக, மத, இன பேதங்களை தோற்றுவிக்கும் வன்மத்தை தூண்டும் வகையில் கருத்து வெளியிட்டதாக சி.ஐ.டி.யில் முறைப்பாடு செய்த மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் கொழும்பு மேல் நீதிமன்றம் மன்றில் ஆஜராக அறிவித்தல் அனுப்பியுள்ளது. 09

## நெடுந்தீவு, அனலைதீவு, நயினாதீவு மின்திட்டத்தை கைவிடுகிறது சீனா

(எம்.மனோசித்ரா)

இலங்கையின் வடக்கிலுள்ள 3 தீவுகளில் முன்னெடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த காற்றாலை மின் திட்டங்களை கைவிடுவதற்கு சீனா தீர்மானித்துள்ளது. மூன்றாம் தரப்பினரால் பாதுகாப்பு தொடர்பில் கருத்து வெளியிடப்பட்டமையைக் கருத்திற்கொண்டு சினோ சோர் ஹைப்ரிட் டெக்னாலஜி இந்த வேலைத்திட்டத்தை 10




போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்பில்

## ஜெனரல் சவேந்திர சில்வா பொறுப்புக்கூற வேண்டும்

### அந்நாட்டு எம்.பி. வெளிவிவகார செயலாளரிடம் வலியுறுத்தல்

(நா.தனுஜா)

ஜெனரல் சவேந்திர சில்வா இலங்கை இராணுவத்தின் 58 ஆவது படைப்பிரிவின் கட்டளைத்தளபதியாக இருந்தபோது நிகழ்த்தப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மிகமோசமான 10



ஊடகவியலாளர்களுக்கான அரச காப்புறுதி திட்டம் வழங்கும் நிகழ்வு நேற்று வியாழக்கிழமை அலரி மாளிகையில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஊடகவியலாளர் ஒருவருக்கு காப்புறுதி திட்டத்துக்கான பத்திரத்தை வழங்குவதை காணலாம்.

தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்த வந்தவர்களால்

## சமையலறையைக்கூட காக்க முடியவில்லை

### சபையில் விஜித ஹேரத் குற்றச்சாட்டு

(ஆர்.யசி, எம்.ஆர்.எம்.வசீம்)

நாட்டின் தேசிய வளங்களை எவரும் பெற்றுக்கொண்டால் நாம் ஆட்சிக்கு வந்தவுடன் மீளவும் அரச உடைமையாக்குவோம் என கூறி ஆட்சிக்கு வந்த ராஜபக்ஷவினர் இன்று துறைமுகத்தை இந்தியாவுக்கு விற்க நடவடிக்கை 10

## ஆளும் கூட்டணியில் இருக்கின்ற 11 கட்சிகளும் இனி வெளியேறலாம்

### சிறிலங்கா சுதந்திர கட்சி அழைப்பு

(இராஜதுரை ஹஷான்)

சிறந்த நிர்வாக முகாமைத்துவம் இல்லாத காரணத்தினால் சமூகத்தின் மத்தியில் தோற்றம் பெற்றுள்ள அடிப்படை பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியாத நிலையில் அரசாங்கம் 10

## நாட்டின் உரிமத்தைக் கைப்பற்ற பல சக்திகள் சூட்சுமமாக முயற்சி

### கடுமையான தீர்மானங்களை எடுக்க வேண்டிய கட்டாயத்தில் அரசு; பிரதமர் மஹிந்த

(லியோ நிரோஷ தர்ஷன்)

இறுதிக்கட்ட போரில் முன்னெடுக்கப்பட்ட சதி முயற்சிகளை போன்று தற்போதும் மக்களின் சுதந்திரத்தையும் நாட்டின் உரிமத்தையும் கைப்பற்றும் 09

## ஒரே விமானத்தில் அபுதாபி செல்லும் கோட்டா – ரணில்

(எம்.மனோசித்ரா)

இந்துமகா சமுத்திர மாநாட்டில் கலந்து கொள்வதற்காக இன்று வெள்ளிக்கிழமை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அபுதாபி செல்லவுள்ளார். 09



# கொழும்பு துறைமுகத்தின் 13 ஏக்கர் காணியை தனியார் நிறுவனம் ஒன்றுக்கு வழங்க முயற்சி

**எந்தவித கேள்விக்கோரலும் இல்லாமலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளது என்கிறார் திஸ்ஸ அத்தநாயக்க**

(ஆர்.யசி,எம்.ஆர்.எம்.வசீம்)

அரசாங்கம் டொலரை பெற்றுக்கொள்வதற்காக எமது வளங்களை முதலீடு என்ற பெயரில் விற்பனை செய்ய நடவடிக்கை எடுத்துவருகின்றது. கொழும்பு துறைமுகத்தின் 13ஏக்கர் காணியை 150 மில்லியன் டொலருக்கு தனியார் நிறுவனம் ஒன்றுக்கு வழங்குவதற்கு அமைச்சரவை பத்திரம் சர்ப்பிக்கப்பட்டிருக்கின்றது. எந்தவித கேள்விக்கோரலும் இல்லாமலேயே மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. முதலீடு என்பது வளங்களை விற்பனை செய்வதல்ல என்பதை அரசாங்கம் தெரிந்துகொள்ளவேண்டும் என எதிர்க்கட்சி உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற துறைமுகங்கள் மற்றும் கப்பல் துறை அமைச்சு, நீர்வழங்கல் அமைச்சு மற்றும் ராஜாங்க அமைச்சுக்கள் மீதான வரவு செலவு திட்ட குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

நாட்டின் துறைமுகங்கள் தேசிய வருமானத்தின் கேந்திர நிலையங்களாகும். குறிப்பாக கொழும்பு துறைமுகம் தெற்காசியாவில் மிகவும் முன்னணியில் இருக்கின்றது. அது எமது தேசிய வருமானத்துக்கு பெரும் சக்தியாகும். கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை அபிவிருத்தி செய்ய பல முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. இறுதியில் இந்த அரசாங்கம் கிழக்கு முனையத்தை விற்பனை செய்ய முற்பட்டபோது அதற்கு எதிராக பாரிய எதிர்ப்பு ஏற்பட்டது. அதனால் அரசாங்கம் அந்த தீர்மானத்தில் இருந்து பின்னுக்கு சென்றது. என்றாலும் தற்போது அரசாங்கம் கொழும்பு துறைமுகத்தின் அபிவிருத்திக்கு என்ன நடவடிக்கை எடுத்து வருகின்றது என்பதை தெரிவிக்கவேண்டும்.

மேலும் கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை வெளிநாட்டு நிறுவனம் ஒன்றுக்கு வழங்கி 325 மில்லியன் டொலர் கடன் பெறுவதற்கு அரசாங்கம் முயற்சித்து வருகின்றது. அரசாங்கத்திடம் டொலர் பற்றாக்குறை இருந்து வருகின்றமையே இதற்கு காரணமாகும். கிழக்கு துறைமுகத்தின் மொத்த நீளம் 1360 மீட்டராகும். அதில் 600மீட்டரே அபிவிருத்தி செய்யப்பட்டிருக்கின்றது. எஞ்சிய பகுதியை விரைவாக அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும். இல்லாவிட்டால், எமது கடலை சுற்றி முனையங்கள் உருவாகினால் சர்வதேச ரீதியில் முன்னணியில் இருக்கும் எமது துறைமுகம் இல்லாமல்போகும். இந்த முனையத்துக்கு தேவையான பாரம் தூக்கிகளை கொள்வனவு செய்யும் நடவடிக்கை தொடர்ந்து காலம் கடந்து செல்கின்றது. முனையத்துக்கு தேவையான உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு அரசாங்கம் பின்வாங்குவது இந்த முனையத்தை வெளிநாட்டு நிறுவனங்களுக்கு வழங்குவதற்கா என்ற சந்தேகம் எழுகின்றது.

மேலும் அரசாங்கம் டொலர்களை பெற்றுக்கொள்வதற்காக எமது வளங்களை முதலீடு என்ற பெயரில் விற்பனை செய்ய நடவடிக்கை எடுத்துவருகின்றது. குறிப்பாக கொழும்பு துறைமுகத்தின் 13ஏக்கர் காணியை தனியார் நிறுவனம் ஒன்றுக்கு வழங்குவதற்கு அமைச்சரவை பத்திரம் சர்ப்பிக்கப்பட்டிருக்கின்றது என்றார்.



இந்தியா சென்றுள்ள நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ அந்நாட்டின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவலை நேற்று புதுடில்லியில் சந்தித்தபோது...

## 27 கொவிட் மரணங்கள் பதிவு

(எம்.மனோசித்ரா)

நாட்டில் நேற்று வியாழக்கிழமை சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் உறுதிப்படுத்தப்பட்ட 27 மரணங்களுடன் மொத்த கொவிட் மரணங்களின் எண்ணிக்கை 14399ஆக உயர்வடைந்துள்ளது.நேற்று உறுதிப்படுத்தப்பட்ட மரணங்களில் 16 ஆண்களும் 11 பெண்களும் உள்ளடங்குகின்றனர். இவர்களில் 19 பேர் 60 வயதுக்கு மேற்பட்டோராவர். மேலும் நேற்று மாலை வரை 538 கொவிட் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டனர். அதற்கமைய இது வரையில் கொவிட் தொற்றுறுதி செய்யப்பட்டோர் எண்ணிக்கை 565271 ஆக உயர்வடைந்துள்ளது.இவ்வாறு இனங்காணப்பட்ட தொற்றாளர்களில் 541124 பேர் குணமடைந்துள்ளனர். 9748 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

# வைரஸ் தொற்றை கட்டுப்படுத்த நாட்டை முடக்குவது தீர்வல்ல

**சுகாதார அமைச்சின் செயலாளர் வைத்தியர் எஸ்.எச்.முனசிங்க தெரிவிப்பு**

(ஆர்.யசி)

வைரஸ் தொற்றை கட்டுப்படுத்துவதற்காக நாட்டை முடக்கினால் மக்களினதும், நாட்டினதும் வருமான வழிகளே இல்லாமல் போகும் எனவும், நாட்டை முடக்காது சுகாதார ஒழுங்குவிதிகளை பின்பற்றி தொற்றுப் பரவலை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கையெடுப்பதே சிறந்ததாக இருக்குமெனவும் சுகாதார அமைச்சின் செயலாளர் வைத்தியர் எஸ்.எச்.முனசிங்க தெரிவித்துள்ளார்.ஜனாதிபதி ஊடக மையத்தினால் நேற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடக சந்திப்பில் கலந்துகொண்ட போதே அவர் இதனை சுட்டிக்காட்டினார். அவர் மேலும் கூறுகையில்,

நாட்டை முடக்கினால் வைரஸை கட்டுப்படுத்த முடியுமென்று கூறினர். இதற்கு முன்னர் இரண்டு தடவைகள் நாட்டை மூடினோம்.இதனால் தொற்றாளர் எண்ணிக்கை பூச்சியம் வரையில் குறைந்தாலும் திறந்த பின்னர் மீண்டும் அதிகரித்தது. இதன்போது மீண்டும் மூடும் நிலை உருவானது. இவ்வாறு நாட்டை மூடும் போது மக்களின் வாழ்வாதாரமே பாதிக்கப்படும். நாட்டை மூடியிருந்த போது மக்கள் தமது பிரச்சினைகளை கூறியுள்ளனர்.

அத்துடன் சுற்றுலாத்துறையை எடுத்துக் கொண்டால் அவர்களின் மூலம் மட்டுமே தொற்று ஏற்படவில்லை. இதனை விடவும் நாட்டுக்குள் வைரஸ் வருவதற்கான வழிகள் உள்ளன. இதனால் சுற்றுலாத்துறையினர் வருவதை தடுப்பதன் மூலம் நாட்டில் வைரஸை கட்டுப்படுத்த முடியுமென்ற நிலைப்பாட்டில் சுகாதார அமைச்சு இல்லை. சுற்றுலாப் பயணிகள் முறையாக சுகாதார ஒழுங்குவிதிகளுடன் இருந்தால் அவ்வாறான பிரச்சினை ஏற்படாது என்றார்.

# அம்பாந்தோட்டை உடன்படிக்கையை மாற்றாதிருக்க ஜனாதிபதி, பிரதமர் இணக்கம்

**ரணில் சபையில் தெரிவிப்பு : உடன்படிக்கை 70 ஆண்டுகளா அல்லது 99 ஆண்டுகளா என்பதில் குழப்பம்**

(ஆர்.யசி, எம்.ஆர்.எம்.வசீம்)

சீனாவுடன் செய்துகொள்ளப்பட்ட அம்பாந்தோட்டை துறைமுக உடன்படிக்கை 70 ஆண்டுகளுக்கே செய்துகொள்ளப்பட்டதாக முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று பாராளுமன்றத்தில் கூறிய வேளையில் அதனை மறுத்த அமைச்சர் ரோஹித அபேகுணவர்த்தன இது 99 ஆண்டுகால ஒப்பந்தம் என்று குறிப்பிட்டார்.

இதனால் குறித்த ஒப்பந்தம் 70 ஆண்டுகளா அல்லது 99 ஆண்டுகளா என்பது குறித்து முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் அமைச்சர் ரோஹித அபேகுணவர்த்தனவிற்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டது. இந்நிலையில் சீனாவுடன் செய்துகொள்ளப்பட்ட அம்பாந்தோட்டை துறைமுக உடன்படிக்கையை மாற்றமின்றி முன்னெடுத்து செல்ல ஜனாதிபதி மற்றும் பிரதமர் இணங்கியதாக ரணில் விக்கிரமசிங்க சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற துறைமுகங்கள் அமைச்சு மற்றும் நீர் வழங்கல் அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடுகள் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றிய எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க அம்பாந்தோட்டை துறைமுக குத்தகை விவகாரம் குறித்து சில காரணிகளை முன்வைத்தார்.

இதன்போது அவர் கூறுகையில்,

ஒரு வளத்தை குத்தகைக்கு வழங்கும் வேளையில் 33 ஆண்டுகளுக்கு மேல் ஒரு தரப்புக்கு குத்தகைக்கு கொடுக்கும் வேளையில் அது உருத்துரிமை என்றே கருதப்படும். அதனை மீள பெற்றுக்கொள்ள முடியாது. அவ்வாறு ஒரு வளத்தை கொடுத்து மீண்டும் பெற்றுக் கொண்ட ஒரு நிறுவனத்தின் பெயரை கூற முடியுமா? பிரீமா நிறுவனத்தை பிரித்தானியா நிறுவனமொன்றுக்கு 20 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு கொடுக்கப்பட்டது. ஆனால் இன்றுவரை அதனை எம்மால் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளது. அம்பாந்தோட்டை துறைமுகத்தை விற்றது அல்லது குத்தகைக்கு கொடுக்க காரணம் நாம் பெற்றுக்கொண்ட கடன்களை செலுத்த முடியாதமையாகும். ஆனால் பெற்றுக்கொண்ட பணத்தில் கடன்களை செலுத்தவில்லை. பெற்றுக்கொண்ட பணத்தை திறைசேரிக்கு பெற்றுக் கொண்டு இன்றும் கடன்களை செலுத்திக்கொண்டுள்ளோம். எனவே இந்த விடயங்கள் குறித்து முன்னாள் பிரதமருடன் நான் விவாதத்திற்கு செல்லவில்லை. எமது முன்னாள் தலைவர் ஆவார். ஆனால் உண்மைகளை கூற வேண்டும் என்றார்.

இதன்போது ஒழுங்குப்பிரச்சினை எழுப்பிய முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க,இப்போது செய்துகொள்ளப்பட்டுள்ள உடன்படிக்கைக்கு அமைய நாளைக்கே எம்மால் உடன்படிக்கையை நீக்கிவிட்டு துறைமுகத்தை மீண்டும் பெற்றுக்கொள்ள முடியும். அதற்காக நட்டஈடு மட்டுமே செலுத்த வேண்டும். அதேபோல் இந்த உடன்படிக்கையில் ஒரு பில்லியன் டொலர்களை பெற்றுக்கொண்டோம். இதனை வெளிநாட்டு கையிருப்பில் சேர்த்தே ஏனைய வர்த்தக கடன் அடைப்புகளை கையாண்டோம் என்றார்.

இதன்போது ஒழுங்குப்பிரச்சினை எழுப்பிய அமைச்சர் ரோஹித அபேகுணவர்த்தன, இந்த ஒப்பந்தம் 70 ஆண்டுகளுக்கு செய்துகொள்ளப்படவில்லை. 99 ஆண்டுகளுக்கு செய்துகொள்ளப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தத்தில் பயனுள்ள அனைத்துமே அவர்களுக்கும்,பிரயோசனம் இல்லாத திட்டங்கள். எமக்கும் ஏற்ற வகையில் இது செய்துகொள்ளப்பட்டுள்ளது. முன்னாள் பிரதமருக்கு இது சாதாரண பிரச்சினையாகும், இவர்கள் ஆட்சியில் இருந்திருந்தால் நாட்டையே விற்றிருப்பார்கள் என்றார்.

மீண்டும் ஒழுங்குப்பிரச்சினை எழுப்பிய ரணில் விக்கிரமசிங்க : இப்போது செய்துகொள்ளப்பட்டுள்ள அம்பாந்தோட்டை உடன்படிக்கையை அவ்வாறே முன்னெடுத்து செல்ல ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் இணங்கியுள்ளனர். ஆகவே இதில் குழப்பம் உள்ளது, எனவே அமைச்சரவையில் இதனை கவனத்தில் கொள்ளுங்கள். துறைமுக தரப்பு கூச்சளிடுவதற்கு அமைய இதனை செய்ய முடியாது. துறைமுக அதிகாரசபை கூறுவதை கேட்க வேண்டாம் என்றார்.

# தலைமன்னார் இராமேஸ்வரத்துக்கிடையிலான கப்பல் சேவையை விரைவாக ஆரம்பிக்க வேண்டும்

**இந்தியாவில் உள்ள ஈழத்தமிழர்கள் நாடு திரும்ப இது சாதமாக இருக்கும் என்கிறது கூட்டமைப்பு**

(ஆர்.யசி, எம்.ஆர்.எம்.வசீம்)

இந்தியாவில் உள்ள ஈழத்தமிழர்கள் நாடு திரும்ப விரும்புவதனால் தலைமன்னார் இராமேஸ்வரத்துக்கிடையிலான கப்பல் சேவையை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும். தாம் இதற்கு தயாராகவுள்ள நிலையில் இலங்கை அரச தரப்பிலேயே தாமதம் இருப்பதாக இந்திய தூதுவர் தெரிவித்திருப்பதால் இது தொடர்பில் அரசாங்கம் உடனடிக்கவனம் செலுத்த வேண்டுமென தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட எம்.பி. சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற துறைமுகங்கள் அமைச்சு மற்றும் நீர் வழங்கல் அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடுகள் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றிய போதே அவர் இதனை கூறினார்,

அவர் மேலும் கூறுகையில்,

யுத்தத்திற்கு முன்பாக தலைமன்னார் இந்தியாவுக்கிடையிலான இராமேஸ்வரத்துக்கு கப்பல் சேவை நடைபெற்றது.அந்த கப்பல் சேவை யுத்தம் காரணமாக நிறுத்தப்பட்டது.மீண்டும் இன்றுவரை அந்த கப்பல் சேவை ஆரம்பிக்கப்படவில்லை. தலைமன்னார் இராமேஸ்வரம் கப்பல் சேவை தொடர்பாக இந்திய தூதுவரோடு நடைபெற்ற பேச்சுவார்த்தையின்போது இது தொடர்பில் கோரிக்கை முன்வைத்தேன். அதற்கு அவர் இந்திய அரசினுடைய ஆயத்த வேலைகள் இடம் பெறுவதாகவும் கப்பல் சேவைக்கு இந்தியாவின் முழுமையான ஆதரவு இருப்பதாகவும் கூறியிருந்தார். இலங்கை அரசும் அதற்கு சாதகமான பதிலை வழங்கி இருப்பதாகவும் எனினும் அதில் பல தாமதங்கள் இருப்பதாகவும் சுட்டிக்காட்டியிருந்தார். எனவே மிக விரைவாக தலைமன்னார் இராமேஸ்வரத்துக்கு இடையிலான கப்பல் சேவை நடைபெற வேண்டும். அதற்கான முயற்சியை கப்பல்துறை அமைச்சரும் வெளியுறவுத்துறை அமைச்சரும் இணைந்து எடுக்க வேண்டும்.

யுத்தம் நடைபெற்றதன் காரணமாக புலம்பெயர்ந்து இந்தியாவுக்கு சென்ற ஈழத்தை சேர்ந்தவர்கள் மீண்டும் இலங்கைக்கு வரமுடியாதுள்ளனர். அவர்கள் விமானம் மூலம் வருவதாக இருந்தால் அவர்களுடைய பொருட்களை கொண்டு வர முடியாது. கப்பல் சேவை மூலமாகத்தான் அவர்கள் வருவதற்கு விரும்புகின்றார்கள். அவர்கள் இங்கு மிக விரைவில் வரவேண்டும். அதற்கு இந்த கப்பல் சேவை பிரதான விடயமாக உள்ளதால் இதனை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும்.

அடுத்ததாக முல்லைத்தீவு முதல் திருகோணமலை,யாழ்ப்பாணம் வரை கடற்கரைகளில் வெளிச்ச வீடுகள் இல்லை. இதனால் மழைக்காலங்களில் மீனவர்கள் கரை திரும்புவது மிகப்பெரும் பிரச்சினையாக உள்ளது. கடந்த வருடம் இது குறித்து அமைச்சரிடம் நான் கேட்டிருந்தேன். அமைச்சர் முயற்சி எடுப்பதாக கூறியிருந்தார்.

அதனை மீண்டும் நினைவு படுத்துகின்றேன். முல்லைத்தீவு மாவட்ட மீனவர்களுக்கு மிகவும் அத்தியாவசியமான அந்த வெளிச்சக்கூட்டை அமைத்து தர வேண்டும்.அதேவேளை மன்னார் மாந்தை தன்னார் ஈச்சிலவத்தை கிராமத்துக்கான குடிநீர்திட்டத்துக்கு அனுமதி வழங்கியதற்காக நீர்ப்பாசன அமைச்சர் வாசு தேவ நாணயக்காரவுக்கு எனது நன்றியை தெரிவிக்கின்றேன் என்றார்.

# ஆரியகுளம் மகிழ்வூட்டும் திடல் திறப்பு







யாழ். மாநகர முதல்வர் வி. மணிவண்ணனின் "தூய நகரம்" திட்டத்துக்கு அமைவாக தியாகி அறக்கொடை நிறுவனத்தின் ஸ்தாபகர் வாமதேவன் தியாகேந்திரனின் நிதியுதவியுடன் புனரமைக்கப்பட்ட ஆரியகுளம் மகிழ்வூட்டும் திடல் நேற்று மாலை திறந்து வைக்கப்பட்டது .மாநகரமுதல்வரின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா கலந்துகொண்டார். ( படங்கள் :ஐ.சிவசாந்தன்)

**இலங்கை ரூபாவாக மாற்றப்படும் அமெரிக்க டொலருக்கான**

# ஊக்குவிப்புத்தொகையை 10 ரூபாவாக உயர்த்தியது மத்திய வங்கி

(நா.தனுஜா)

வெளிநாடுகளில் பணிபுரியும் தொழிலாளர்களால் அனுப்பப்படுகின்ற பணம் இம்மாதகாலப்பகுதியில் இலங்கை ரூபாவாக மாற்றப்படும்போது ஒரு டொலருக்கான ஊக்குவிப்புத்தொகையாக 10 ரூபாவைக் கொடுப்பனவு செய்வதற்கு இலங்கை மத்திய வங்கி தீர்மானித்துள்ளது.

மத்திய வங்கியின் நாணயச்சபையினால் 'உள்முக தொழிலாளர் பணவனுப்பல்கள் மீதான ஊக்குவிப்புத்திட்டத்தின்' கீழ் வெளிநாடுகளிலிருந்து அனுப்புகின்ற பணம் இலங்கை ரூபாவாக மாற்றப்படும்போது அதற்கான ஊக்குவிப்புத்தொகையாக ஒரு அமெரிக்க டொலருக்கு 2 ரூபா வீதம் வழங்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் ஏற்கனவே வழங்கப்பட்டுவந்த 2 ரூபாவுக்கு மேலதிகமாக நேற்று முன்தினம் முதலாம் திகதியிலிருந்து எதிர்வரும் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் உரிமம்பெற்ற வங்கிகள், சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஏனைய வழிமுறைகள் ஊடாக வெளிநாடுகளிலிருந்து தொழிலாளர்கள் அனுப்புகின்ற பணம் இலங்கை ரூபாவாக மாற்றப்படுகின்றபோது ஒரு அமெரிக்க டொலருக்கான ஊக்குவிப்புத்தொகையாக 8 ரூபாவை வழங்குவதற்கு மத்திய வங்கியின் நாணயச்சபை தீர்மானித்துள்ளது.

அதன்படி வெளிநாடுகளில் பணிபுரிவோரால் அனுப்பப்பட்ட பணம் இம்மாதகாலத்தில் இலங்கை ரூபாவாக மாற்றப்படுமாயின், ஏற்கனவே வழங்கப்பட்டுவரும் 2 ரூபாவுக்கு மேலதிகமாக தற்போது வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ள 8 ரூபாவையும் இணைத்து அமெரிக்க டொலர் ஒன்றுக்கான ஊக்குவிப்புத்தொகையாக 10 ரூபா கொடுப்பனவு செய்யப்படும்.

இந்த மேலதிக ஊக்குவிப்புத்தொகையை வழங்குவதன் ஊடாக வெளிநாடுகளில் பணிபுரிபவர்கள் எமது நாட்டுககு அனுப்பும் பணத்தின் அளவை உயர்த்த முடிவதுடன் அதன்மூலம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு செலாவணிச்சந்தையின் திரவத்தன்மையினை அதிகரிக்கமுடியும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அதுமாத்திரமன்றி முறைசாரா வழிகளின் ஊடாக இடம்பெறும் பண அனுப்பல்களைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மத்திய வங்கியினாலும் ஏனைய சட்ட அமுலாக்கக் கட்டமைப்புக்களாலும் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகத் தெரிவித்துள்ள மத்திய வங்கி, அதன் காரணமாக புலம்பெயர் தொழிலாளர்கள் தம்மைச் சார்ந்திருப்போருக்குப் பணத்தை அனுப்பிவைப்பதற்கு முறைசார் வழிகளைத் தேர்ந்தெடுக்கவேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஓமிக்ரோன் பிறழ்வினை கண்டறிய விசேட திட்டம்

**வழமைக்கு அதிகமாக தொற்றாளர்கள் வெளிப்படும் பகுதிகளில் தீவிர கண்காணிப்பு - வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத்**

(எம்.மனோசித்ரா)

வெளிநாடுகளிலிருந்து வருகை தரும் அனைவரதும் அல்லது நாட்டில் தொற்று அறிகுறிகள் தென்படும் சகலரதும் மாதிரிகளைப் பெற்று ஒமிக்ரோன் பிறழ்வினைக் கண்டறிவது நடைமுறை சாத்தியமற்ற விடயமாகும். எனவே வழமைக்கு மாறாக அதிகளவான தொற்றாளர்கள் இனங்காணப்படும் பகுதிகளை மாத்திரம் இலக்காகக் கொண்டு பரிசோதனைகளை விஸ்தரிக்க தீர்மானித்துள்ளதாக பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் ,

எந்தவொரு நாட்டிலிருந்து வருகை தந்தாலும் விமானத்தில் ஏறுவதற்கு முன்னர் பி.சி.ஆர். பரிசோதனையை முன்னெடுத்து தொற்று ஏற்படவில்லை என்ற முடிவு கிடைக்கப் பெற்றிருந்தால் அதனை உறுதிப்படுத்தும் ஆவணத்துடனேயே நாட்டுக்குள் நுழைய முடியும். விமானத்தில் ஏறுவதற்கு 72 மணித்தியாலத்திற்கு முன்னர் இந்த பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

அவ்வாறன்றி கட்டுப்பாடுகளின்றி நாட்டுக்கு வருகை தர வேண்டுமெனில் சகலரும் முழுமையாக தடுப்பூசியைப் பெற்றுக் கொண்டிருக்க வேண்டும். இவ்வாறு தடுப்பூசியைப் பெற்றுக் கொண்டுள்ளவர்களுக்கு வைரஸ் தொற்று காணப்பட்டாலும் அவர்களிடமிருந்து ஏனையோருக்கு பரவக் கூடிய வாய்ப்புக்கள் குறைவாகும்.

முழுமையாக தடுப்பூசியைப் பெற்றுக் கொண்டுள்ளமை மற்றும் 72 மணித்தியாலத்திற்கு முன்னர் மேற்கொண்ட பி.சி.ஆர். பரிசோதனை அறிக்கை என்ற இரண்டுக்கான ஆவணங்களைக் கொண்டவர்கள் மாத்திரமே நாட்டுக்குள் அனுமதிக்கப்படுவர். ஏனையவர்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படுவர். விமானங்களில் வருகை தரும் அனைவரது மாதிரிகளையும் பெற்று திரிபுகள் தொடர்பான ஆய்விற்கு உட்படுத்தினால் மாத்திரமே வைரசுடன் நாட்டுக்குள் வருபவர்களை இனங்காண முடியும். எனினும் இது செலவு கூடிய , அதிக காலம் செல்லக் கூடியதும் சிரமமான நடைமுறையுமாகும்.

# சுபயோகம்

**03. 12.2021 ஸ்ரீ பிலவ வருடம் கார்த்திகை மாதம்17ஆம் நாள் வெள்ளிக்கிழமை**

கிருஷ்ணபட்ச சதுர்தசி திதி மாலை 4.00 மணிவரை அதன் மேல் அமாவாசை திதி விசாகம் நட்சத்திரம் பகல் 1.08 வரை பின்னர் அனுஷம் நட்சத்திரம் சிராத்த திதி தேய்பிறை சதுர்த்தசி சித்தயோகம் கீழ்நோக்கு நாள் சந்திராஷ்டம நட்சத்திரங்கள் அஸ்வினி, பரணி, சுபநேரங்கள் 9.00–10.00 எமகண்டம்3.00–4.30 குளிகை காலம் 7.30–9.00 வாரசூலம் மேற்கு பரிகாரம் –வெல்லம்

| | | | |
|---|---|---|---|
| | | ராகு | |
| குரு | தினசரி கிரகநிலை கார்த்திகை 17 வெள்ளி காலை 7.31 விருட்சிக, சந்திரன் | | |
| சனி | | | |
| சுக் | புத சூரி கேது | செவ் சந் | |

| | |
|---|---|
| மேடம் | –ஆலயதரிசனம், அமைதி |
| இடபம் | –காரியசித்தி, அனுகூலம் |
| மிதுனம் | – தனம், சம்பத்து |
| கடகம் | –புகழ், பாராட்டு |
| சிம்மம் | –முயற்சிகளில் வெற்றி |
| கன்னி | –மருத்துவம், செலவு |
| துலாம் | –விடுமுறை, வெற்றி |
| விருச்சிகம் | –நஷ்டம், கவலை |
| தனுசு | –வெற்றி, மேம்பாடு |
| மகரம் | –விரக்தி, வேதனை |
| கும்பம் | –கடின உழைப்பு, |
| மீனம் | –சுபம்,மங்களம் |

இன்று போதயன அமாவாசை கரிநாள் சுபம் விலக்கு விசாகம் நட்சத்திம் முருகப் பெருமானை வழிபடல் நன்று
சூரியன் சந்திரன் கிரகங்களின் ஆதிக்க நாளின்று

அதிர்ஷ்ட எண்கள்: 1,5,7,3
பொருந்தா எண்: 2,9,8,
அதிர்ஷ்ட வர்ணங்கள்: மஞ்சள், ஊதா

இராமரத்தினம் ஜோதி
(தெஹிவளை ஸ்ரீ விஷ்ணு கோயில்)





# மதுரங்குளியில் சடலம் மீட்பு

(புத்தளம் மேலதிக நிருபர்)

முந்தல் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மதுரங்குளி மல்லம்பிட்டி களப்பு பகுதியில் இனந்தெரியாத நபர் ஒருவரின் சடலமொன்று நேற்று மீட்கப்பட்டுள்ளது. குறித்த களப்பு பகுதியில் சடலம் ஒன்று காணப்படுவதாக மீனவர் ஒருவர் கிராம உத்தியோகத்தர் ஊடக பொலிஸாருக்கு வழங்கிய தகவலின் அடிப்படையில் முந்தல் பொலிஸாரும் பொலிஸ் தடயவியல் பிரிவினரும் சம்பவ இடத்துக்கு விஜயம் செய்து விசாரணைகளை ஆரம்பித்தனர்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் சுமார் 55 வயது மதிக்கத்தக்கவர் எனவும் வெள்ளை நிற சேர்ட் மற்றும் சாரம் அணிந்திருந்த நிலையில் காணப்பட்டதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர். எனினும் சடலமாக மீட்கப்பட்டவர் யார் என்பது தொடர்பில் இதுவரை தகவல் எதுவும் கிடைக்கவில்லை எனவும் பொலிஸார் கூறினர்.

இதேவேளை, முந்தல் பொலிஸ் பிரிவில் 25வயது இளைஞர் மாத்திரமே காணாமல் போனமை தொடர்பில் முறைப்பாடு உள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். எவ்வாறாயினும் 55 வயதுக்கு மேற்பட்டோர், காணாமல் போனவர்கள் தொடர்பில் ஏதும் முறைப்பாடுகள் பதிவாகியுள்ளனவா என்பது பற்றி உடப்பு மற்றும் புத்தளம் ஆகிய பொலிஸ் நிலையங்களுக்கும் தகவல்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

சடலத்தை பார்வையிட்ட புத்தளம் மாவட்ட பதில் நீதிவான் எம்.எம்.இக்பால், விசாரணைகளை நிறைவு செய்த பின்னர், சடலத்தை பிரேத பரிசோதனைக்காக புத்தளம் தள வைத்தியசாலைக்கு கொண்டு செல்லுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

சம்பவம் தொடர்பில் முந்தல் பொலிஸ் நிலையத்தின் பதில் பொறுப்பதிகாரி ஏ.டபிள்யூ. மௌசின் தலைமையிலான பொலிஸ் குழுவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# எதிர்க்கட்சிக்கு 'சீன மேனியா' நோய் தொற்றியுள்ளது

## அமைச்சர் ரோஹித சபையில் தெரிவிப்பு

(ஆர்.யசி, எம்.ஆர்.எம்.வசீம்)

சீனாவுடன் நாம் வர்த்தக உறவை முன்னெடுப்பதில் தவறேதும் இல்லை. எமது அபிவிருத்தி வேலைத்திட்டங்களில் நிலத்தையோ வளத்தையோ எவருக்கும் விற்கப்போவதில்லை.ஆனால் எதிர்க்கட்சியினருக்கு இன்று சீன மேனியா நோய் தொற்றியுள்ளது என்று அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற துறைமுகங்கள் அமைச்சு மற்றும் நீர் வழங்கல் அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடுகள் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றிய போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்,

கொழும்பு துறைமுக கிழக்கு முனைய பணிகளை இந்த ஆண்டு இறுதிக்குள் முடிவுக்கு கொண்டுவந்து அடுத்த ஆண்டில் கட்டம் கட்டமாக அதன் பணிகளை ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேற்கு முனையத்தை அதானி நிறுவனத்துடன் இணைந்து அபிவிருத்தி செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது. 2024 ஆம் ஆண்டில் தெற்கு மற்றும் மேற்கு முனையங்களை எமக்கான துறைமுக முனையங்களாக மாற்றுவோம்.

எதிர்க்கட்சியினருக்கு சீன மேனியா நோய் உள்ளது, நாம் சீனாவுடன் வியாபார வர்த்தக உறவை மேற்கொள்ளக்கூடாதா, அதில் என்ன தவறு உள்ளதென தெரிவிக்க வேண்டும். நாம் நிலத்தையோ வளத்தையோ எவருக்கும் விற்கவில்லை. நாட்டின் அபிவிருத்திக்காக இவற்றை பயன்படுத்திக்கொள்ளவே முயற்சிக்கின்றோம்.

கொழும்பு துறைமுகத்தை மட்டுமல்ல, காலி துறைமுகம், திருகோணமலை இயற்கை துறைமுகம் ஆகியவற்றையும் அபிவிருத்தி செய்யவுள்ளோம். சுற்றுலாத்துறையை கவரும் மிகவும் முக்கிய துறைமுகமாக காலி துறைமுகத்தை முழுமையாக புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்படும். கொரியாவுடன் இது குறித்து கலந்துரையாடி வருகின்றோம். திருகோணமலை துறைமுகத்தையும் வர்த்தக துறைமுகமாக மாற்றியமைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.




## இன்றைய சிந்தனை

**அருளல்ல தியாதெனிற் கொல்லாமை கோறல்**

**பொருளல்ல தவ்வூன் தினல்**

(திருக்குறள்)

**அருள் எது என்றால் ஓர் உயிரையும் கொல்லாமலிருத்தல் அருளல்லாது எது என்றால் உயிர்களைக்கொல்லுதல் அதன் உடம்பைத் தின்னுதல் அறம் அல்லாதது.**

VIRAKESARI
வீரகேசரி
2021 டிசம்பர் 3ஆம் திகதி வெள்ளிக்கிழமை
எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் (சிலோன்) (பிரைவேட்) லிமிட்டெட்,
267, ராஜ மாவத்தை, ஏக்கல, ஜா–எல. Tel. : 011 7322750, 011 7322751,
011 7322754, 011 7322755, 0117322736
Fax : 011 7322752 Web Site : www.virakesari.lk
E-mail : editordaily@virakesari.lk, kesari25@virakesari.lk
News On-line : onlinenews@virakesari.lk Advertisment : advertising@virakesari.lk
Circulation : circulation@virakesari.lk

# பொறுப்புடன் செயற்படவேண்டிய அவதான காலப்பகுதி

தென்னாபிரிக்காவில் முதலில் கண்டுபிடிக்கப்பட்ட கொரோனா வைரஸ் தொற்றின் புதிய திரிபான ஒமிக்ரோன் திரிபு தொடர்பாக பல உலக நாடுகளும் விழிப்புணர்வுடன் இருப்பதுடன் அவதானம் செலுத்தி வருகின்றன. எனினும் தற்போதைய சூழலில் 24 நாடுகளில் இந்த வைரஸ் தொற்று பரவியிருக்கின்றது. கனடா, அமெரிக்கா, நெதர்லாந்து உள்ளிட்ட பல நாடுகளில் இந்த புதிய திரிபு அடையாளம் காணப்பட்டு இருக்கின்றது. எனவே இலங்கையிலும் இந்த வைரஸ் பரவி இருக்குமா என்பதை இதுவரை உறுதியாக கூறமுடியாது என்றும் எனினும் அதனை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் . சுகாதாரத்துறையினால் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. ஜப்பானைப் பொறுத்தவரையில் சர்வதேச விமான நிலையத்தை முழுமையாக மூடி இருக்கின்றது.

எந்த ஒரு நாட்டிலிருந்தும் அந்த நாட்டுக்கு தற்காலிகமாக பயணம் செய்ய முடியாது. அதேபோன்று வேறு பல நாடுகளும் பகுதி அளவில், முழு அளவில் என நாட்டை மூடியிருக்கின்றன. அதாவது வெளிநாடுகளிலிருந்து யாரும் நாட்டுக்குள் வர முடியாத அளவுக்கு தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கின்றது. இலங்கையும் 6 ஆபிரிக்க நாடுகளின் பயணிகள் இலங்கை வருவதற்கு தடை விதித்திருக்கிறது. இந்தநிலையில் எந்த வகையிலும் இலங்கைக்குள் இந்த வைரஸ் தொற்று பரவுவதற்கு இடமளிக்கக் கூடாது என்பதை சகல தரப்பினரும் வலியுறுத்தி வருகின்றனர். இந்த விடயத்தில் சுகாதார தரப்பினரும் தொடர்ச்சியாக கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர். சுகாதாரத்துறை நிபுணர்கள் இது தொடர்பாக சரியான நடவடிக்கைகள் எடுத்திருப்பதாக கூறி வருகின்றனர். எனினும் இந்த வைரஸ் தொற்று இலங்கைக்குள் வருவதை கட்டுப்படுத்துவது சிரமம் என்றும் ஏற்கனவே வந்துவிட்டதா என்பது தொடர்பாக ஆராய்ந்து பார்க்க வேண்டியிருப்பதாகவும் சுகாதார தரப்பினரால் தெரிவிக்கப்பட்டு வருவதைக் காணமுடிகின்றது.

இதேவேளை ஒமிக்ரோன் அச்சுறுத்தல், தற்போதைய சுகாதார மற்றும் வைரஸ் பரவல் நிலை குறித்து கருத்து வெளியிட்டுள்ள வைரஸ் நோய் தொடர்பான விசேட வைத்திய நிபுணர் நதீன ஜானக தென் ஆபிரிக்காவில் இனங்காணப்பட்ட 'ஒமிக்ரோன்' பிறழ்வு டெல்டாவை விட வேகமாகப் பரவக்கூடியதா என்பது தொடர்பில் ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அத்தோடு இந்த பிறழ்வு தடுப்பூசிகளால் கிடைக்கப்பெற்றுள்ள பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக அமையுமா என்ற காரணியும் ஆய்வு மட்டத்திலேயே உள்ளதாக தெரிவித்துள்ளார்.

தென் ஆபிரிக்காவில் பெற்றுக் கொள்ளப்பட்ட மாதிரிகளில் பாரிய மாற்றங்கள் இனங்காணப்பட்டமையால் அவற்றை உலக சுகாதார ஸ்தாபனத்திற்கு அனுப்பி வைத்துள்ளனர். உலக சுகாதார ஸ்தாபனத்தினால் அவை பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு அபாயமுடையவையாக அறிவிக்கப்பட்டன. தடுப்பூசிகளால் பெற்றுக் கொண்ட பாதுகாப்பு இந்த பிறழ்வின் மூலம் இல்லாமலாக்கப்படுமா என்பது தொடர்பான ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதே போன்று இது டெல்டாவை விட ஆபத்தானதா மற்றும் அதனை விட வேகமாகப் பரவக் கூடியதா என்ற காரணிகளும் இன்னும் ஆய்வு மட்டத்திலேயே உள்ளன. இலங்கைக்குள் 'ஒமிக்ரோன்' பரவியுள்ளதா என்பதை இலகுவாகக் கண்டறிய முடியும். எழுமாறாக பெற்றுக் கொள்ளப்பட்ட மாதிரிகள் ஆய்வு கூடங்களில் ஆய்விற்கு உட்படுத்தப்படும் போது அதனைக் கண்டறிய முடியும். ஒமிக்ரோன் மாத்திரமல்ல. எந்த வைரஸ் பரவினாலும் சுகாதார விதிமுறைகளை கடைப்பிடிக்க வேண்டியது அத்தியாவசியமானதாகும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அந்தவகையில் எந்த ஒரு வகையிலும் ஒமிக்ரோன் என்ற இந்த புதிய திரிபு நாட்டுக்குள் வராமல் இருப்பதை உறுதி செய்வதற்கு சகலரும் நடவடிக்கை எடுக்க வேண்டும். குறிப்பாக சுகாதார தரப்பினர், பாதுகாப்பு தரப்பினர் அரசாங்கம் மற்றும் ஏனைய நிறுவனங்கள், அமைப்புகள், பிரஜைகள் என சகல தரப்பினரும் இந்த விடயத்தில் மிகவும் கவனத்துடன் செயல்படவேண்டும். ஏற்கனவே இந்த தொற்று வந்திருக்குமா என்பது சந்தேகத்துக்கு உரியதாக இருக்கின்றது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. ஏதோ ஒரு வழியில் இந்த தொற்று வந்திருக்குமாயின் அதிலிருந்து நாம் தப்பித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். எனவே உடனடியாகவே சகல தரப்பினரும் பொறுப்புடன் சரியான முறையில் சுகாதார வழிகாட்டுதலை பின்பற்றி நடக்கவேண்டும். சுகாதார வழிகாட்டிகளை சரியான முறையில் பின்பற்றும் பட்சத்தில் நிச்சயமாக இந்த வைரஸ் நாட்டுக்குள் வந்திருந்தாலும் கூட அதனை பரவ விடாமல் தடுக்க முடியும். இது விஞ்ஞான ரீதியாக உறுதி செய்யப்பட்டிருக்கின்றது.

எனவே இந்த விடயத்தில் சகலரும் பொறுப்புடன் செயல்பட வேண்டும். சுகாதார விதிமுறைகளை சரியான முறையில் பின்பற்ற வேண்டும். சுகாதார பணிப்பாளர் நாயகத்தினால் புதிய வழிகாட்டல்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன. டிசம்பர் மாதம் 15 ஆம் திகதி வரை வழிகாட்டிகள் வெளியிடப்பட்டிருக்கின்றன. அவற்றை சரியான முறையில் பின்பற்ற வேண்டும். டிசம்பர் மாதம் 15ஆம் திகதியிலிருந்து ஜனவரி மாதம் வரை நாட்டில் புத்தாண்டு களைகட்டும் நிலை உள்ளது. ஆனால் தற்போது நாம் ஒரு மிக அபாயகரமான வைரஸ் தொற்றுக்குள் இருக்கின்றோம். எனவே அதில் மிகவும் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும் என்பதை சகலரும் உணர்ந்து செயல்படுவது மிக முக்கியமாகும்.

புத்தாண்டு காலத்தில் அல்லது கிறிஸ்மஸ் காலத்தில் கட்டுப்பாடின்றி பொறுப்புணர்வு இன்றி சுகாதார விதிமுறைகளை புறக்கணித்து செயற்படும் பட்சத்தில் நிச்சயமாக மற்றும் ஒரு தொற்று அலை பரவல் ஏற்பட்டால் நாடு மோசமான நிலைக்கு தள்ளப்படும். மற்றுமொரு முடக்கத்தை எதிர்கொள்ள முடியாது என்பதை சகலரும் புரிந்து கொள்ள வேண்டும்.

அதனால் சகலரும் சுகாதார விதிமுறைகளை பின்பற்ற வேண்டும். தேவைற்ற ஒன்று கூடல்கள் தேவையற்ற பயணங்களைத் தவிர்க்க வேண்டும். சரியான முறையில் முகக்கவசங்கள் அணிந்து சமூக இடைவெளியை பேணி கைகளை அடிக்கடி கழுவ வேண்டும். சுகாதார வழிகாட்டலை, சுகாதார நெறிமுறைகளை சரியான முறையில் பின்பற்றுவதற்கு சகலரும் நடவடிக்கை எடுப்பது முககியமாகும். முதலில் எக்காரணம் கொண்டும் ஒமிக்ரோன் என்ற வைரஸ் இலங்கைக்கு வருவதற்கு இடமளிக்கக்கூடாது. அவ்வாறு ஒருவேளை எமக்கு தெரியாமல் இந்த திரிபு நாட்டுக்குள் வந்திருக்கும் என கருதினால் அதை பரவ விடாமல் தடுப்பது சகலரதும் பொறுப்பாகும்.

காரணம் இந்த வைரஸ் நாட்டுக்குள் வந்திருக்காது என்பதை உறுதியாக கூறமுடியாது என்று சுகாதார தரப்பினர் தெரிவிக்கின்றனர். அதனால் சக்கரம் சுகாதார வழிமுறைகளை உரிய முறையில் பின்பற்றி நடந்து கொள்வதே இதற்கு இருக்கின்ற ஒரே தீர்வாக இருக்கிறது என்பதை புரிந்து கொள்வது அவசியமாகும். தற்போது மூன்றாவது தடுப்பூசியை ஏற்றும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அவற்றை சரியான முறையில் மக்கள் பொறுப்புடன் பெற்றுக்கொள்வது அவசியமாகும். எனவே சகலரும் சமூகப் பொறுப்புடன் சமூக அக்கறையுடன் செயற்பட்டு இதனை முறியடிப்பதற்கு முன்வர வேண்டும் என்பதனை வலியுறுத்துகின்றோம்.

# உரிமையை அனுபவிக்க பொறுமையை காக்கும் இயலாமையுள்ள மக்கள்



**'உட்படுத்தத்தக்க, அனுகத்தக்க மற்றும் நிலைத்த, கொவிட்19 க்கு பின்னரான, உலகை நோக்கி இயலாமையுள்ள நபர்களின் தலைமைத்துவமும் பங்கேற்பும்'**

மேற்காட்டப்பட்டுள்ள வாசகமே ஐக்கிய நாடுகள் சபையினால் விதந்துரைக்கப்பட்டுள்ள இவ்வாண்டிற்கான 'சர்வதேச இயலாமையுள்ள மக்கள் தினம்' தொடர்பான கருப்பொருளாகும்.

இயலாமையுள்ள மக்கள் உலகின் பொருத்தமான எல்லா விடயங்களிலும் உட்படுத்தப்படுதல் வேண்டும். உலகின் பொருத்தமான விடயங்கள் யாவும் அவர்களுக்கு அணுகத்தக்கதாக இருத்தல் வேண்டும். அவை நிலைத்த தன்மை உடையனவாக இருத்தல் வேண்டும். கொவிட்19 க்கு பின்னராக இயலாமையுள்ள மக்களின் தலைமைத்துவம் மற்றும் பங்கேற்புடன் அவர்களால் எதிர்பார்க்கப்படும் உலகு இதுவே என்பது இதன் உட்கிடக்கையாகும். வேறு விதமாகக் கூறின், இதன் கருத்து இயலாமையுள்ள மக்களும் ஏனைய மக்களைப்போலவே சகல உரிமைகளையும் அனுபவிக்கும் பிரஜைகளாக இருக்கும்வண்ணம் உலகு மாற வேண்டும் என்பதாகும். இதன் மூலம் அனைத்து மனித உரிமைகளும் இயலாமையுள்ள மக்களுக்கும் பொதுவானவை என்பது ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபை 1976 ஆம் ஆண்டு 1981 ஆம் ஆண்டை 'சர்வதேச இயலாமையுள்ள மக்கள் ஆண்டு' ஆக (International Year for People with Disability) பிரகடனப்படுத்தியது உங்களில் பலருக்கு நினைவிருக்கலாம். எனினும் அவ்வாண்டிற்குள் உலக நாடுகள் திட்டமிட்ட இலக்குகளை அடையத் தவறியமை அவதானிக்கப்பட்டமையினால், அதற்கென 1983—1992 வரையிலான மேலும் பத்து ஆண்டுகளை 'சர்வதேச இயலாமையுள்ள மக்களுக்கான பத்தாண்டுகள்' (International Decades for People with Disability) என பிரகடனப்படுத்தியது. 1992 ஆம் ஆண்டின் நிறைவில் பொதுச் சபை தனது 47/3 தீர்மானத்தின் மூலம் ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 3 ஆம் திகதியை 'சர்வதேச இயலாமையுள்ள மக்கள் தினம்' (International Day for People with Disability)என பிரகடனப்படுத்தியது. அந்த வகையில் இவ்வாண்டு டிசம்பர் 3 ஆம் திகதி 2021 ஆம் ஆண்டிற்கான 'சர்வதேச இயலாமையுள்ள மக்கள் தினம்' ஆகிறது.

இயலாமையுள்ள மக்களின் உரிமைகளை பாதுகாக்கவும், முன்னேற்றுவிப்பதற்குமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள இந்த தினத்தில், இலங்கையில் இவர்களது உரிமைகள் எந்தளவு பாதுகாக்கப்பட்டுள்ளன. எந்தளவு முன்னேற்றுவிக்கப்பட்டுள்ளது என ஒரு சுருக்க மீள்பார்வை செய்தல் பொருத்தமானது. இக்கட்டுரையின் மூல நோக்கமும் அதுவே.

1996 ஆம் ஆண்டு 28 ஆம் இலக்க இயலாமையுள்ள மக்களின் உரிமைகள் பாதுகாப்பு சட்டம் இலங்கை பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டது. இயலாமையுள்ள மக்கள் உரிமைகள் தொடர்பாக இலங்கையில் கொண்டுவரப்பட்ட முதலாவது சட்டம் இதுவாகும். எனினும் கல்வி உரிமை, தொழில்வாய்ப்பு உரிமை, பொது இடங்களில் அணுகும் வசதி உரிமை ஆகிய மூன்றே மூன்று உரிமைகள் மட்டுமே இச்சட்டத்தில் உறுதியளிக்கப்பட்டிருந்தமை இச்சட்டத்தின் மிகப் பெரிய குறைபாடாக இருந்தமையினால், இச்சட்டத்தினை முற்றும் முழுதாக திருத்தல் வேண்டும் அல்லது புதிய உரிமைகள் சட்டம் கொண்டுவரப்படல் வேண்டும் என்ற கோசம் 2004 ஆம் ஆண்டிலிருந்தே இயலாமையுள்ள மக்களாலும்

**'சர்வதேச இயலாமையுள்ள மக்கள் தினம்' இன்று**

அவர்களது ஆர்வலர்களாலும் முன்வைக்கப்பட்டு வந்தது. இதனிடையே, ஐக்கிய நாடுகள் சபையின் 2007 ஆம் ஆண்டு 'இயலாமையுள்ள மக்களின் உரிமைகள் சாசனம்' (United Nations Convention on Rights of Persons with Disability UNCRPD) கொண்டுவந்து நிறைவேற்றப்பட்டபோது, அதில் அவ்வாண்டிலேயே கையெழுத்திட்ட நாடுகளில் இலங்கையும்ஒன்றாக இருந்தது. ஒரு நாடு ஒரு சாசனத்தில் கையெழுத்திடல் மட்டும் போதுமானதல்ல; அதனை அதன் பாராளுமன்றம் ஒப்புறுதி (ratify) செய்தல் வேண்டும் என்பது ஐக்கிய நாடுகளின் ஒரு நியதி. ஆனால் துரதிஷ்டவசமாக சாசனத்தை ஏற்றுக்கொள்வதில் இலங்கை காட்டிய முனைப்பை அதனை ஒப்புறுதி செய்வதில் காட்டவேயில்லை. இதனால் சாசனத்தில் விதந்துரைக்கப்பட்டிருந்த உரிமைகள் எதனையும் இலங்கை இயலாமையுள்ள பிரஜைகள் அனுபவிக்கும் வாய்ப்புக் கிட்டவேயில்லை. இதனையடுத்து அவர்களது போராட்டம் சாசனத்தை ஒப்புறுதி செய்வதன்பால் திசை திரும்பியது. ஏராளமான, தாராளமான பல்வகைமைப்பட்ட அழுத்தங்களின் பின்னரே எமது பாராளுமன்றம் 2016 ஆம் ஆண்டு, அதாவது 9 ஆண்டுகளின் பின்னரே சாசனத்தை ஒப்புறுதி செய்தது.

எனினும் சாசனத்தில் முன்மொழியப்பட்டுள்ள அனைத்து உரிமைகளையும் அனுபவிக்க 25 ஆண்டுகள் பழைமையான, இற்றைப்படுத்தப்படாத 1996, 28 ஆம் இலக்க இயலாமையுள்ள மக்களின் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் போதுமானதல்ல என்ற உண்மை, போராட்டத்தை மீண்டும் புதிய உரிமைகள் சட்டத்தின்பாற் திருப்பியது. இதனிடையே புதிய சட்டத்தைக் கொண்டுவருவதற்கு இலங்கை வெளிவிவகார அமைச்சினூடாக ஐக்கிய நாடுகள் சபையினது அழுத்தமும் அதிகரிக்கத் தொடங்கியது.

சட்டத்தை நிறைவேற்றுவதற்கு சமூக சேவைகள் அமைச்சு தன்னாலான சகல முயற்சிகளையும் எடுத்தது. அவை எவையும் இற்றைவரை பலனளிக்கவில்லை. ஏன்?

அடிக்கடி அமைச்சர்களினதும், அமைச்சு செயலாளர்களினதும், இயலாமையுள்ள மக்களுக்கான தேசிய செயலகத்தின் (National Secretariat for Persons with Disability NSPD) பணிப்பாளர்களினதும், விடயத்துடன் தொடர்புடைய ஏனைய அரச அதிகாரிகளினதும் இட மாற்றங்களே இத்தாமதத்திற்கு பிரதான காரணமாயிற்று. இதனால் இயலாமையுள்ள மக்களுக்கான தேசிய சபை (National Council for Persons with Disability NCPD) அங்கத்தவர்கள் புதிய அமைச்சர்களுக்கும், அதிகாரிகளுக்கும் ஒவ்வொரு தடவையும் சட்ட மூலம்பற்றி திரும்பத் திரும்ப முதலிலிருந்து விளக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. ஒவ்வொரு அமைச்சரும் சட்ட மசோதா வரைபுக்கு ஓர் உப குழுவை நியமனம் செய்வதும், அவை பல்வேறு கலந்துரையாடல்களை நடத்துவதும், ஒவ்வொரு வரைபை சமர்ப்பிப்பதும்வாடிக்கையாயின. சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்ட வரைபுகளும் அத்திணைக்களத்தின் பரிந்துரைகளுடன் மீள வருவதும், அவை சேர்க்கப்பட்டு அல்லது மறுக்கப்பட்டு மீள அனுப்பப்படுவதும் தொடர்கதையாகவே இருந்தன. அளவுக்கதிகமான வேலைப்பளு காரணமாக, சட்ட வரைஞர் திணைக்களத்திற்கும் நாட்டின் ஏனைய அவசர சட்ட வரை

**வெ. சுப்பிரமணியம்**

புகளுக்கு முன்னுரிமை கொடுக்குமளவுக்கு இந்த சட்ட வரைபுக்கு கொடுக்க முடியாமல் இருந்தமையும் மறுக்க முடியாத உண்மை. மறுபுறத்தில் சட்டத்தில் எவற்றை உள்ளடக்குவது, எவற்றை உள்ளடக்கக் கூடாது என்பது சார்ந்த எண்ணக்கரு மோதல் அரச தரப்பினர் மற்றும் இயலாமையுள்ள மக்கள் தரப்பினருக்கிடையியே இருந்த அதே வேளை, இயலாமையுள்ள மக்களின் அமைப்புக்களும் சட்ட மசோதாவில் இடம் பெற வேண்டிய சில விடயங்களில் கருத்து முரண்பாடுகள்கொண்டு தமக்கிடையே முட்டி மோதிக்கொண்டமையும் சட்ட வரைபை பல வழிகளிலும் தாமதப்படுத்தியது.

இங்நிலையில் நாட்டில் பரவிய கொரோனா தொற்று ஏனைய துறைகளைப்போலவே இந்த சட்டமூல தயாரிப்பிலும் கடும் கால தாமதத்தை ஏற்படுத்தியுள்ளமை பனையால் விழுந்தவனை மாடு மிதித்த கதையாக்கியுள்ளது. எது எவ்வாறு இருப்பினும், சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரும் இந்த சட்டத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து, அதன் நிறைவேற்றத்திற்கு முன்னுரிமை கொடுக்காதுவிடின், புதிய உரிமைகள் சட்டம் பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்படுவதும், ஐக்கிய நாடுகள் சபையின் இயலாமையுள்ள மக்களின் உரிமைகள் சாசனத்தில் விதந்துரைக்கப்பட்டுள்ள உரிமைகளை இலங்கையின் இயலாமையுள்ள பிரஜைகள் அனுபவிப்பதுவும் இன்னும் நீண்ட காலத்திற்கு ஒரு பகற்கனவாகத்தான் இருக்கும்போல்தோன்றுகின்றது.

## திருவருகை காலம்



திருமுழுக்கு யோவான், 'பாவமன்னிப்பு அடைய மனம் மாறித் திருமுழுக்குப் பெறுங்கள்' என்று யோர்தான் ஆற்றை அடுத்துள்ள பகுதிகள் அனைத்துக்கும் சென்று பறைசாற்றிவந்தார்" (லூக்கா 3:3)நற்செய்தி நூல்களில் திருமுழுக்கு யோவானுக்கு ஒரு சிறப்பிடம் உண்டு. அவர் இயேசுவின் வருகையை முன்னறிவித்தவர். பழைய ஏற்பாட்டுக்கும் புதிய ஏற்பாட்டுக்கும் பாலம் போல அமைந்தவர்.

யோவான் அறிவித்த செய்தியில் "மன மாற்றம்" முக்கியமானது. இங்கே மனம் எனக் குறிக்கப்படுவது மனிதரின் முழுமையையும் குறிக்கும். நம் உள்ளத்தில் உண்மையான மாற்றம் ஏற்படும்போது அந்த மாற்றம் நம் சொல்லிலும் செயலிலும் உறவிலும் நடத்தையிலும் வெளிப்படும் என்பது தெளிவு. எனவேதான் மக்கள் மனம் மாற வேண்டும் என்று கேட்ட யோவான் மக்கள் தங்கள் வாழ்க்கைப் பாணியை வேரோட்டமாக மாற்றி அமைத்திட வேண்டும் என அறிவித்தார்.ஆக, கடவுளுக்கு நமது உள்ளத்தைத் திறந்து கொடுக்க வேண்டும் என்றால் அந்த உள்ளத்தில் முதலில் ஒரு மாற்றம் நிகழ வேண்டும். நமது என்னும் போக்கு இருக்கும் வரை அங்கே கடவுளுக்கு இடம் இராது. ஆனால் பிறரை அன்புசெய்து, அவர்களையும் நம்மையும் மன்னித்து ஏற்கின்ற கடவுளையும் அன்புசெய்து வாழக் கற்றுக்கொண்டால் நம்மில் ஏற்படுகின்ற மாற்றம் உண்மையிலேயே கடவுளுக்கு உகந்த மாற்றமாக இருக்கும். அப்போது நம் வாழ்வில் விடுதலையும் மீட்பும் கிடைக்கும்.

ஏ.அபி

## சிரேஷ்ட ஊடகவியலாளர் பி.மாணிக்கவாசகம் எழுதிய மாற்றத்தை நாடும் மாற்றுத்திறனாளிகள் நூல் வெளியீடு



சிரேஷ்ட ஊடகவியலாளர் பி.மாணிக்கவாசகம் எழுதிய மாற்றத்தை நாடும் மாற்றுத்திறனாளிகள் நூல் வெளியீட்டு விழா சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினமான இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு மன்னார் நகரசபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இயலாமைக்குள் இயலுமையைக் கொண்ட மாற்றுத்திறனாளிகளின் வாழ்வியலையும் சமூக நிலைமைகளையும் இந்த நூல் சித்தரிக்கின்றது. நூல்; வெளியீட்டு விழா வீகேன் மாந்தை மேற்கு மாற்றுத்திறனாளிகள் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளரும் எழுத்தாளருமாகிய வெற்றிச்செல்வியின் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக மன்னார் மாவட்ட விவசாயப் பணிப்பாளர் திருமதி அ.சகிலா பானு கலந்துகொள்வார். இயலாமையுடைய மக்களின் உரிமைகளும் இலங்கையில் அதன் நிலைமைகளும் என்ற தலைப்பில் இயலாமையுள்ள மக்களுக்கான தேசிய சபையின் உறுப்பினர் வெ.சுப்பிரமணியம் கருத்துரை வழங்குவார்.

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் டெக. அரவிந்தராஜ் நூலை வெளியிட்டு வைப்பார். எங்கட புத்தகங்கள் அமைப்பின் நிறுவனர் குலசிங்கம் வசீகரன் முதற் பிரதியைப் பெற்றுக்கொள்வார். நானாட்டான் பிரதேச செயலாளர் மா.சிறிஸ்கந்தகுமார் மதிப்புரையாற்றுவார்.

நிகழ்வில் கலாநிதி நா.செந்தூர்ச்செல்வனின் வரவேற்பு நடனம் இடம்பெறும். முதன்மை விருந்தினரின் உரையையடுத்து, நூலாசிரியர் பி.மாணிக்கவாசகத்தின் ஏற்புரையும் நன்றியுரையும் இடம்பெறும். இந்த நூல் வெளியீட்டு விழாவின் நிகழ்ச்சிகளை கவிஞர் மன்னார் பெனில் தொகுத்தளிப்பார். இறுதி அம்சமாக பூவன் இசைமைந்தர்களின் இசைப்பொழிவு இடம்பெறும் என்பது குறிப்பிடத்தக்கது.

## பொன் மொழி

ஒருவர் உன்னைத் உயர்த்திப் பேசும் போது விழிப்போடு இரு.

ஒருவர் உன்னைத் தாழ்த்தி பேசும் போது ஊமையாய் இரு.

புகழ்ந்து பேசும் போது செவிடனாய் இரு.

எளிதில் வெற்றி பெறலாம்.

விட்டுக் கொடுங்கள்; விருப்பங்கள் நிறைவேறும்

தட்டிக் கொடுங்கள்; தவறுகள் குறையும்.

மனம் விட்டுப் பேசுங்கள் – அன்பு பெருகும்.

– கவிஞர் கண்ணதாசன்

# எரிவாயு சிலிண்டர்கள் வெடிப்பு விவகாரம் மாதிரிகள் இந்தியாவுக்கு அனுப்பி வைப்பு

(இராஜதுரை ஹஷான்)

சமையல் எரிவாயு சிலிண்டருடனான வெடிப்புச் சம்பவங்களினால் நுகர்வோர் அச்சம் கொண்டுள்ளமை நியாயமானது என்பதை ஏற்றுக் கொள்கிறோம்.தற்போதைய பிரச்சினைக்கு அறிவியல் பூர்வமாக தீர்வு காண்பது அவசியமாகும்.எரிவாயு சிலிண்டருடன் பொருத்தப்பட்டுள்ள உபகரணங்களில் காணப்பட்ட பிரச்சினை தற்போது சிலிண்டர் பிரச்சினையாகி விட்டது. இறக்குமதி செய்யப்படும் எரிவாயு மாதிரிகளை இந்தியாவில் உள்ள ஆய்வு கூடத்துக்கு பரிசோதனை நடவடிக்கைகளுக்காக அனுப்பி வைத்துள்ளோம். மூன்றாம் தரப்பினரிடமிருந்து அறிக்கை பெறுவது அவசியமாகும் என லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் தெஸார ஜயசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

எரிவாயு சிலிண்டருடன் பொருத்தப்பட்டுள்ள உபகரணங்களில் காணப்படும் பிரச்சினை தற்போது சிலிண்டரின் பிரச்சினை என்ற அளவுக்கு நிலைமை எல்லை கடந்துள்ளது.கடந்த காலங்களிலும் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்றன.ஆனால் அப்போது இந்தளவுக்கு கவனம் செலுத்தப்படவில்லை.தற்போது அதிகம் கவனம் செலுத்தப்படுவது நன்மையானதேயாகும்.

எரிவாயு சிலிண்டரின் கலவையில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளதா என பல்வேறு தரப்பினர் தங்களின் தனிப்பட்ட கருத்துக்களை முன்வைத்துள்ளார்கள்.கடந்த மூன்று மாத காலமாக இறக்குமதி செய்யப்பட்ட எரிவாயுக்களின் தரம் தொடர்பான அறிக்கைகளை நேற்று முன்தினம் பாராளுமன்றில் இடம்பெற்ற வர்த்தக அமைச்சுசார் ஆலோசனை குழுக் கூட்டத்தில் சமர்ப்பித்துள்ளேன்.இரண்டு வருட கால ஒப்பந்தத்துக்கமைய வெளிநாட்டு நிறுவனத்திடமிருந்து எரிவாயுக்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன. எரிவாயுவில் புரோப்பேன் 60 சதவீதம் தொடக்கம் 75 சதவீதம் வரையிலும்,பியுடென் 25 சதவீதம் தொடக்கம் 45 சதவீத அளவு கட்டமைப்பில் உள்ளடக்கப்பட வேண்டும் என சர்வதேச தொழில்நுட்ப குழு சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கைக்கு கொண்டு வர தீர்மானிக்கப்பட்ட எரிவாயு கப்பலுக்கு ஏற்றுவதற்கு முன்னரும் நாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட்டதன் பின்னரும் முறையான ஆய்வு நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படுகிறது.லிட்ரோ நிறுவன தலைவராக நான் கடந்த ஜூன் மாதம் 26ஆம் திகதி நியமிக்கப்பட்டேன்.அதன் பின்னர் எரிவாயு கலவையில் எவ்வித மாற்றமும் ஏற்படுத்தப்படவில்லை என நூற்றுக்கு நூறு சதவீதம் உறுதியாக குறிப்பிட முடியும்.

கடந்த ஏப்ரல் மாதம் சந்தைக்கு விநியோகிக்கப்பட்ட சமையல் 18 லீற்றர் அடங்கிய

## லிட்ரோ நிறுவனம்

9.5 கிலோகிராம் நிறையுடைய எரிவாயு சிலிண்டர் லிட்ரோ ரக எரிவாயு உற்பத்திகள் சர்ச்சைக்குள்ளாகுவதற்கு பிரதான காரணியாக அமைந்துள்ளது.18 லீட்டர் எரிவாயு சிலிண்டரின் நிறை குறைக்கப்பட்டது. ஆனால் விலை குறைக்கப்படவில்லை. அதற்கு நுகர்வோர் அதிகார சபையினர் சட்டநடவடிக்கைகளை முன்னெடுத்ததைத் தொடர்ந்து சந்தைக்கு விநியோகிக்கப்பட்ட சிலிண்டர்கள் அனைத்தும் மீளப் பெற்றுக் கொள்ளப்பட்டன.

சமையல் எரிவாயு சிலிண்டருடனான வெடிப்புச் சம்பவங்களினால் நுகர்வோர் அச்சம் கொண்டுள்ளமை நியாயமானது என்பதை ஏற்றுக் கொள்கிறோம்.தற்போதைய பிரச்சினைக்கு அறிவியல் பூர்வமாக தீர்வு காண்பது அவசியமாகும்.எரிவாயு சிலிண்டருடன் பொருத்தப்பட்டுள்ள உபகரணங்களில் காணப்பட்ட பிரச்சினை தற்போது சிலிண்டர் பிரச்சினையாகி விட்டது.இறக்குமதி செய்யப்படும் எரிவாயு மாதிரிகளை இந்தியாவில் உள்ள ஆய்வு கூடத்துக்கு பரிசோதனை நடவடிக்கைகளுக்காக அனுப்பி வைத்துள்ளோம்.மூன்றாம் தரப்பினரிடமிருந்து அறிக்கை பெறுவது அவசியமாகும் என்றார்.





கொழும்பு கலைமகள் தமிழ் வித்தியாலயத்தில் நடைபெற்ற பூஜை நிகழ்வில் கலந்து கொண்ட புதிய ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் ரவிக்குமார் ஆசிரியர்களுடன் நிற்பதையும் மாணவன் ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# புதுக்குடியிருப்பில் புலிகளின் தங்கத்தை தேடி அகழ்வுப்பணி நேற்று ஆரம்பம்

(கே .குமணன்)

இறுதி யுத்த காலப்பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளினால் புதைத்து வைக்கப்பட்ட தங்கத்தை தோண்டி எடுக்க முயற்சித்ததாக இரண்டு பிரதான அமைச்சுக்களின் செயலாளர்களுக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டுள்ள நிலையில் குறித்த சம்பவம் இடம்பெற்ற இடமான முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேச சுதந்திரபுரம் பகுதியில் புதையலைத் தேடி அகழ்வு நடவடிக்கை நேற்றைய தினம்(02) ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு நீதவான் நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜா முன்னிலையில் இந்த அகழ்வு நடவடிக்கைகள் பொலிஸாரால் நேற்று மாலை (02) ஆரம்பிக்கப்பட்டுள்ளது.முல்லைத்தீவு புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் புதைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படும் தங்கத்தை நீதிமன்றின் உத்தரவுக்கு அமைய தோண்டி எடுப்பதற்கு முன்னதாக அமைச்சுக்களின் செயலாளர்கள் இருவர் இரகசியமாக முயற்சித்துள்ளதாக ஏற்கனவே தகவல்கள் வெளியாகியுள்ள நிலையில் இந்த சம்பவம் தொடர்பில் குற்ற விசாரணைப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். இந்த நிலையிலேயே நேற்று அகழ்வு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

விடுதலைப் புலிகளினால் புதைக்கப்பட்டதாகக் கூறப்படும் தங்கத்தை முல்லைத்தீவு நீதவானின் உத்தரவுக்கு அமைய கடந்த நவம்பர் 25ஆம் திகதி தோண்டி எடுக்கத் திட்டமிடப்பட்டிருந்தது.எனினும், மாவீரர் தின நிகழ்வுகளினால் இந்த நடவடிக்கை நேற்றைய தினம் (02) வரையில் ஒத்திவைக்கப்பட்டது. இந்த நிலையிலேயே ஏற்கனவே நீதிமன்றம் குறிப்பிட்ட திகதியான நேற்று முதல் மேற்படி அகழ்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

குறித்த அகழ்வுப் பணி ஆரம்பித்துவைக்கப்பட்டுள்ள பகுதியில் ஏற்கனவே இரண்டு குழிகள் தோண்டப்பட்டுள்ள நிலையில் காணப்படுகின்றதோடு குறித்த குழிகள் 05 அடிக்கு மேற்பட்ட ஆழம் கொண்ட குழிகளாகவும் காணப்படுவதோடு நீர் நிரம்பிய



நிலையில் காணப்படுகின்றது.

முதற்கட்டமாக குழிகளில் உள்ள நீரைவெளியேற்றும் நடவடிக்கை நேற்றைய தினம் முன்னெடுக்கப்பட்டதோடு தொடர்ந்து இயந்திரங்களை கொண்டு அகழும் நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

அகழ்வு நடவடிக்கை இடம்பெறும் இடத்தில் பொலிஸார் ,விசேட அதிரடிப் படையினர்,இராணுவத்தினர்,புலனாய்வாளர்கள் உள்ளிட்ட தரப்புகள் பிரசன்னமாகியிருந்த நிலையிலேயே பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் அகழ்வு நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

## முதலாவது தேவ நற்கருணை

கிறிஸ்தவர்களின் முதலாவது படியான திவ்லிய தேவநற்கருணையை கொழும்பு, கொச்சிக்கடையில் வசிப்பவரும் அர்ச் பிரிஜட் கொன்வன்ட் மாணவியுமான செல்வி மரிஷரின் அனிஸ்ரின் 27.11.2021 அன்று பெற்றுள்ளார். இவரது வாழ்வு சிறப்புற பெற்றாரும் மாற்றோரும் வாழ்த்துகின்றனர்.




கட்டார் சாரதி வேலைவாய்ப்பு

TOYOTA LEXUS شركة عبد الله عبد الغني وإخوانه ذ.م.م. Abdullah Abdulghani & Bros.Co. W.L.L.

இலவசம்: செல்லவும் திரும்பவும் விமான டிக்கட், மெடிக்கல், ஆயுள் காப்புறுதி, போக்குவரத்து, லொன்டரி, தங்குமிடம், மருத்துவ வசதிகள்

சம்பளம் ரூ 103,550/- + OT (AED 1600 + 300)

செல்லுபடியான அல்லது காலாவதியான கட்டார் சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளவர்கள் டிசம்பர் 05 காலை 8.00 - 5.00 வரை. கொழும்பு சினமன் கிராண்ட் ஹோட்டலில் வெளிநாட்டு முகவர்களால் நேர்முகப்பரீட்சை நடைபெறும்.

மேலதிக விபரங்களுக்கு

070 300 3 300 / 070 777 5 777

சிலோன் எக்ஸ்பர்ட்ஸ் இன்டர்நெஷனல்

47/2/1, அரனாயக்க வீதி, மாவனல்ல. 2752/Advt/12/21



Colombo City Centre

இந்த நத்தாரில் அக்கறையும் அன்பும் நிறைந்த கொண்டாட்டம்



நிகழ்ச்சி

| | | |
|---|---|---|
| CCC க்கு நத்தார் தாத்தாவின் விசேட விஜயம் | 03, 04, 05 | 11.00am - 1.00pm & 5.30pm - 7.00pm |
| நத்தார் திரைப்பட நேரம் | 04, 05 | 1.00pm - 2.00pm |
| குழந்தைகளுக்கான நத்தார் / பேஸ் பெயின்டிங் | 04 | 4.00pm - 5.00pm |
| குழந்தைகளின் விசேட செயற்பாடு | 05 | 4.00pm - 5.00pm |

Colombo City Centre (Pvt) Ltd
No.137, Sir James Pieris Mawatha, Colombo 02.
ColomboCityCentre ColomboCityCentre



வெளிநாடுகளில் சிரமத்துடன் உழைக்கும் வெளிநாட்டு பணத்திற்கு அதிக பெறுமதி




வெளிநாடுகளில் உழைத்த பணத்தினை தாய்நாட்டிற்கு அனுப்பி இலங்கை ரூபாவிற்கு மாற்றும் போது ஒவ்வொரு அமெரிக்க டொலருக்கு அல்லது அதற்கு சமனான பெறுமதியுடைய வேண்டியதொரு வெளிநாட்டு நாணயத்திற்கு மேலதிகமாக ரூ.10 மக்கள் வங்கியால் செலுத்தப்படும்.

உங்களின் வசதிக்காக நாடெங்கிலும் உள்ள எமது 741 கிளைகளிலும் இச்சேவையை நீங்கள் பெற்றுக் கொள்ள முடியும்.

PEOPLE'S Remittance | WesternUnion WU | ria Money Transfer

*டிசெம்பர் 01 தொடக்கம் 31 வரை செல்லுபடியாகும்.

www.peoplesbank.lk | 1961 PEOPLE'S BANK CALL CENTRE

PEOPLE'S BANK
Pride of the Nation

AA- (lka) Fitch Rating, AAA- Brand Finance Rating
People's Bank is a licensed commercial bank supervised by the Central Bank of Sri Lanka

# வடபகுதி கடற்பரப்பில் தொடர்ந்தும் கரையொதுங்கும் இனந்தெரியாத சடலங்கள்

(வடமராட்சி நிருபர்)

வடபகுதி கடற்பரப்பில் அடுத்தடுத்து கரையொதுங்கும் இனந்தெரியாத சடலங்களினால் பொதுமக்கள் மத்தியில் பெரும் அச்ச நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை வடமராட்சி கிழக்கு மணற்காட்டு பகுதியிலும் அன்றைய தினம் வல்வெட்டித்துறை பகுதியிலும் இரண்டு சடலங்கள் கரையொதுங்கின. மறுநாள் ஞாயிற்றுக்கிழமை நெடுந்தீவு பகுதியில் சடலம் ஒன்று கரை ஒதுங்கியது.

அதனைத் தொடர்ந்து வெற்றிலைக்கேணி பகுதியில் செவ்வாய்க்கிழமை சடலம் ஒன்று கரை யொதுங்கியது. இதனை தொடர்ந்து நேற்று வியாழக்கிழமை பிற்பகல் சுப்பர் மடம் கடற்கரையில் இனந்தெரியாத சடலமொன்று கரையொதுங்கியுள்ளது.

ஆறு நாட்களுக்குள் வடபகுதி கடற்பரப்பில் இனம் தெரியாத ஐந்து சடலங்கள் கரையொதுங்கி இருப்பது பொது மக்கள் மத்தியில் பெரும் அச்ச நிலையை ஏற்படுத்தியுள்ளது.

# யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் ஏற்பாட்டில் மௌன தொழிற்சங்கப்போராட்டம்




(எம்.நியூட்டன்)

யாழ்ப்பாண பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்றலில் அடையாள மௌன தொழிற்சங்கப் போராட்டம் நேற்று இடம் பெற்றது.

அனைத்துப் பல்கலைக்கழக தொழிற்சங்க கூட்டுக்குழுவின் தீர்மானத்துக்கமைய நீண்டகாலமாக நிலவிவரும் பல்கலைக்கழக கல்விசாரா பணியாளர்களின் சம்பள முரண்பாடுகள் மற்றும் ஏனைய பிரச்சினைகள் தொடர்பாக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் தலைவருக்கு வழங்கப்பட்ட கடிதத்தின் பிரகாரம் அடையாள மௌன தொழிற்சங்கப் போராட்டம் இலங்கையின் சகல பல்கலைக்கழகங்களிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதனொரு கட்டமாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்றலிலும் நேற்று வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் இந்த போராட்டம் இடம்பெற்றது.

போராட்டத்தில் ஈடுபட்டோர் கல்விசாரா ஊழியர்களின் பிரச்சினைக்கு உடனடியாக தீர்வினை வழங்கு, சம்பள முரண்பாட்டைத் தீர்க்கும் குழுவின் அறிக்கையை உடனடியாக நடைமுறைப்படுத்து போன்ற பல்வேறு வாசகங்கள் எழுதிய பதாகைகளை தாங்கியிருந்தனர்.




வவுனியா பல்கலைக்கழகத்தின் கல்விசாரா ஊழியர்கள் கோரிக்கைகளை முன்வைத்து நேற்று பம்பைமடுவில் அமைந்துள்ள பல்கலைக்கழகத்தின் பிரதான வாயிலில் போராட்டத்தில் ஈடுபட்டபோது...

(ஓமந்தை நிருபர்)

# காணி உரிமையாளர்களின் நிலைப்பாடுகளை அறிந்த பின்னரே அடுத்த கட்ட முடிவு




(எம்.நியூட்டன்)

காணி உரிமையாளர்களின் நிலைப்பாடுகளை அறிந்த பின்னரே முடிவுகளை எடுக்க முடியும் என வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்தார்.

வடமாகாண ஆளுநர் கடற்படைக்கு மாதகல் காணிகளை வழங்குவதாக சில ஊடகங்களில் வெளிவந்த செய்தி தொடர்பில் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர்மேலும் தெரிவிக்கையில்,

மாதகல் காணிகளை கடற்படைக்கு வழங்குவதாக நான் ஒருபோதும் கருத்து தெரிவிக்கவில்லை. மேலும் நான் காணி உரிமையாளர்களுடன் நேற்று முன்தினம் பேசுவதாக வெளியான செய்தி பிழையானது.காணி உரிமையாளர்களுடன் பேசி காணியின் உறுதிகளை சரி பார்த்து, காணி உரிமையாளர்களின் நிலைப்பாடுகளை அறிந்த பின்னரே அடுத்த கட்ட முடிவுகளை எடுக்க முடியும் என்றார்.

இதேவேளை நேற்று காலை மாதகல் மற்றும் தெல்லிப்பழை காணி உரிமையாளர்களில் சிலரை பிரதேச செயலர்களுடன் சந்தித்த ஆளுநர் காணி அவர்களின் பிரச்சினைகள் மற்றும் நடந்த விடயங்களை கேட்டறிந்து கொண்டார்.

மேலும் பிரதேசசெயலர்களிடம் காணி உறுதி மற்றும் காணி வரை படங்களை பெற்றுக் கொடுக்குமாறு அறிவுறுத்தியுள்ளார். இதேவேளை பிரதேச செயலர்களால் காணி வரைபடம் எடுப்பதாயின் காணி கடற்படையினர் வசம் இருப்பதால் தாம் செல்வதற்கு விசேட அனுமதி வேண்டும் என கோரப்பட்டது. இதற்கு ஆளுநர் கடற்படையினருடன் கலந்துரையாடி நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு செய்திகள்

# வவுனியாவில் எரிவாயு அடுப்பு வெடிப்பு



ஓமந்தை,

வவுனியா, வேரகம அரச ஊழியர்களுக்கான வீடமைப்புத் திட்டத்தில் உள்ள வீடொன்றில் நேற்று முன்தினம் இரவு எரிவாயு அடுப்பு வெடித்துள்ளதாக பிரதேச வாசி ஒருவர் தெரிவித்துள்ளார்.

எரிவாயு அடுப்பு வெடித்த வீட்டில் இருந்த இல்லத்தரசி சமையல் செய்துவிட்டு அடுப்பினை நிறுத்தி வைத்ததன் பின்னர் திடீரென தீப்பிடித்து அடுப்பு வெடித்ததாகவும் கூறினார்.

அடுப்பு தீ பற்றி எரியும் போது அயலவரை அழைத்ததாகவும் மேலும் சேதம் ஏற்படாமல் இருக்க காஸ் சிலிண்டரிலிருந்து ரெகுலேட்டரை அகற்றியதாகவும்அவர் கூறினார்.

சம்பவம் தொடர்பில் வவுனியா இரட்டைபெரியகுளம் பொலிஸாருக்கு தகவல் வழங்கியதையடுத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர்.

### கரவெட்டி வடமராட்சி தெற்கு, மேற்கு

# பிரதேச சபையின் வரவு செலவு திட்டம் நிறைவேற்றம்

(வடமராட்சி நிருபர்)

கரவெட்டி வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபையின் வரவு செலவு திட்டம் சபையில் அங்கம் வகிக்கும் அனைத்து கட்சிகளினதும் ஆதரவுடன் பெரும்பான்மை பலத்துடன் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மொத்தம் 31 உறுப்பினர்களைக்கொண்ட சபையில் கூட்டத்துக்கு சமுகமளித்த 27 உறுப்பினர்களும் ஆதரவாக வாக்களித்தனர். 4 பேர் சமுகமளிக்கவில்லை.

சபையின் விசேட கூட்டம் சபைத்தலைவர் த.ஐங்கரன் தலைமையில் நேற்று வியாழக்கிழமை காலை 10மணிக்கு ஆரம்பமானது. உத்தேச வரவு செலவு திட்டம் சபை உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டதைத் தொடர்ந்து அங்கம் வகிக்கும் கட்சிகளை சேர்ந்த உறுப்பினர்கள் பலரும் தமது குறைகள், நிறைகள் நிறைவேற்றப்படாத திட்டங்கள் என்பனவற்றை விரிவாக எடுத்து உரைத்தனர்.

சபையின் ஆயுட்காலம் இன்னும் சில மாதங்களே இருப்பதனால் அவற்றை தமக்கு நிவர்த்தித்து தருமாறு கோரிக்கை விடுத்து அபிவிருத்தித்திட்டங்களுக்கு பாதிப்பு ஏற்படும் என்பதை மனதில் கொண்டு வரவு செலவு திட்டத்துக்கு ஆதரவாக தாங்கள் அனைவரும் ஆதரவை வழங்குகிறோம் என்பதை ஏகமனதாக தெரிவித்தனர்.

# நல்லூர் பகுதியில் எரிவாயு அடுப்பு வெடிப்பு

(எம்.நியூட்டன்)

யாழ்ப்பாணம் நல்லூர் பகுதியில் எரிவாயு அடுப்பு வெடித்து சிதறிய சம்பவம் ஒன்று நேற்று இடம்பெற்றுள்ளது.

நல்லூர் கோவில் வீதியில் உள்ள ஒரு வீட்டில் மதிய உணவு தயாரித்துக்கொண்டிருந்த போது அடுப்பு தீப்பற்றி எரிவதனை அவதானித்த வீட்டு உரிமையாளர் வெளியில் ஓடிச் சென்று முன்னால் இருந்த வர்த்தக நிலையத்தினரை அழைத்துள்ளார்.

இதன்போது உடனடியாக ஓடிச்சென்ற



வர்த்தக நிலையத்தினர் எரிவாயு சிலிண்டரை அகற்றி தீயை அணைத்தமையினால் பாரிய சேதங்கள் எதுவும் ஏற்படாது தடுக்கப்பட்டுள்ளது.



# தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் 2500 ரூபாவாக அதிகரிக்கப்படவேண்டும்

### வடிவேல் சுரேஷ் எம்.பி. வலியுறுத்தல்

(நா.தனுஜா)

தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை 1000 ரூபாவாக அதிகரிக்குமாறு கடந்த காலத்தில் தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்தோம். இருப்பினும் தற்போதைய வாழ்க்கைச்செலவு உயர்வுக்கு மத்தியில் 1000 ரூபா சம்பள உயர்வு போதுமானதல்ல. ஆகவே தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளொன்றுக்கான சம்பளத்தை 2500 ரூபாவாக அதிகரிப்பதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் வலியுறுத்தியுள்ளார்.

எதிர்க்கட்சித்தலைவர் அலுவலகத்தில் புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:

மலையகம் உள்ளடங்கலாக நாட்டின் அனைத்துப் பாகங்களிலும் எரிவாயு சிலிண்டர் குண்டுகள் வெடித்துக்கொண்டிருக் கின்றன. மக்கள் உயிரச்சத்தில் இருக்கும் வேளையில், அதற்குப் பொறுப்பான அமைச்சர்கள் அக்கறையின்றி பதிலளிப்பது மேலும் கவலையளிக்கின்றது. மறுபுறம் மக்களின் வாழ்க்கைச்செலவு வெகுவாக உயர்வடைந்துள்ளது. குறிப்பாக இதற்கு முன்னரொருபோதுமில்லாத வகையில் ஒருகிலோகிராம் கோதுமை மாவின் விலை 17.50 சதத்தினால் அதிகரிக்கப்பட்டிருக்கின் றது. அதன் விளைவாக மலையக மக்களின் வாழ்க்கைச்செலவில் சடுதியான அதிகரிப்பு ஏற்பட்டிருக்கின்றது. இது மலையக சமூகத்தை முற்றுமுழுதாக வறுமைக்குள் தள்ளும் நடவடிக்கையாகும்.

தோட்டத்தொழிலாளர்களின் சம்பளத்தை 1000 ரூபாவாக அதிகரிக்குமாறு கடந்த காலத்தில் தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்தோம். இருப்பினும் தற்போதைய வாழ்க்கைச்செலவு உயர்வுக்கு மத்தியில் 1000 ரூபா சம்பள உயர்வு போதுமானதல்ல. ஆகவே தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளொன்றுக்கான சம்பளத்தை 2500 ரூபாவாக அதிகரிப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

அதேவேளை கொரோனா வைரஸ் பரவல் காரணமாக மலையக மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் முழுமையாக ஸ்தம்பிதமடைந்திருக்கின்றன. எனவே கல்வியமைச்சின் ஊடாக அதனை சீரமைப்பதற்கான விசேட செயற்றிட்டங்கள் உருவாக்கப்படவேண்டும். மேலும் பதுளை, நுவரெலியா, மொனராகலை, இரத்தினபுரி, கேகாலை, இங்கிரிய, மத்துகம, தெனியாய போன்ற பிரதேசங்களிலுள்ள அரச வைத்தியசாலைகள் மூடப்பட்டுவருகின்றன. நாட்டின் பொருளா தார வளர்ச்சிக்குப் பெருமளவில் பங்களிப்புச் செய்கின்ற மலையக மக்களுக்கு இலவசக் கல்வி மற்றும் இலவச சுகாதார சேவைகள் முறையாகச் சென்றடைவதில்லை. ஆகவே மலையகத்தில் புதிதாகப் பாதுகாப்பு அரண்களை அமைப்பதைவிடுத்து பாடசாலை களையும் வைத்தியசாலைகளையும் அமைப்பதில் அரசாங்கம் கவனம் செலுத்தவேண்டும்.

அதேபோன்று எமது நாட்டில் தொழிற்சட்டம் உரியவாறு நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. உலகில் வேறெந்த நாடுகளிலும் இல்லாதவகையில் தொழில் ஆணையாளருக்கு எதிராகவும் தொழில் அமைச்சின் செயலாளருக்கு எதிராகவும் தனியார் கம்பனிகள் வழக்குத் தொடர்ந்திருக்கின்றன. அந்த அதிகாரத்தை கம்பனிகளுக்கு வழங்கியது யார்? இவ்விடயம் தொடர்பில் ஏற்கனவே உரிய தரப்பினருக்கு அறிவிக்கப்பட்டுள்ள போதிலும் இது வரையில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாததையிட்டு எமது கடுமையான அதிருப்தியை வெளிப்படுத்துகிறோம் என்றும் குறிப்பிட்டார்.



### ரெகுலேட்டர், அடுப்பு வெடிப்பு

# எரிவாயு நிறுவனத்திடமிருந்து நட்ட ஈட்டை பெற்றுக்கொடுங்கள்

### பக்கச்சார்பற்ற விசாரணைக்கும் செந்தில் தொண்டமான் கோரிக்கை

நாடளாவிய ரீதியில் பதிவாகும் எரிவாயு சிலிண்டர் தொகுதியுடனான ரெகுலேட்டர் மற்றும் எரிவாயு அடுப்பு வெடிப்பு சம்பவங்கள் தொடர்பாக எரிசக்தி அமைச்சு உடனடியாக பக்கச்சார்பற்ற விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதுடன் வெடிக்கும் எரிவாயுக்குரிய நிறுவனத்திட மிருந்து நட்ட ஈட்டை பெற்றுக்கொடுக்க வழிவகை செய்ய வேண்டும் என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவரும் பெருந்தோட்டங்களுக்கான பிரதமரின் இணைப்புச் செயலாளருமான செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

கடந்த சில தினங்களாக நாடளாவிய ரீதியில் எரிவாயு சிலிண்டர் தொகுதியுடனான ரெகுலேட்டர் மற்றும் எரிவாயு அடுப்பு வெடிப்பு சம்பவங்கள் பதிவாகி வருகின்றன. இதனால் எரிவாயுவைப் பயன்படுத்தும் மக்கள் மத்தியில் அச்சமும் பீதியும் ஏற்பட்டுள்ளதை அறிய முடிகிறது.

எரிசக்தி அமைச்சு உடனடியாக இது குறித்த விசாரணைகளை ஆரம்பிக்க வேண்டும். எரிவாயு வெடிப்பதற்கான காரணத்தை கண்டறிவதுடன் எரிவாயு குறித்து மக்களுக்கு போதிய விழிப்புணர்வு நடவடிக்கைகளையும் முன்னெடுக்க வேண்டும்.


நாட்டில் பல நிறுவனங்கள் எரிவாயு உற்பத்தியை மேற்கொள்கின்றன. இவ்வாறு வெடிக்கும் எரிவாயுக்குரிய நிறுவனங்களின் ஊடாக மக்களுக்கான நட்ட ஈட்டையும் பெற்றுக்கொடுக்க வழிவகை செய்யப்பட வேண்டும்.

அதேபோன்று எரிவாயு கசிவு தொடர்பில் மக்கள் அவதானத்துடன் இருப்பது அவசியமாகும். எரிவாயு முகவர் நிலையங்களும் உரிய நிறுவனங்களும் முன் பரிசோதனைகளை மேற்கொண்டதன் பின்னர் மக்களுக்கு அதனை விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுப்பது இன்றியமை யாததாகும்.

மேலும் எரிவாயுவின் தரம் தொடர்பில் நாட்டில் பல சந்தேகங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. ஆகவே இந்த விடயத்தில் பக்கச்சார்பற்ற விசாரணை மேற்கொண்டு மக்களின் அச்ச நிலையை போக்க வேண்டும் என்பதுடன் அவசரகால நிலைமைகளின் போது பயன்படுத்துவதற்காக தீயை அணைக்கும் வாயுக்களை குறைந்த விலையில் மக்களுக்கு பெற்றுக்கொடுப்பது குறித்தும் கரிசனை செலுத்த வேண்டுமென செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

மலையக செய்திகள்

# புசல்லாவையில் வெடித்து சிதறிய எரிவாயு அடுப்பு



(புசல்லாவை நிருபர்)

எரிவாயு அடுப்பு வெடிப்பு சம்பவங்கள் பதிவாகி வரும் நிலையில் நேற்று நண்பகல் வேளையில் புசல்லாவை நகருக்கு அருகாமையில் உள்ள சிவபுரம் என்னும் கிராமத்தின் வீடொன்றில் எரிவாயு அடுப்பு பாரிய சத்தத்துடன் வெடித்து சிதறியுள்ளது.

வெடிப்பு சம்பவத்தை அடுத்து சமையலறை புகை மண்டலமானதாக தெரிவிக்கப்பட்டது. ஒரு மாதத்துக்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்ட நீல சிலிண்டர் பாவிக்கப்பட்டு வந்த நிலையில் நேற்றைய தினம் அடுப்பை நிறுத்திவிட்டு வந்த சிறிது நேரத்தில் பாரிய சத்தத்துடன் எரிவாயு அடுப்பு வெடித்து சிதறியதாக தெரிவிக்கப்படுகிறது.

### உளநல ஆலோசனை செயலமர்வை நடத்துவதற்காக

# வோக்கிடோக்கி, துப்பாக்கி சகிதம் பாடசாலைக்கு வந்த நால்வர் கைது

(பதுளை நிருபர்)

பதுளை – ஹாலிஎல பகுதியிலுள்ள பாடசாலையொன்றில் அனுமதியின்றி உளநல ஆலோசனை செயலமர்வை நடத்துவதற்கு சென்றதாகக் கூறப்படும் நால்வர் நேற்று (2) வியாழக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த ஆலோசகருடன் வருகை தந்த மெய்ப்பாதுகாவலர்கள் என கூறப்படும் மூவரிடமிருந்து 3பயணக்குறிப்பேடுகள், துப்பாக்கிகள், 129ரவைகள் கைப்பற்றப்பட்டுள்ளதோடு, நால்வரும் 23,24,30,36 வயதுகளையுடைய சிலாபம், இரத்மலானை மற்றும் நீர்கொழும்பு ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்களாவர். வளவாளர் என கூறப்படும் நபரும் அவருடன் சென்ற ஏனைய மூவரும் கறுப்பு நிற ஆடை அணிந்து வந்ததாகவும் ஹாலிஎல பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த செயற்றிட்டத்துக்காக மாகாண மற்றும் வலயக் கல்விப் பணிமனைகளில் எவ்வித அனுமதியும் பெற்றிருக்கவில்லை என பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. அதேபோன்று, செயலமர்வை நடத்தச்சென்ற வளவாளர் எந்தவொரு பதிவு செய்யப்பட்ட கல்வி நிறுவனத்தையும் சேர்ந்தவர் அல்ல என்பதுடன் உளநல ஆலோசனை நடத்து வதற்கு தகுதியானர்கள் அல்லர் எனவும் தெரியவந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

# நுவரெலியா மாநகர சபையின் சேதனப்பசளை செயற்றிட்டம்



(நுவரெலியா நிருபர்)

நுவரெலியா மாநகர சபையினூடாக சேதனப் பசளை தயாரிப்பதற்கான புதிய வேலைத் திட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதன் ஆரம்பக் கட்டமாக உக்கிப்போகும் கழிவு, திண்மப்பொருட்களை சேகரிப்பதற்கான நடவடிக்கையை ஆரம்பித்துள்ளனர். இதன் முதற்கட்டமாக

நுவரெலியா மாநகர சபை எல்லைக்குள் உள்ள நகரம், கிராமம் மற்றும் தோட்டப் பகுதியிலுள்ள இந்து ஆலயங்களுக்கும் பௌத்த ஆலயங்களுக்கும் கிறிஸ்தவ தேவாலயங்களுக்கும் மற்றும் முஸ்லிம் பள்ளிகளுக்கும் குப்பை சேகரிப்பதற்கான பிளாஸ்டிக் குப்பைத்தொட்டிகள் நேற்று வியாழக்கிழமை வழங்கிவைக்கப்பட்டன. நுவரெலியா மாநகர பிரதி முதல்வர் யதர்ஸ்னா புத்திரசிகாமணி தலைமையில் ஒவ்வொரு ஆலயத்துக்கும் குப்பைத் தொட்டிகள் வழங்கப்பட்டன. நுவரெலியா மாநகரசபை எல்லைக்குள் உள்ள 42 மதஸ்தலங்களுக்கும் குப்பை சேகரிக்கும் தொட்டிகள் வழங்கிய இந்நிகழ்வில் மாநகரசபை சுகாதாரப் பிரிவு குழு தலைவர் என்.பி.சீ. தயாநாயக்க, மாநகரசபை உறுப்பினர்களான ஆர்.கேதீஸ், ஆறுமுகம் விஜயகுமார், திருமதி திலினி விக்கிரமசிங்க, காமினி திஸாநாயக்க, திருமதி விந்தியா அன்சனி உட்பட மாநகரசபை உத்தியோகத்தர் களும் கலந்துகொண்டனர்.







தொழிலாளர் தேசிய சங்கத்தின் ஸ்தாபகத் தலைவர் அமரர்.வி.கே. வெள்ளையனின் 50 ஆவது நினைவை முன்னிட்டு அட்டன் ஸ்ரீசண்முகநாதர் ஆலயத்திலும் தொழிலாளர் தேசிய சங்கத்தின் அட்டன் தலைமைப் பணிமனையிலும் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றன. இதனைத் தொடர்ந்து அமரர் வி.கே. வெள்ளையனின் நினைவுத்தூபி அமைந்துள்ள டிக்கோயா தோட்டத்தில் மலரஞ்சலி செலுத்தப்பட்டதுடன் அவரின் நினைவாக மரக்கன்றும் நாட்டப்பட்டது. நிகழ்வில் தொழிலாளர் தேசிய சங்கத்தின் முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டனர்.

(படங்கள். பானா. தங்கம்)

Highland®
DAIRY ICE CREAM

# மன்னருக்கு உரித்தான சுவைநலம்

அறிமுகமாகின்றது... ஹைலண்ட் பிரிமியம் ஐஸ் கிறீம். அதிசிறந்த சேர்பொருள்களும் புதுச்சுவை நிறைந்த பாலும் கொண்டு ஐந்து உன்னத சுவைகளில் தயாரிக்கப்படுகின்றது

**ஹைலண்ட் எமது தேசத்தின் நலச்செழுமைமிக்கது.**




ரூ. 375/- தொடக்கம்
கார்கில்ஸ் ஃபுட் சிடி உட்பட அனைத்துச் சிறப்பு அங்காடிகளிலும் பெற்றுக்கொள்ள முடியும்.

MILCO®

# பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் போராட்டம்






(செங்கலடி நிருபர்)

பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களுக்கு மறுக்கப்பட்ட 107 சதவீத சம்பள உயர்வை உடனடியாக வழங்குமாறு கோரி கிழக்குப் பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் நேற்று கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். கிழக்குப் பல்கலைக்கழக வந்தாறுமூலை வளாக முன்றலில் நேற்று வியாழக்கிழமை (02) பகல் ஒன்றுகூடிய கல்விசாரா ஊழியர்கள் தமது கோரிக்கைகள் அடங்கிய பதாகைகளை ஏந்தி அமைதியாமுறையில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

# மட்டு. அம்பாறை மாவட்டங்களில் மூன்று வெடிப்புச் சம்பவங்கள்

(மாமாங்கம்,பட்டிருப்பு,காரைதீவு நிருபர்கள்)




மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் புதன்கிழமை மாலை 6 மணி தொடக்கம் மறுநாள் வியாழக்கிழமை (02) பகல் 12 மணிவரையான காலப்பகுதியில் மூன்று எரிவாயு அடுப்புகள் வெடித்துச் சிதறியுள்ளதாக அந்தந்த பிரிவு பொலிஸார் தெரிவித்தனர்.

காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள கல்லடி பாலத்துக்கு அருகாமையிலுள்ள வீடு ஒன்றில் நேற்று வியாழக்கிழமை (02) பகல் 11.30 மணியளவில் எரிவாயு அடுப்பில் சமைக்க முற்பட்டபோது அடுப்பு வெடித்துச் சிதறியுள்ளது.

அதேவேளை காத்தான்குடி மொடோன் பாம் பகுதியிலுள்ள வீடு ஒன்றிலும் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரவு எரிவாயு அடுப்பு வெடித்து சிதறியுள்ளது. இந்த இரு வெடிப்புச் சம்பவங்களிலும் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை என காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை அம்பாறை, சம்மாந்துறை பொலிஸ் பிரிவிலுள்ள வளத்தாப்பிட்டி பிரதேச வீடொன்றிலும் எரிவாயு அடுப்பு நேற்று முற் பகல் 11 மணியளவில் வெடித்து சிதறியுள்ளதாகவும் இச்சமபத்தில் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை எனவும் சம்மாந்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த வெடிப்புச் சம்பவங்கள் தொடர்பாக அந்தந்த பிரதேச பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# மாநகரசபை செயற்பாடுகளில் பங்கேற்பதற்கு ஒருமாதத்தடை

## மட்டு. மாநகர சபை தீர்மானம்

(பட்டிருப்பு நிருபர்)

மட்டக்களப்பு மாநகரசபை உறுப்பினர் கிலேனி வசந்தகுமாருக்கு மட்டக்களப்பு மாநகரசபை செயற்பாடுகளில் கலந்துகொள்வதற்கு ஒரு மாதகாலம் தடைவிதிக்க மாநகரசபையினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாநகரசபையின் அமர்வு நேற்று மாநகர முதல்வர் தி.சரவணபவன் தலைமையில் நடைபெற்றது.

மாநகரசபையின் சம்பிரதாயங்களுடன் ஆரம்பமான சபை அமர்வைத் தொடர்ந்து முதல்வரின் தலைமையுரை மற்றும் கடந்த கூட்டறிக்கை சமர்ப்பிப்பு என்பன இடம்பெற்றதையடுத்து மாநகரசபையின் பல்வேறு செயற்றிட்டங்கள் குறித்து ஆராயப்பட்டது.

இதன்போது மாநகரசபை உறுப்பினர் கிலேனி வசந்தகுமார் சட்ட விரோதமான முறையில் மாநகரசபை உறுப்பினர்களின் கையெழுத்துக்களைக்கொண்ட அந்த கடிதத்தில் தான் கையெழுத்திடவில்லையென ச.கமலரூபன் உறுதிப்படுத்திய நிலையில் அவருடன் செல்வி தயாளகுமாரி கௌரியும் அவ்வாறான கடிதமொன்றில் தான் கையெழுத்திடவில்லையென எனத் தெரிவித்திருந்தார்.

இச்செயற்பாட்டின் ஊடாக கௌரவமான சபைக்கு அபகீர்த்தி ஏற்பட்டுள்ளதாகவும் இது தொடர்பில் குறித்த உறுப்பினருக்கு எதிராக நடவடிக்கையெடுக்குமாறு கோரப்பட்டதை கருத்தில்கொண்டு எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறாது சபையின் கௌரவத்தை பேணும் வகையில் உறுப்பினர் கிலேனி வசந்தகுமாருக்கு சபை செயற்பாடுகளில் பங்கேற்பதற்கு ஒருமாதகால தடை விதிப்பதற்கும் அக்காலப்பகுதியில் தனக்கான இறப்பர் முத்திரைகள்,கடிதத்தலைப்பு,அடையாள அட்டை என்பன பாவிக்கக்கூடாது என்ற நிபந்தனையையும் விதிக்கும் வகையிலான சபை அனுமதியை கோருவதாக மாநகர முதல்வர் தெரிவித்தார்.

எனினும் இந்த செயற்பாட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்து தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி உறுப்பினர்கள்,ஐக்கிய தேசியக் கட்சியின் ஒரு உறுப்பினர் தவிர்ந்த ஏனைய உறுப்பினர்கள்,ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் ஒரு உறுப்பினர் தவிர்ந்த ஏனைய உறுப்பினர்கள், ஈபிடிபி, சுயேச்சைக்குழு உறுப்பினர்கள் சபையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர். எனினும் அமர்வில் கலந்துகொண்டிருந்த ஏனைய உறுப்பினர்கள் இப்பிரேரணைக்கு ஆதரவு வழங்கிய அதேவேளை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர் நடுநிலை வகித்தார்.இந்நிலையில் குறித்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கிழக்கு செய்திகள்


# முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி

மண்ணில் 07 11 1942

விண்ணில் 03 12 2020



## திரு. செல்லத்துரை முதலியார்

கண்முன்னே வாழ்ந்த காலம் கனவாகி போனாலும்
எம் முன்னே உங்கள் முகம் எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்த நீங்கள் விண்நோக்கிச் சென்றாலும்
கண் விட்டு மறையாமல் கனகாலம் இருப்பீர்கள்

என்றும் உங்கள் நினைவில் வாழும்
அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரபிள்ளைகள்
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
ஆண்டவனை பிரார்த்திப்போம்

ஓம் சாந்தி... சாந்தி... சாந்தி...

Address
No.19 - 2/3, Fussels Lane,
Wellawatte, Colombo 06.

தகவல்
மனைவி, மகன்


# கிழக்கு மாகாண ஆளுநருடன் ஜேர்மன் உயர்ஸ்தானிகர் சந்திப்பு



(கந்தளாய் மேலதிக நிருபர் )

கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் மற்றும் இலங்கைக்கான ஜேர்மன் உயர்ஸ்தானிகர் ஆகியோருக்கு இடையில் சந்திப்பொன்று நேற்று (02) திருகோணமலை ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்றது.

கிழக்கு மாகாணத்தில் சுற்றுலா மற்றும் விவசாயத்துறை அபிவிருத்திக்கு ஜேர்மன் அரசாங்கம் பூரண ஒத்துழைப்பு வழங்கவுள்ளாகவும் சுமார் 250க்கும் மேற்பட்ட முதலீட்டாளர்கள் இலங்கையில் முதலீடு செய்வதற்கு தயாராக இருப்பதாகவும் அதன் மூலம் பிராந்திய அபிவிருத்தி உட்பட ஏற்றுமதி வாய்ப்புகளும் ஐரோப்பிய சந்தைக்கு மேற்கொள்ள ஏதுவாக அமையும் என்றும் முதலீட்டு வாய்ப்புகள் மூலம் இலங்கையினுடைய பொருளாதாரத்துக்கு வலுச்சேர்க்க முடிவதோடு ஏற்றுமதி அபிவிருத்தியும் ஏற்படக்கூடிய நிலவரம் ஏற்படும் என உயர்ஸ்தானிகர் கிழக்கு ஆளுநரிடம் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன்போது ஜேர்மன் வர்த்தக சங்கத் தலைவர், கிழக்கு மாகாண பிரதம செயலாளர் துசித்த பீ வணிகசிங்க, ஆளுநர் செயலாளர் எல்.பீ.மதநாயக்க உட்பட அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

# கல்முனை மயானப்பிரச்சினைக்கு சுமுகத் தீர்வு

(காரைதீவு நிருபர் )

கல்முனை தமிழர் பிரதேச மயானப் பிச்சினை கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பி.மணிவண்ணனின் தலையீட்டால் சுமுகமாக தீர்த்துவைக்கப்பட்டுள்ளது.

கல்முனையில் தமிழர்வாழும் 1ஆம், 2ஆம், 3ஆம் பிரிவுகளுக்கான மயானத்தில் மதில் அமைப்பது தொடர்பாக இருபிரிவினருக்கிடையே கடந்த 6மாதகாலமாக பிரச்சினை இருந்துவந்தது.இதனால் கல்முனை வடக்கு பிரதேச செயலகம் மற்றும் கல்முனை மாநகர சபையின் சம்மதத்துடன் 13இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்படவிருந்த மதில் கட்டுமானப்பணி ஸ்தம்பித நிலையிலிருந்ததுடன் பணம் திரும்பிப் போகும் அபாயமும் நிலவியது.

இந்நிலையில் நேற்று கல்முனை மாநகர சபைக்கு விஜயம் செய்த கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பி.மணிவண்ணனின் முன்னிலையில் இப்பிரச்சினை சுமுகமாக தீர்த்துவைக்கப்பட்டது.

கல்முனை மாநகர சபைக்கு வேறுவிடயமாக விஜயம்செய்த மாகாண ஆணையாளரை சந்தித்த கல்முனை மாநகர சபை உறுப்பினர் சந்திரசேகரம் ராஜன் இம்மயானப் பிரச்சினையை எடுத்துக்கூறி அதனை தீர்த்துவைக்குமாறு வேண்டுகோள் விடுத்தார்.

அதனையடுத்து ஒருமணிநேரத்துள் இருதரப்பினருக்கும் அறிவித்து இச்சமரசக் கூட்டம் இடம்பெற்றது.

கல்முனை மாநகர முதல்வர் எ.எம்.றக்கீப், ஆணையாளர் ஏ.எம்.அன்சார், கல்முனை சுபத்ராராமய விகாராதிபதி வண.ரண்முத்துக்கல சங்கரத்ன தேரர், மாநகரசபை உறுப்பினர்களான சந்திரசேகரம் ராஜன் ,ஹென்றி மஹேந்திரன் உள்ளிட்ட உறுப்பினர்கள்,சம்பந்தப்பட்ட பொதுநல அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

இருபக்க நியாயங்களையும் செவிமடுத்த ஆணையாளர் இருசாராரும் ஏற்றுக்கொள்ளதக்கதான மயான நுழைவாயலை புதிதாக அமைப்பதுடன் மயான மேற்பார்வையாளருக்கான கொட்டகையொன்றை அமைப்பது எனவும் பணம் மீதமாகினால் ஏலவே உடைந்துபோயுள்ள மதிலின் சிறுபகுதியை புனரமைப்பது எனவும் தீர்மானமாகியது. இதனை இருசாராரும் ஏற்றுக்கொண்டதையடுத்து கல்முனை வடக்கு பிரதேசெயலாளருக்கு அறிவித்து கட்டுமானப்பணிகளை ஆரம்பிப்பது எனத் தீர்மானிக்கப்பட்டது.

இதனால் இன்னும் 12நாட்களில் திரும்பிப்போகவிருந்த 13இலட்சம் ரூபா நிதி மக்களுக்காக பயன்படுத்தப்படவிருப்பது குறித்து மக்கள் மகிழ்ச்சியும் நன்றியும் தெரிவிக்கின்றனர்.

# உணவுப் பாதுகாப்புச் சட்டத்தை மீறிய விற்பனை நிலையத்துக்கெதிராக வழக்கு

(புதிய காத்தான்குடி நிருபர்)



உணவுப் பாதுகாப்புச் சட்டத்தை மீறி உணவு தயாரிப்பில் ஈடுபட்டு விற்பனை செய்த உணவு விற்பனை நிறுவனத்துக்கு எதிராக வழக்குப் பதிவு செய்யவுள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மற்றும் மட்டக்களப்பு தாதியர் பயிற்சிக் கல்லூரி பயிற்சி மாணவர்கள் ஆகியோர் நேற்றுமுன்தினம் (01) மேற்படி நிலையத்தை சோதனையிட்டனர். இந்நடவடிக்கையில் கோட்டைமுனை பொதுச் சுகாதார பரிசோதகர் ரி.மிதுன்ராஜ் உட்பட பொதுச் சுகாதார பரிசோகர்கள், தாதிய மாணவர்கள், சுகாதாரத்துறை சார்ந்தோர் ஈடுபட்டனர்.

இதன்போது சுற்றுத்துண்டு இடாமல் பொதி செய்யப்பட்ட உணவுப்பொருட்கள் மீட்கப்பட்டன.

குறித்த நிறுவனத்துக்கு எதிராக மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யவுள்ளதாக புளியந்தீவு பொதுச் சுகாதார பரிசோதகர் எஸ்.தீபகுமாரன் தெரிவித்தார்.

# கும்புறுமூலையில் தொழிற்பயிற்சி நிலையம் அங்குரார்ப்பணம்





(கல்குடா நிருபர்)

ஜனாதிபதியின் வழிகாட்டலில் விஷேட தேவையுடைய இளைஞர் யுவதிகளின் வாழ்க்கைத் திறனை மேம்படுத்துவதற்காக வாழைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கும்புறுமூலையில் தொழிற்பயிற்சி நிலையமொன்று நேற்று வியாழக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் சுதர்சனி பெர்னாண்டோ புள்ளே பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு நிலையத்தை திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் சமூக சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் சந்தன ரணவீர ஆரச்சி, ஆரம்ப சுகாதார சேவைகள் தொற்று நோய்கள் மற்றும் கொவிட் நோய்கள் கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சின் செயலாளர் சுனேத்ரா குணவர்த்தன, வாழைச்சேனை பிரதேச சபை தவிசாளர் சோபா ஜெயரஞ்சித், கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் எஸ். மணிவண்ணன், மட்டக்களப்பு மாவட்ட பிரதேச செயலகங்களின் பிரதேச செயலாளர்கள், சமூக சேவை திணைக்கள உத்தியோகத்தர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

ஆரம்ப சுகாதார சேவைகள் தொற்றுநோய்கள் மற்றும் கொவிட் நோய்கள் கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சின் 141 மில்லியன் ரூபா நிதியொதுக்கீட்டில் இந்நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

விஷேட தேவையுடைய இளைஞர்களுக்கு தொழில் பயிற்சி அளிக்கும் வகையில் அமைக்கப்பட்ட இந்த தொழிற்பயிற்சி நிலையத்தில் தையல் பயிற்சி மற்றும் மின் உபகரண திருத்தல் போன்ற பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. 16 வயது தொடக்கம் 35 வயதுக்கு இடைப்பட்ட திருமணமாகாத இளைஞர்கள் பயிற்சி நெறிக்காக இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

# கிண்ணியா எழிலரங்கு மைதானம் அபிவிருத்தி

(சேனையூர் நிருபர்)

ஜனாதிபதியின் சுபீட்சத்தின் நோக்கு கொள்கைப் பிரகடனத்துக்கு அமைய கிண்ணியா எழிலரங்கு மைதானம் விளையாட்டுத் துறை அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.

இதுதொடர்பான அங்குரார்ப்பண வைபவம் நேற்று முன்தினம் (01) மாலை பொதுஜன பெரமுன மூதூர் தொகுதி இணைப்பாளர் எம்.எஸ்.உவைஸ் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.ஏ.அனஸ், கிண்ணியா நகர சபை உபதவிசாளர் ஐயூப் நளீம் சப்ரீன்,கிண்ணியா நகர சபை உறுப்பினர்களான எம்.எம்.மஹ்தி, நவாஸ் உட்பட விளையாட்டு கழக உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# ஓமிக்ரோன் பரவ ஆரம்பித்தால் ஐந்து மடங்கு தொற்றாளர்கள் உருவாகலாம்

## வெளிநாடுகளிலிருந்து வரும் அனைவரும் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டும் - இலங்கை மருத்துவ சங்கம்

(எம்.மனோசித்ரா)

இலங்கையில் ஓமிக்ரோன் பரவ ஆரம்பித்தால் டெல்டா பரவிய போது நாளாந்தம் பதிவாகிய தொற்றாளர்களை விட 5 மடங்குக்கும் அதிக தொற்றாளர்கள் பதிவாகக் கூடும். அவ்வாறு ஒரே சந்தர்ப்பத்தில் அதிகளவான தொற்றாளர்கள் இனங்காணப்பட்டால் அது வைத்தியசாலைகள் உள்ளிட்ட முழு சுகாதார கட்டமைப்புக்கும் பெரும் நெருக்கடியாகவே அமையும் என்று இலங்கை மருத்துவ சங்கத்தின் தலைவர் விசேட வைத்திய நிபுணர் பத்மா குணரத்ன தெரிவித்தார்.

இலங்கை மருத்துவ சங்கத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

நாட்டில் சிறிய கால இடைவெளிக்குப் பின்னர் மீண்டும் மீண்டும் கொவிட் தொற்று பரவல் தலைதூக்கும் நிலைமையே காணப்படுகிறது. அபாயம் மிக்க ஓமிக்ரோன் பிறழ்வானது தற்போது தென் ஆபிரிக்காவில் மாத்திரமின்றி பல நாடுகளிலும் பரவியுள்ளமை இனங்காணப்பட்டுள்ளது. இது அதிக மரபணுக்களைக் கொண்டிருப்பதால் அதிகளவில் பரவக் கூடியதாகவும் உள்ளது. இலங்கையில் டெல்டா பரவியதை விட வேகமாகப் பரவக் கூடியதாகும்.

எனவே ஓமிக்ரோன் பரவல் தீவிரமடைந்தால் சமூகத்திலுள்ள 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் மற்றும் சகல வயதுப் பிரிவிலுமுள்ள தொற்றா நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் பாரதூரமான பாதிப்பை எதிர்கொள்ள நேரிடும். ஒரே நேரத்தில் அதிகளவானோர் தொற்றுக்குள்ளானால் வைத்தியசாலை கட்டமைப்புக்களும் பாரிய நெருக்கடியை எதிர்கொள்ள நேரிடும். எனவே வைரஸ் பரவ முன்னர் தடுப்பதே சிறந்த வழிமுறையாகும்.

இதற்கு முன்னர் இனங்காணப்பட்ட திரிபுகளிலிருந்து தடுப்பூசியின் மூலம் பாதுகாப்பைப் பெறக் கூடியதாக இருந்தது. எனினும் ஓமிக்ரோன் பிறழ்வின் மூலம் தடுப்பூசியினால் பெற்றுக் கொள்ளப்பட்ட பாதுகாப்பும் கேள்விக்குள்ளாகும் என்று சர்வதேச மருத்துவ ஆய்வாளர்கள் எதிர்வுகூறியுள்ளனர். எவ்வாறிருப்பினும் தொற்றுக்கு உள்ளானால் தீவிர நிலைமையை அல்லது மரணம் வரை செல்லாமலிருப்பதற்காகவது தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வது அவசியமாகும்.

இம்மாத இறுதியில் நத்தார் பண்டிகை மற்றும் புத்தாண்டு பிறப்பு என்பவற்றுக்கான கொண்டாட்டங்களுக்காக மக்கள் தயாராகிக் கொண்டிருப்பர். இந்த கொண்டாட்டங்களின் போது அதிகளவானோர் ஒன்று கூடுவதை தவிர்த்துக் கொள்வதோடு, மிகவும் அவதானமாகவும் செயற்பட வேண்டும். குறிப்பாக முதியோர் மிகவும் அவதானத்துடன் இருக்க வேண்டும். முதியோர், சுகாதார ஊழியர்கள் மற்றும் சகல வயது பிரிவையும் சேர்ந்த தொற்றா நோய்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு துரிதமாக மூன்றாம் கட்ட தடுப்பூசி வழங்கப்பட வேண்டும். இலங்கையில் ஓமிக்ரோன் பரவ ஆரம்பித்தால் டெல்டா பரவிய போது நாளாந்தம் பதிவாகிய தொற்றாளர்களை விட 5 மடங்குக்கும் அதிக தொற்றாளர்கள் பதிவாகக் கூடும். அவ்வாறு ஒரே சந்தர்ப்பத்தில் அதிகளவான தொற்றாளர்கள் இனங்காணப்பட்டால் அது வைத்தியசாலைகள் உள்ளிட்ட முழு சுகாதார கட்டமைப்புக்கும் பெரும் நெருக்கடியாகவே அமையும். ஓமிக்ரோன் எந்த சந்தர்ப்பத்திலும் நாட்டுக்குள் நுழையக்கூடும். எனவே வெளிநாடுகளிலிருந்து வரும் முழுமையாக தடுப்பூசி பெற்றவர்கள் உட்பட சகலரும் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டும். காரணம் இலங்கைக்கு வருவதற்கு 6 நாடுகளின் பிரஜைகளுக்கு மாத்திரமே தடை விதிக்கப்பட்டுள்ளது. ஆனால் ஓமிக்ரோன் அவற்றுக்கு அப்பால் மேலும் பல நாடுகளில் பரவியுள்ளது என்றார்.

### முதலீட்டு... (தொடர்ச்சி)

இராஜினாமா செய்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை முதலீட்டுச்சபையின் தலைவர் சஞ்சய மொஹொட்டல, பணிப்பாளர் நாயகம் பசன் வணிகசேகர மற்றும் முதலீட்டுச்சபை உறுப்பினர்களான ஹர்ஷ கப்ரால், சஞ்சய் குலதுங்க ஆகியோரே மேற்குறிப்பிட்டவாறு தமது இராஜினாமா கடிதத்தைக் கையளித்திருப்பதாக அறியமுடிகின்றது.

முதலீட்டுச்சபையின் தலைமை நிர்வாகத்திற்கும் தொழிற்சங்கத்திற்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாடுகளும் முதலீட்டுச்சபைக்கான நியமனங்கள் தொடர்பில் அண்மையில் கோப் குழுவினால் வெளியிடப்பட்ட கருத்துக்களும் இந்த பதவிவிலகலுக்கான காரணங்களாக அமைந்திருக்கக் கூடும் என்று கருதப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

### சஹ்ரானின்... (தொடர்ச்சி)

குண்டுதாரியான சஹ்ரான் ஹஷீமின், மனைவிக்கு எதிராக சட்ட மா அதிபர் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்துள்ளார்.

கல்முனை மேல் நீதிமன்றில் 1988 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க சட்டம் மற்றும் 1982 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க சட்டங்களால் திருத்தப்பட்ட 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க பயங்கரவாத தடைச் சட்டத்தின் 5 ஆம் அத்தியாயத்தின் கீழ் இந்த குற்றப் பத்திரிகை, சட்ட மா அதிபர் சஞ்சய ராஜரத்னத்தின் கையெழுத்துடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் 5 ஆம் அத்தியாயத்தின் அ, ஆ பிரிவுகளின் கீழ் 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 21 ஆம் திகதிக்கும் 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 26 ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் சாரா ஜஸ்மின் என்றழைக்கப்பட்ட புலஸ்தினி மகேந்திரன் என்பவர் வெடிபொருட்களை தயாரித்தமை மற்றும் அவற்றை சேகரித்து வைத்திருந்தமை தொடர்பில் அறிந்திருந்தும் அந்த தகவலை பொலிஸாருக்கு அறிவிக்காமை குறித்து இந்த குற்றப் பகிர்வுப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, இந்த குற்றப் பகிர்வுப் பத்திரம் நேற்று (02) முதன் முறையாக கல்முனை மேல் நீதிமன்ற நீதிபதி ஜெயராம் ட்றொக்ஸி முன்னிலையில் பரிசீலிக்கப்பட்டது.

இதன்போது, பயங்கரவாதி சஹ்ரானின் மனைவியான பிரதிவாதி பாத்திமா ஹாதியா மன்றில் ஆஜர்செய்யப்பட்டிருக்கவில்லை.

மன்றில் ஆஜராகியிருந்த வழக்கு தொடுநர் சட்ட மா அதிபர் திணைக்களத்தின் அரச சட்டவாதி எம்.விக்னேஸ்வரன் பிரதிவாதி கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.இந் நிலையில் விடயங்களை ஆராய்ந்த நீதிபதி ஜயராம் ட்றொக்ஸி, எதிர்வரும் 2022 ஜனவரி மாதம் 10 ஆம் திகதி பிரதிவாதியான அப்துல் காதர் பாத்திமா ஹாதியாவை மன்றில் ஆஜர் செய்யுமாறு கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலை அத்தியட்சகருக்கு உத்தரவு பிறப்பித்தார். அன்றைய தினம் ஹாதியாவுக்கு குற்றப் பகிர்வுப் பத்திரம் கையளிக்கப்படவுள்ளது.

### ஒரே... (தொடர்ச்சி)

இந்த விஜயத்தில் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் கலந்து கொள்ளவுள்ளதுடன் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்கவும் அதே விமானத்தில் பயணிக்கவுள்ளார்.

'சுற்றுச்சூழல், பொருளாதாரம், பெருந்தொற்று' என்ற தொனிப்பொருளில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இம்மாநாட்டில், இந்து சமுத்திர பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ள காலநிலை மாற்றத்துடன் தொடர்புடைய சவால்களுக்கு எவ்வாறு முகங்கொடுப்பது என்பது குறித்தும் அதனை முன்னிறுத்தி ஒன்றிணைந்து பணியாற்றவேண்டியதன் அவசியம் தொடர்பிலும் ஆராயப்படவுள்ளது.

இம்மாநாட்டில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக் ஷ, இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெயஷங்கர், சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சர் விவியன் பாலகிருஷ்ணன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். அத்தோடு நாளை சனிக்கிழமை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக் ஷ மாநாட்டில் உரையாற்றவுள்ளார்.

கடந்த 2016 முதல் 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் இந்து சமுத்திர மாநாட்டின் தலைவராகப் பதவிவகித்த ரணில் விக்கிரமசிங்கவுக்கு இம்முறை நடைபெறவுள்ள 5 ஆவது இந்து சமுத்திர மாநாட்டில் கலந்துகொள்வதற்கான உத்தியோகபூர்வ அழைப்பு ஏற்பாட்டுக்குழுவினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. அந்த அழைப்பையேற்று அபுதாபி செல்லவுள்ள முன்னாள் பிரதமர் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாநாட்டில் உரையாற்றவுள்ளார்.

### முஸம்மில்... (தொடர்ச்சி)

ஸ்ரீலங்கா சுதந்திர பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர்களான மொஹம்மட் முஸம்மில், ஜயநந்த வெல்லாவல, நிமல் பியதிஸ்ஸ ஆகியோருக்கே இந்த அறிவித்தல் அனுப்பப்பட்டுள்ளது.

அசாத் சலி நீதிமன்றால் நிரபராதி எனக் கூறி நேற்று ( 02) விடுவிக்கப்பட்ட பின்னர், அசாத் சாலிக்காக ஆஜராகிய ஜனாதிபதி சட்டத்தரணி மைத்திரி குணரத்ன 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் சட்டத்தின் 17 (2) ஆம் அத்தியாயத்துக்கு அமைய முன் வைத்த வாதத்தை அடுத்து இந்த அறிவித்தல் நீதிபதி அமல் ரணராஜாவால் பிறப்பிக்கப்பட்டது.

பொய்யான முறைப்பாட்டை வேண்டுமென்றே முறைப்பாட்டாளர்கள் முன்வைத்து, அதனூடாக அசாத் சாலியை சுமார் 9 மாதங்கள் சிறைப்படுத்தி வைக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக இதன்போது ஜனாதிபதி சட்டத்தரணி மைத்திரி குணரத்ன மன்றில் குறிப்பிட்டார். சட்டம் இயற்றும் உயர் சபையின் அங்கத்தவர்களான இவர்கள் துவேஷமாக நடந்துகொண்டுள்ளதாக ஜனாதிபதி சட்டத்தரணி மைத்திரி குணரத்ன குறிப்பிட்டார். இவ்வாறு பொய் முறைப்பாடுகளைச் செய்வோருக்கு இந்த வழக்கின் தீர்ப்பு ஒரு பாடமாக அமைய வேண்டும் எனவும் அதனால் இந்த 9 மாதங்களில் அசாத் சாலிக்கு ஏற்பட்ட இழப்புக்களுக்காக இந்த நீதிமன்றம் இழப்பீட்டு தொகை ஒன்றினை பெற்றுத் தர வேண்டும் எனவும் அவர் கோரினார். குற்றவியல் சட்டத்தின் 17 (2) ஆம் அத்தியாயத்துக்கு அமைய அவர் இந்த கோரிக்கையை முன் வைத்தார்.

இதன்போது நீதிபதி அமல் ரணராஜா, குற்றவியல் சட்டத்தின் 17 (3) ஆம் அத்தியாயத்துக்கு அமைய கூறப்பட்டுள்ள விடயங்களை கருத்தில் கொண்டு, ஜனாதிபதி சட்டத்தரணி மைத்திரி குணரத்னவின் வாதங்கள் தொடர்பில் ஆட்சேபனை உள்ளதா என சட்ட மா அதிபர் தரப்பிடம் வினவினார். அதற்கு பதிலளித்த சிரேஷ்ட அரச சட்டவாதி வசந்த பெரேரா தனக்கு ஆட்சேபனை இல்லை எனத் தெரிவித்தார். எனினும் அது தொடர்பில் முறைப்பாட்டாளர்களிடம் வினவுவது சிறந்தது என அவர் குறிப்பிட்டார்.

இதனையடுத்தே அது தொடர்பில் வினவ, அசாத் சாலி விடுவிக்கப்பட்ட வழக்கின் 1,2,3 ஆம் சட்சியாளர்களாக பெயரிடப்பட்டிருந்த அவருக்கு எதிராக முறைப்பாடளித்த ஸ்ரீலங்கா சுதந்திர பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர்களான மொஹம்மட் முஸம்மில், ஜயநந்த வெல்லாவல, நிமல் பியதிஸ்ஸ ஆகியோரை எதிர்வரும் 2022 பெப்ரவரி 21 ஆம் திகதி மன்றில் ஆஜராக நீதிபதி உத்தரவிட்டார்.

### நாட்டில்... (தொடர்ச்சி)

நோக்கில் பல சக்திகள் மிகவும் சூட்சுமமாக செயற்படுகின்றன. எனவே அரசாங்கம் என்ற வகையில் கடுமையான தீர்மானங்களை எடுக்க வேண்டிய கட்டாய காலகட்டத்தில் உள்ளதாக தெரிவித்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, இவ்வாறான தருணங்களில் ஊடகங்கள் மிகவும் பொறுப்புணர்வுடன் செயற்பட வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார். மேலும் ஒரு அரசாங்கத்தை உருவாக்கவும் அழிக்கவும் ஊடகங்களுக்கு முடியும். ஆனால் அரசாங்கத்தை பாதுகாக்க முடியாது. அவ்வாறு பாதுகாக்க சென்றால் இதனை விட பாரிய காப்புறுதித் திட்டங்கள் ஊடகங்களுக்கு தேவைப்படலாம். இதனை ஊடகவியலாளர்கள் உணர்ந்து விட்டனர். எம்மவர்கள் இன்னும் உணரவில்லை என்றும் குறிப்பிட்டார்.

ஊடகவியலாளர்களுக்கு அரச காப்புறுதித் திட்டம் வழங்கும் உத்தியோகபூர்வ நிகழ்வு நேற்று வியாழக்கிழமை அலரி மாளிகையில் இடம்பெற்றது. இதன் போது உரையாற்றுகையிலேயே பிரதமர் மஹிந்த ராஜபக் ஷ மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் தொடர்ந்தும் கூறுகையில், ஊடகவியலாளர்களுக்கான எசிதிசி காப்புறுதித் திட்டம் வழங்குவதற்கு இந்தளவு காலம் ஏன் சென்றது என்பது எனக்கு தெரியவில்லை. ஆனால் காலம்தாமதித்தேனும் வழங்கப்பட்டமை மகிழ்ச்சியளிக்கின்றது. தகுதியுள்ளவர்களுக்கு தகுதியான பொறுப்புக்களை வழங்கியுள்ளமைக்கு இன்றைய நிகழ்வு சான்று பகர்கின்றது. டளஸ் அழகப்பெருமவுக்கு ஊடக அமைச்சை வழங்குமாறு என்றோ கூறினேன். அன்று பொறுப்பேற்றிருந்தால் இந்த காப்புறுதித் திட்டம் முன்னாடியே வழங்கப்பட்டிருக்கும்.ஊடகவியலாளர்களுக்கும் எனக்குமான தொடர்புகள் முக்கியமானது. முன்னாள் ஜனாதிபதி என்னை ரிப்போட்டர் என்று கூறியே நகைப்பார். நான் ரிப்போட்டர் அல்ல எடிடர் (தலைமை ஆசிரியர்) என குறிப்பிட்டேன். எவ்வாறாயினும் ஊடகவியலாளர்களுக்கு எதிரான அனைத்து சந்தர்ப்பங்களிலும் அவர்களுக்காக முன்னின்றுள்ளேன். அரசியல் குண்டர்கள் ஊடகவியலாளர்களை தாக்கிய போதும் அவர்களுடன் நின்று குரல் கொடுத்தோம். ஊடகவியலாளர்களுடன் நட்புறவாக செயற்படுவது என்பது ஒரு கலையாகும். ஊடகங்களுக்கு எதனையும் எப்போதும் மறைத்ததில்லை. அவ்வாறு மறைக்கும் சந்தர்ப்பங்களிலும் அதனை அறிந்துக்கொள்ளும் ஆர்வமும் தேவையும் அதிகரிக்கின்றது. பின்னர் மக்களும் தேட ஆரம்பித்து விடுவார்கள். மறுபுறம் போலி தகவல்களும் பரப்பப்படும்.எமது அரசியல் வாழ்வில் நெருக்கடியான அனைத்து சந்தர்ப்பங்களில் ஊடகவியலாளர்கள் எம்முடன் இருந்துள்ளனர். எம்மை ஆட்சியில் அமர்த்த அவர்கள் கடும் பங்களிப்புச் செய்தனர். ஆனால் இன்று நாங்கள் அவர்களுக்கு எதிராக குற்றச்சாட்டுக்களை முன் வைக்கின்றோம். இதுவே யதார்த்தம். ஒரு அரசாங்கத்தை உருவாக்கவும் அழிக்கவும் முடியும். ஆனால் அரசாங்கத்தை பாதுகாக்க முடியாது. எனவே அரசாங்கத்தைப் பாதுகாக்க வேண்டிய நிலை ஆளும் தரப்பு வசமே உள்ளது. அவ்வாறு அல்லாது ஊடகங்கள் அரசாங்கத்தை பாதுகாக்க சென்றால் இதனை விட பாரிய காப்புறுதித் திட்டங்கள் தேவைப்படலாம். இதனை ஊடகவியலாளர்கள் உணர்ந்து விட்டனர். எம்மவர்கள் இன்னும் உணரவில்லை. கொரோனாவுக்கு மத்தியில் அரசாங்கத்துக்கு எதிராக பல்வேறு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன. நாட்டை முடக்க கூறியவர்கள் கொழும்பில் ஆர்ப்பாட்டம் நடத்தினர். தொற்றைக் கட்டுப்படுத்த நாட்டை முடக்கியதால் பெரும் பொருளாதார வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக குற்றம் சுமத்துகின்றனர். இவர்களின் சந்தர்ப்பவாதம் குறித்தும் வெளிப்படுத்தப்பட வேண்டியது அவசியமாகும். ஊடகங்களுக்கு தெரியாத வகையில் நாட்டுக்கு எதிரான சக்திகள் மீண்டும் செயற்பட ஆரம்பித்துள்ளன. நாட்டின் நிர்வாகத்தை கைப்பற்ற பல சக்திகள் செயற்படுகின்றன. இறுதிக்கட்ட போர் காலத்திலும் இது போன்ற நிலைமைகளை எதிர்கொண்டுள்ளோம். ஊடகங்களில் வெளிப்படுத்தப்படும் தகவல்களை கொண்டே நாட்டின் நற்பெயருக்கு கலங்கத்தை ஏற்படுத்தும் வகையில் செயற்படுகின்றனர். போரில் பயங்கரவாதிகள் கொல்லப்பட்ட போது அவர்களை அப்பாவி தமிழ் மக்கள் என்றே உலகுக்கு காண்பிக்கப்பட்டது. இறுதிக்கட்ட போரில் முன்னெடுக்கப்பட்ட இராணுவ நடவடிக்கைகளை நிறுத்தவே இவ்வாறான முயற்சிகள் எடுக்கப்பட்டன. இவ்வாறான விடயங்கள் குறித்து அனைவரும் புரிதலுடன் செயற்பட வேண்டும். மக்களின் சுதந்திரத்தையும் நாட்டின் உரிமத்தையும் கைப்பற்ற மிகவும் சூட்சுமமாக செயற்படும் சக்திகள் ஊடங்களை சாதகமாகப் பயன்படுத்திக்கொள்கின்றன. எனவேதான் அரசாங்கம் என்றவகையில் கடுமையான தீர்மானங்களை எடுக்க வேண்டிய காலகட்டத்தில் உள்ளோம். நாட்டின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு அவ்வாறான தீர்மானங்கள் எடுக்கையில் ஊடகங்கள் மிகவும் பொறுப்புணர்வுடன் செயற்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

### எல்லைகளை... (தொடர்ச்சி)

என்றே கூறவேண்டும் என்பதை சுட்டிக் காட்டியுள்ள வைத்திய நிபுணர்கள், 'ஓமிக்ரோன்' வைரஸைக் கட்டுப்படுத்த நாடுகளுக்கு இடையிலான எல்லைகளை முடக்குவது சாத்தியமில்லை என்பதையும் கூறியுள்ளனர்.

இவ்வாறான நிலையில் இலங்கையில் ஓமிக்ரோன் வைரஸ் தொற்று வராதென கூறவே முடியாது. இப்போது இல்லை என்றாலும் எதிர்வரும் காலங்களில் அடையாளம் காணப்படலாம் என்பதையும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஜனாதிபதி ஊடக மையத்தினால் நேற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடக சந்திப்பில் கலந்துகொண்ட போதே அவர்கள் இதனைத் தெரிவித்தனர். இது குறித்து ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக ஆய்வு மையத்தின் பணிப்பார் பேராசிரியர் நீலிகா மலவிகே கூறுகையில்,

கடந்த நவம்பர் மாதத்தில் இருந்தே 'ஓமிக்ரோன் 'வைரஸ் தொற்று ஐரோப்பிய நாடுகளில் பரவியுள்ளதுடன் தற்போது வரையில் 24 நாடுகளில் இந்த வைரஸ் அடையாளம் காணப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. எனவே உலகில் வேகமாக பரவிக்கொண்டுள்ள வைரஸாக 'ஓமிக்ரோன் 'வைரஸை உலக சுகாதார ஸ்தாபனம் அடையாளப்படுத்தியுள்ளது. ஓமிக்ரோன் வைரஸ் தொற்று எவ்வாறான தாக்கத்தை கொண்டுள்ளது, அதன் விளைவுகள் எவ்வாறானது என்பது குறித்து இன்னமும் முழுமையான ஆய்வுகள் முன்னெடுக்கப்படவில்லை. எனினும் ஏனைய கொவிட்19 வைரஸ் தொற்றுகளைப் போன்று நோய் அறிகுறிகள் வெளிப்படுத்தாது மாறுபட்ட தொற்று அறிகுறிகளை வெளிப்படுத்துவதாக தென்னாபிரிக்க ஆய்வுகள் கூறுகின்றன.

அதேபோன்று கொவிட் 19 வைரஸ் தொற்றுக்கு உள்ளானவர்கள் மீண்டும் 'ஓமிக்ரோன்' வைரஸ் தொற்றுக்கு உள்ளாவதாகவும் கூறுகின்றனர். எனவேதான் ஓமிக்ரோன் வைரஸ் குறித்த அச்சுறுத்தல் விடுக்கும் நிலைக்கு உலக சுகாதார ஸ்தாபனம் தீர்மானம் எடுத்துள்ளது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். ஏற்கனவே நான்கு வைரஸ் தொற்றுகளை உலக சுகாதார ஸ்தாபனம் அவதானம் செலுத்தியுள்ள நிலையில் இது ஐந்தாவது அவதானம் மிக்க வைரஸாகும்.

'ஓமிக்ரோன் ' வைரஸைக் கட்டுப்படுத்த நாடுகளுக்கு இடையிலான எல்லைகளை முடக்குவது சாத்தியமில்லை. எம் சகலருக்கும் தெரிந்த டெல்டா வைரஸ் உலகில் சகல நாடுகளிலும் பரவியது. இதன்போது அவுஸ்திரேலியா, நியூசிலாந்து நாடுகள் முழுமையாக தமது எல்லைகளை முடக்கியும் அவர்களால் டெல்டா வைரஸ் தொற்றை தடுக்க முடியாது போனது. எனவே ஓமிக்ரோன் வைரஸ் தொற்றும் ஏனைய வைரஸ் போன்றே பரவ முடியும். ஆகவே எல்லைகளை முடக்குவதால் மட்டும் எம்மால் வைரஸ் தொற்றில் இருந்து விடுபட முடியாது. இப்போது ஓமிக்ரோன் வைரஸ் குறித்து அவதானம் செலுத்தப்படுவதைப் போன்று எதிர்காலத்தில் வேறு வைரஸ் தொற்றுகள் உருவாகலாம். மக்கள் அடிப்படை சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி, அதேபோல் தடுப்பூசிகளை பெற்றுக்கொண்டே இதனை எதிர்கொள்ள முடியும்.

மேலும் ஐரோப்பிய நாடுகளில் இப்போது ஓமிக்ரோன் வைரஸ் பரவியதாக கூறப்பட்டாலும் இந்த வைரஸ் இரண்டு வாரங்களுக்கு முன்னரே பரவியிருக்க அதிக வாய்ப்புகள் இருப்பதாக கூறப்படுகின்றது. எனவே குறித்த நாடுகளில் இருந்து மக்கள் இரண்டு வாரங்களுக்கு முன்னரே பல்வேறு நாடுகளுக்கு சென்றிருப்பார்கள். இவ்வாறான நிலையில் இலங்கையில் ஓமிக்ரோன் வைரஸ் தொற்று வராதென கூறவே முடியாது. இப்போது இல்லை என்றாலும் எதிர்வரும் காலங்களில் அடையாளம் காணப்படலாம் என்றார்.

ஊடக சந்திப்பில் நிலைமைகளை தெளிவுபடுத்திய ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் நோயெதிர்ப்பு மற்றும் மூலக்கூறு மருத்துவ பிரிவின் பணிப்பாளரும் வைத்திய நிபுணருமான சந்திம ஜீவந்தர கூறுகையில்,

உலகில் பரவும் எந்தவொரு வைரஸ் தொற்றும் இலங்கையில் பரவுகின்றதா என்பதை ஆராயும் தொழில்நுட்ப வசதிகள் எம்மிடமும் உள்ளது. ஆகவே எம்மால் இதில் தடுமாற்றங்கள் ஏற்படாது. அதேபோல் வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்கு வந்தவர்களின் மாதிரிகள் பெறப்பட்டுள்ளன. அவர்கள் தொற்றுக்குள்ளாகியுள்ளனரா, அவர்கள் ஓமிக்ரோன் வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனரா என்பது குறித்த ஆய்வு அறிக்கை நாளை (இன்று) எமக்கு கிடைக்கும். எதிர்வரும் நாட்களில் அறிக்கையை சுகாதார அமைச்சுக்கு வழங்க முடியும். ஓமிக்ரோன் வைரஸ் குறித்த ஆய்வுகளை உலக சுகாதார ஸ்தாபனம் முன்னெடுத்து வருகின்றது. அவர்களின் இறுதி அறிக்கை வரும் வரையில் எம்மால் எந்த தீர்மானமும் எடுக்க முடியாது. அதேபோல் சகல ஆய்வுகளும் சீனாவின் வூஹான் மாகாணத்தில் பரவிய வைரஸை அடிப்படையாக வைத்தே முன்னெடுக்கப்படுகின்றன.

எனவே தடுப்பூசிகள் இதற்கு வெற்றியளிக்கும் என்பதே சகல வைத்தியர்களினதும் நிலைப்பாடாகும். சுகாதாரத் தரப்பு எமக்கு கொடுத்த மாதிரிகளுக்கு அமைய அதன் பரிசோதனைகளில் இலங்கையில் இதுவரை ஓமிக்ரோன் வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்படவில்லை என்பதை தெரிவிக்க முடியும் என்றார்.


நெஷனல் டெவலப்மன்ட் பேங்க் பி.எல்.சி (NDB) யின், கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கிளைகளில் உள்ள மீட்கப்படாத அடகு வைக்கப்பட்டுள்ள ஆபரணங்கள்

**ஏல விற்பனை மூலம் விற்பனை செய்யப்படும்**

கீழுள்ள கிளைகளில் உள்ள அடகு வைக்கப்பட்ட தங்க ஆபரணங்கள் குறிப்பிடப்பட்டுள்ள திகதிகளில் ஏலத்தில் விற்கப்படும்.
(ஏல விற்பனை காலை 10 மணி தொடக்கம் நடைபெறும்)

| நெஷனல் டெவலப்மன்ட் பேங்க் பி.எல்.சி.யின் கிளைகள் | குறித்த திகதி வரை அடகு வைக்கப்பட்ட நகைகள் மீட்கப்படவில்லை | ஏல விற்பனை நடைபெறும் இடம் மற்றும் திகதி |
|---|---|---|
| அகுரஸ்ஸ<br>அழுத்கம<br>அம்பலாந்தோட்டை<br>அனுராதபுரம்<br>மட்டக்களப்பு<br>சிலாபம்<br>திகன<br>எல்பிட்டிய<br>காலி<br>ஹந்தலை<br>யாழ்ப்பாணம்<br>கடுவெல<br>கொச்சிக்கடை<br>மாத்தளை<br>மதுகம<br>நாரம்மல<br>நாவலப்பிட்டி<br>புத்தளம்<br>இரத்தினபுர<br>திருநெல்வேலி<br>உரகஸ்மன்ஹந்திய<br>வத்தளை<br>வெள்ளவத்தை<br>வென்னப்புவ | 31.03.2020 | **கொட்டாஞ்சேனை கிளை**<br>295, ஜோர்ஜ் ஆர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 13.<br>11 மற்றும் 12 டிசம்பர் 2021 |

மேலே கூறப்பட்ட ஏல விற்பனைகளை நிறுத்தவோ, தாமதிக்கவோ அல்லது இவற்றில் மாற்றங்கள் செய்யவோ நெஷனல் டெவலப்மன்ட் பேங்க் பி.எல்.சி. யிற்கு உரிமை உண்டு.
முகாமையாளர் - நெஷனல் டெவலப்மன்ட் பேங்க் பி.எல்.சி.
40, நவம் மாவத்தை, கொழும்பு 2, இலங்கை. தொ.பே.: 0112 448 448

011 244 8888 www.ndbbank.com
NDB வங்கி
எதிர்கால வங்கியியல் முன்னோடி

## ஆளும்...

(தொடர்ச்சி)

உள்ளது. எனவே ஆளும் கூட்டணியில் உள்ள 11 கட்சிகளும் இனி வெளியேறலாம் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவர் ரோஹண லக்ஸ்மன் பியதாஸ தெரிவித்தார்.

சுதந்திரக் கட்சியின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

ஸ்ரீலங்கா சுதந்திர பொதுஜன பெரமுன கூட்டணி தலைமையிலான அரசாங்கத்தில் சுதந்திரக் கட்சி பிரதான பங்காளிக் கட்சியாக உள்ளது. கூட்டணியினால் ஒன்றிணைந்ததன் காரணமாக அரசாங்கத்தின் தவறான செயற்பாடுகளுக்கும் தீர்மானங்களுக்கும் துணை செல்ல வேண்டிய தேவை எமக்கு கிடையாது.

பல்வேறு எதிர்பார்ப்புக்களுக்கு மத்தியில் நாட்டு மக்கள் 2019ஆம் ஆண்டு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தை தோற்றுவித்தார்கள். மக்களின் எதிர்பார்ப்பு ஏதும் நிறைவேற்றப்படவில்லை. அரசாங்கத்தின் தவறான தீர்மானங்களினால் மக்கள் பொருளாதார ரீதியில் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளார்கள்.

தொழிற்றுறையினரது ஆலோசனைகளுக்கு அரசாங்கம் மதிப்பளிக்கவில்லை. கொழும்பு துறைமுக கடற்பரப்பில் தீ விபத்துக்குள்ளாகி மூழ்கிய எம்.வி.எக்பிரஸ் பேர்ள் கப்பல் தொடர்பில் தொழிற்றுறை நிபுணர்கள் ஆரம்பத்தில் பல விடயங்களை குறிப்பிட்டார்கள். அவர்களின் ஆலோசனைகளுக்கு அரசாங்கம் மதிப்பளிக்கவில்லை. அதன் தாக்கத்தை இன்று மீனவர்கள் எதிர்கொள்கிறார்கள்.

சேதனப் பசளைத் திட்டம் விவசாயத்துறைக்கு பாரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது. சேதனப் பசளைத் திட்டம் நிலைபேறானதாயினும் அதனை கட்டம் கட்டமாக நடைமுறைப்படுத்த வேண்டும். பூட்டான் 2008ஆம் ஆண்டு முதல் சேதன பசளை திட்டத்தை கட்டம் கட்டமாக செயற்படுத்தி வருகிறது.இதுவரையில் முழுமையான இலக்கை அடையவில்லை. விவசாய துறைசார் நிபுணர்களினதும் விவசாயிகளினதும் ஆலோசனைகளை பெறாமல் இரசாயன உரம் கடந்த மே மாதம் தடை செய்யப்பட்டது. முறையான திட்டமிடல் இல்லாமல் சேதனப் பசளைத் திட்டம் அறிமுகப்படுத்தியதன் விளைவை கடந்த 6மாத காலமாக எதிர்கொண்டோம். தவறான தீர்மானத்தின் விளைவை இனிவரும் காலங்களில் எதிர்கொள்ள நேரிடும். அரசாங்கத்தின் செயற்பாடுகள் அதிருப்தியளிக்கின்றன.

ஸ்ரீலங்கா சுதந்திர பொதுஜன பெரமுன கூட்டணியில் உள்ள 11பங்காளிக் கட்சிகள் அரசாங்கத்தில் இருந்து வெகுவிரைவில் வெளியேறலாம். சிறந்த நிர்வாக முகாமைத்துவம் இல்லாத காரணத்தினால் சமூகத்தின் மத்தியில் தோற்றம் பெற்றுள்ள அடிப்படை பிரச்சினைகளுக்கு தீர்வு காணமுடியாத நிலை காணப்படுகிறது என்றார்.

## நெடுந்தீவு...

(தொடர்ச்சி)

கைவிட்டுள்ளதாக இலங்கையிலுள்ள சீன தூதரகம் அதன் உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளது.

வடக்கில் நெடுந்தீவு, அனலைதீவு மற்றும் நயினாதீவு ஆகிய தீவுகளில் இவ்வாறு வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்கு குறித்த சீன நிறுவனம் நடவடிக்கை எடுத்திருந்த நிலையிலேயே இவ்வாறு இந்த திட்டம் கைவிடப்பட்டுள்ளது.

இலங்கையில் இவ்வாறு 3 வேலைத்திட்டங்களையும் கைவிட்டுள்ள சீன நிறுவனம் மாலைதீவில் 12 தீவுகளில் சூரிய மின்னுற்பத்தி வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்காக கடந்த நவம்பர் 29 ஆம் திகதி அந்நாட்டு அரசாங்கத்துடன் ஒப்பந்தம் கையெழுத்திட்டுள்ளது.

வடக்கில் நெடுந்தீவு, அனலைத்தீவு மற்றும் நயினாதீவு ஆகிய தீவுகளிலேயே இவ்வாறு வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்கு குறித்த சீன நிறுவனம் தயாராக இருந்தது. இதற்காக அண்மையில் அமைச்சரவையிலும் அனுமதி வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறிருப்பினும் இந்த வேலைத்திட்டம் தொடர்பில் தமது நாட்டின் பாதுகாப்பினைக் கருத்திற்கொண்டு உன்னிப்பாக அவதானித்து வருவதாக இந்தியா தெரிவித்திருந்தது.

இந்நிலையில் நிதி அமைச்சர் பஷில் ராஜபக்ஷ இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயத்தினை மேற்கொண்டுள்ள சந்தர்ப்பத்திலேயே சீன நிறுவனம் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கையில்...

(தொடர்ச்சி)

ஒமிக்ரோன் வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்படவில்லை என்பதைக் கூறமுடியும் என ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் நோயெதிர்ப்பு மற்றும் மூலக்கூறு மருத்துவப் பிரிவின் பணிப்பாளரும் வைத்திய நிபுணருமான சந்திம ஜீவந்தர தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தினால் நேற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடக சந்திப்பில் கலந்துகொண்டபோதே அவர் இதனை கூறினார். அவர் மேலும் கூறுகையில்,

வைரஸ் பரவலில் இருந்து விடுபட இருக்கும் இரண்டு வழிகளில் ஒன்று, வைரஸ் தொற்று ஏற்படாத வகையில் எம்மை நாமே பாதுகாத்துக்கொள்வதாகும். அதேபோல் தடுப்பூசி ஏற்றிக்கொள்ள வேண்டும். இந்த இரண்டு வழிமுறைகளை தாண்டி எம்மால் மாற்று வழிகளை முன்னெடுக்க முடியாது. தடுப்பூசி ஏற்றிக்கொண்டாலும் ஒமிக்ரோன் வைரஸ் பரவும் என்கிறனர். அல்லது தடுப்பூசிக்கு ஒமிக்ரோன் கட்டுப்படாது என்கின்றனர். இது கேள்வியாக இருந்தாலும் எமக்கு வைரஸ் தொற்று ஏற்பட்டாலும் கூட தடுப்பூசியானது வைரஸின் தாக்கத்தை குறைக்கும். அதேபோல் பூஸ்டர் தடுப்பூசி மேலும் எமக்கு சாதகமாக அமையும்.

உலகில் தடுப்பூசி ஏற்றிக்கொண்ட நாடுகளே வைரஸ் தொற்றுக்களை சரியாக சமாளித்து வருகின்றன. இலங்கையும் ஏனைய நாடுகளை விடவும் முன்னிலையில் உள்ள காரணத்தினால் இது வெற்றியளிக்கும். எவரும் தடுப்பூசி ஏற்றிக்கொள்ளவில்லை என்றால் உடனடியாக தடுப்பூசியை பெற்றுக்கொள்ளுங்கள். பெற்றுக்கொண்டவர்கள் ஆலோசனைகளுக்கு அமைய பூஸ்டர் தடுப்பூசியை ஏற்றிக்கொள்ளுங்கள்.

அதேபோல் வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்கு வந்தவர்களின் மாதிரிகள் பெறப்பட்டுள்ளன. அவர்கள் தொற்றுக்குள்ளாகியுள்ளனரா, அவர்கள் ஒமிக்ரோன் வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனரா என்பது குறித்த ஆய்வு அறிக்கை நாளை (இன்று) எமக்கு கிடைக்கும். எதிர்வரும் நாட்களில் அறிக்கையை சுகாதார அமைச்சுக்கு வழங்க முடியும். சுகாதாரத் தரப்பு எமக்கு கொடுத்த மாதிரிகளுக்கு அமைய அதன் பரிசோதனைகளில் இலங்கையில் இதுவரை ஒமிக்ரோன் வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்படவில்லை என்பதை தெரிவிக்க முடியும் என்றார்.

## போர்க்..

(தொடர்ச்சி)

மனித உரிமை மீறல்கள் தொடர்பில் அவர் பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்தப்படவேண்டும். அதனை முன்னிறுத்தி அமெரிக்காவைப்போன்று அவர் பிரிட்டனுக்குள் நுழைவதற்குத் தடைவிதிக்கப்பட வேண்டும் என்று பிரிட்டன் பாராளுமன்ற உறுப்பினர் பொப் பிளக்மன் அந்நாட்டு வெளிவிவகாரச் செயலாளரிடம் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையின் இறுதிக்கட்டப்போரின் போது இடம்பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்களுடன் தொடர்புபட்டிருப்பதாக நம்பத்தகுந்த ஆதாரங்களின் அடிப்படையில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள இலங்கையின் இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு எதிராக பிரிட்டன் 'மெக்னிற்ஸ்கி' முறையிலான தடையை விதிக்கவேண்டும் என்று பிரிட்டன் பாராளுமன்ற உறுப்பினர்கள் அந்நாட்டு வெளிவிவகாரச் செயலாளரிடம் வலியுறுத்தி வருகின்றனர்.

அமெரிக்காவில் நடைமுறையிலுள்ள மெக்னிற்ஸ்கி சட்டத்தின் ஊடாக மனித உரிமை மீறல்களுடன் தொடர்புடையவர்கள் மற்றும் பாரிய ஊழல் மோசடிகளுடன் சம்பந்தப்பட்டவர்கள் அமெரிக்காவுக்குள் நுழைவதற்கு தடைவிதிக்க முடியும் என்பதுடன் அவர்களின் சொத்துக்களையும் முடக்க முடியும்.

அதன்படி ஏற்கனவே பிரிட்டன் பாராளுமன்ற உறுப்பினர்களான சாரா ஜோன்ஸ், எலியற் கெல்பேர்ன் மற்றும் தெரேஸா வில்லியர்ஸ் ஆகிய மூவரும் ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு எதிராக பிரிட்டன் தடை விதிக்கவேண்டும் என்று வலியுறுத்தியிருந்தனர்.

இந்நிலையில் நான்காவதாக பிரிட்டன் பாராளுமன்ற உறுப்பினர் பொப் பிளக்மனும் சவேந்திர சில்வாவுக்கு எதிராக தடை கோரிக்கையை முன்வைத்து காணொளியொன்றை வெளியிட்டுள்ளார். அக்காணொளியின் ஊடாக அவர் மேலும் கூறியிருப்பதாவது:

பிரிட்டனின் சர்வதேச தடை வழிகாட்டல்களுக்கு அமைவாக இலங்கை இராணுவத்தளபதி ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு எதிராக தடைவிதிக்கப்பட வேண்டும் என்று சர்வதேச உண்மைக்கும் நீதிக்குமான செயற்றிட்டம் பிரிட்டன் வெளிவிவகாரச் செயலாளரிடம் கோரியுள்ளது.

இலங்கையில் 2009ஆம் ஆண்டில் முடிவுக்குக்கொண்டுவரப்பட்ட போரின்போது ஆயிரக்கணக்கான பொதுமக்கள் தஞ்சமடைந்திருந்த 'யுத்த சூனிய வலயங்களில்' ஷெல் தாக்குதல்களை நடத்தியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள இலங்கை இராணுவத்தின் 58ஆவது படைப்பிரிவின் கட்டளைத்தளபதியாக ஜெனரல் சவேந்திர சில்வா செயற்பட்டுள்ளார். அதுமாத்திரமன்றி இறுதிக்கட்டப்போரின்போது பல நூற்றுக்கணக்கானோர் படையினரிடம் சரணடைந்தபோது அந்த இடத்தில் சவேந்திர சில்வாவும் இருந்ததை உறுதிப்படுத்திய கண்கண்ட சாட்சியங்களின் வாக்குமூலங்களையும் சர்வதேச உண்மைக்கும் நீதிக்குமான செயற்றிட்டம் சமர்ப்பித்துள்ளது. அவர்களில் பலர் காணாமலாக்கப்பட்டிருக்கின்றார்கள். அவ்வாறு காணாமலாக்கப்பட்டவர்களின் தாய்மார் அவர்களுக்கு என்ன நேர்ந்தது என்பதை அறிந்துகொள்வதற்காக பலவருடங்களாக அவர்களின் புகைப்படங்களுடன் வீதிகளில் இறங்கிப்போராடி வருகின்றார்கள். இருப்பினும் இன்றுவரை அந்தக் கேள்விக்குரிய பதில் கிட்டவில்லை.

போரின்போது சவேந்திர சில்வா தலைமையிலான 58 ஆவது படைப்பிரிவினால் நிகழ்த்தப்பட்ட சட்டவிரோதமான படுகொலைகள் உள்ளடங்கலாக மிகமோசமான மனித உரிமை மீறல்கள் தொடர்பான பொறுப்புக்கூறலை உறுதிசெய்யும் நோக்கில் கடந்த 2020 ஆம் ஆண்டில் அமெரிக்க இராஜாங்கத்திணைக்களம் சவேந்திர சில்வாவுக்கு எதிராக பயணத்தடை விதித்தது.

இவ்வாறானதொரு பின்னணியில் நாம் (பிரிட்டன்) அவருக்கெதிராகத் தடைவிதிக்க வேண்டிய தருணம் இதுவாகும். அவர் பிரிட்டனுக்குள் நுழைவதை அனுமதிக்கக்கூடாது. சவேந்திர சில்வா 58ஆவது படைப்பிரிவின் கட்டளைத்தளபதியாக இருந்தபோது நிகழ்த்தப்பட்ட மிகமோசமான மனித உரிமை மீறல்கள் தொடர்பிலும் அதன்போது அவரால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் குறித்தும் பொறுப்புக்கூறலுக்குட்படுத்த வேண்டும் என்று பிளக்மன் வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தேசிய...

(தொடர்ச்சி)

எடுத்துள்ளதாக மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் சபையில் குற்றம் சுமத்தினார்.

தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதாக ஆட்சிக்கு வந்தவர்களால் பொதுமக்களின் வீடுகளின் சமையலறையை பாதுகாக்க முடியாத நிலைமையே ஏற்பட்டுள்ளதாகவும் கூறினார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற துறைமுகங்கள் அமைச்சு மற்றும் நீர்வளங்கள் அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடுகள் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றியபோதே அவர் இதனை கூறினார். அவர் மேலும் உரையாற்றுகையில்,

அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவுக்கு விற்று, துறைமுகத்துக்கு வரிச்சலுகை வழங்கும் சட்டமூலம் கொண்டுவரப்பட்டது. அதனை எதிர்க்க ராஜபக்ஷவினரோ இன்று கூச்சலிடும் நபர்களோ வரவில்லை. நாமே எதிர்த்து வாக்களித்தோம். அதுமட்டுமல்ல தேசிய வளங்களை விற்கவேண்டாம், நாம் ஆட்சிக்கு வந்தவுடன் மீளவும் அரசமயமாக்குவோம் என மஹிந்த ராஜபக்ஷ கூறினார். அவ்வாறு கூறியவர்கள் இன்று கொழும்பு துறைமுகத்தை இந்தியாவுக்கு விற்க நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இன்று நாட்டில் மக்களுக்கு குடிநீர் இல்லை. உணவும் இல்லை. மின்சாரமும் இல்லை. மலையக மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்தும் அரசாங்கம் கவனத்தில் கொள்ள வேண்டும். அதேபோல் எரிவாயு இறக்குமதியின் பின்னணியில் பாரிய சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. துறைமுகத்தில் இருந்து எரிவாயு சிலிண்டர்களை இறக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாக குறித்த எரிவாயு நிறுவனம் கூறுகின்றது. இதேநிலையில் வீடுகளில் சமையல் எரிவாயு வெடிப்புகள் குறித்தும் கவனம் செலுத்தியாக வேண்டும்.

தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதாக ஆட்சிக்கு வந்தவர்களால் நாட்டு மக்களின் சமையலறையை பாதுகாக்க முடியாத நிலைமையே ஏற்பட்டுள்ளது. மக்கள் அச்சத்தில் உள்ள நிலையில், முதலில் சந்தையில் உள்ள சிலிண்டர்களை பெற்றுக்கொண்டு மாற்று சிலிண்டர்கள் வழங்க துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த சர்ச்சையின் பின்னணி என்னவென்பதை கருத்தில் கொள்ள வேண்டும். எரிவாயு கலப்பு உண்மையென்பதை சகல தரப்பும் ஏற்றுக்கொண்டுள்ளது. அதேபோல் நிறையில் மாற்றங்களை செய்வதாகவும் கூறினர். ஆனால் இந்த இரண்டு செயற்பாடுகளும் தவறு. நிறுவன நலன்களை கருத்திற்கொண்டே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. ஆகவே எரிவாயு வெடிப்பு பிரச்சினைக்கு உடனடியாக அரசாங்கம் தீர்வுகண்டு மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் என்றார்.

## பயங்கரவாத...

(தொடர்ச்சி)

கொழும்பு மேல் நீதிமன்றின் நீதிபதி அமல் ரணராஜா, 15 பக்கங்களைக் கொண்ட தீர்ப்பினை அறிவித்து அசாத் சாலியை விடுதலை செய்தார். அசாத் சாலியின் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி மைத்திரி குணரத்ன, குற்றவியல் சட்டத்தின் 200ஆவது அத்தியாயத்துக்கு அமைய, பிரதிவாதி தரப்பு சாட்சியங்களை ஆராயாமலேயே பிரதிவாதி அசாத் சாலியை விடுவிக்க வேண்டும் என முன்வைத்திருந்த வாதங்களுக்கு அமைய, நேற்று தீர்ப்பினை அறிவித்தே நீதிபதி அமல் ரணராஜா அசாத் சாலியை குற்றச்சாட்டுக்களிலிருந்து விடுவித்து விடுதலை செய்தார். அதனூடாக அசாத் சாலியின் 261 நாள் சிறைவாசம் நிறைவுக்கு வந்தது.

அசாத்சாலிக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றில் சட்ட மா அதிபர் எச்.சி./2778/2021 எனும் இலக்கத்தில் கீழ் கடந்த ஜூன் 25ஆம் திகதி வழக்குத் தொடுத்தார். அதில் அசாத்சாலிக்கு எதிராக இரு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டன. கடந்த 2021ஆம் ஆண்டு மார்ச் 9 ஆம் திகதி அல்லது அதனை அண்மித்த நாளொன்றில் கொழும்பு மேல் நீதிமன்ற அதிகார எல்லைக்கு உட்பட்ட பகுதியில் ஊடக சந்திப்பொன்றினை நடத்தி மத, இன பேதங்களை தோற்றுவிக்கும் வன்மத்தை தூண்டும் வகையில் கருத்து வெளியிட்டதாக கூறி 1988ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க சட்டம் மற்றும் 1982 ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க சட்டங்களால் திருத்தப்பட்ட 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க பயங்கரவாத தடைச்சட்டத்தின் 2 (1) ஏ பிரிவுடன் இணைத்து பார்க்க வேண்டிய 2 (2) ( ஈ ) அத்தியாயத்தின் கீழ் தண்டனைக்குரிய குற்றம் ஒன்றினை அசாத்சாலி புரிந்துள்ளதாக முதல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டிருந்தது.

இதே சம்பவம் காரணமாக 2007ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க சிவில், அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச இணக்கப்பாட்டு சட்டத்தின் (ஐ.சி.சி.பி.ஆர்.) 3 (1) ஆம் உறுப்புரையுடன் இணைத்து பார்க்க வேண்டிய 3 (3) ஆம் உறுப்புரையின் கீழ் தண்டனைக்குரிய குற்றம் ஒன்றினை அசாத் சாலி புரிந்துள்ளதாக அவர் மீது முன் வைக்கப்பட்டுள்ள இரண்டாவது குற்றச்சாட்டில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

### 56 சாட்சியாளர்கள்

இக்குற்றச்சாட்டுக்களை நிரூபிப்பதற்காக சட்ட மா அதிபரால் 56 சாட்சியாளர்களின் பெயர்ப் பட்டியல் மேல் நீதிமன்றுக்கு பட்டியலிட்டு கொடுக்கப்பட்டிருந்தது. அத்துடன் சான்றுப் பொருட்களாக இறுவட்டுக்கள், மெமரி சிப், ஊடக சந்திப்பு பிரதி, கடிதம் ஒன்று ஆகியனவும் சட்ட மா அதிபரால் பட்டியலிடப்பட்டிருந்தன.

மேல் நீதிமன்ற நீதிபதி அமல் ரணராஜா முன்னிலையில் இந்த வழக்கின் சாட்சி விசாரணைகள், கடந்த நவம்பர் 2,9,11,19ஆம் திகதிகளில் இடம்பெற்றிருந்தன. வழக்குத் தொடுநர் சட்ட மா அதிபர் சார்பில் மன்றில் ஆஜராகிய சிரேஷ்ட அரச சட்டவாதி வசந்த பெரேராவின் நெறிப்படுத்தலில் சாட்சியம் பதிவு செய்யப்பட்டதுடன், அசாத்சாலிக்காக மன்றில் அசான் நாணயக்கார, சரித்த குணரத்ன ஆகிய சட்டத்தரணிகளுடன் ஆஜராகிய ஜனாதிபதி சட்டத்தரணி மைத்திரி குணரத்னவால் அச்சாட்சிகள் குறுக்கு விசாரணை செய்யப்பட்டனர்.

இந்நிலையில் கடந்த நவம்பர் 19 ஆம் திகதி மனுதாரர் தரப்பு சாட்சி விசாரணை நிறைவு செய்யப்பட்ட நிலையில், பிரதிவாதி தரப்பின் சாட்சியங்களை ஆராயாமலேயே குற்றவியல் சட்டத்தின் 200 ஆவது அத்தியாயத்தின் கீழ் அசாத்சாலியை விடுவிக்க வேண்டும் என மன்றில் வாதம் முன்வைக்கப்பட்டது. அதற்கமைய, தீர்ப்புக்காக இந்த வழக்கு நேற்று (2) வரை ஒத்தி வைக்கப்பட்டிருந்தது.

### சக்கர கதிரையில் வந்த அசாத் சாலி

நேற்று தீர்ப்புக்காக இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, பிரதிவாதியான அசாத்சாலி சக்கர கதிரையில் மன்றுக்கு அழைத்து வரப்பட்டிருந்தார். விளக்கமறியல் உத்தரவின் கீழ், சிறைக்காவலர்களின் பாதுகாப்பில் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் கட்டணம் செலுத்தும் சிகிச்சை அறையில் சிகிச்சை பெற்று வந்த அவர், சிறை அதிகாரிகள் ஊடாக இவ்வாறு மன்றில் ஆஜர் செய்யப்பட்டிருந்தார்.

### நீதிபதியின் தீர்ப்பு

இந்நிலையில் இவ்வழக்கின் தீர்ப்பானது நேற்று முற்பகல் 10.30 மணிக்கு நீதிபதி அமல் ரணராஜாவால் அறிவிக்கப்பட்டது. 15 பக்கங்களைக் கொண்ட தீர்ப்பில் முக்கிய பகுதிகளை நீதிபதி அமல் ரணராஜா, நீதிமன்ற மொழிபெயர்ப்பாளர் ஊடாக திறந்த மன்றில் அறிவித்தார்.

இவ்வழக்கில், இரு தனியார் தொலைக்காட்சிகளின் 52 செக்கன்கள், 1.36 நிமிடங்கள் நீளம் கொண்ட இரு செய்தி காணொளிகள் தொடர்பிலும் பிரதிவாதி கடந்த மார்ச் 9 ஆம் திகதி நடத்திய ஊடக சந்திப்பின் முழுமையான வடிவமும் விரிவாக ஆராயப்பட்டது. இதற்காக சாட்சியாளர்கள் அளித்த சாட்சியங்களும் கவனத்தில் கொள்ளப்பட்டன.

செம்மைப்படுத்தப்பட்டு, செய்தி கனதி கொண்டது என தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பப்பட்டிருந்த செய்தி காணொளிகள் ஊடாக தமது உணர்வுகள் தூண்டப்பட்டதாகவும் பகை உணர்வு, இனங்களுக்கு இடையேயான வன்மம் ஆகியவற்றை தூண்ட அது அழைப்புவிடுப்பதாக அமைந்திருந்ததாகவும் சாட்சியாளர்கள் சாட்சியமளித்திருந்தனர். எனினும் முழுமையான ஊடகவியலாளர் சந்திப்பின் காணொளியை ஆராயும் போது, கொவிட் 19 நிலைமையின் போது முஸ்லிம்களின் சடலங்களை முதலில் அடக்கம் செய்ய அனுமதிக்காமல் தகனம் செய்துவிட்டு, பின்னர் அடக்கம் செய்ய அனுமதியளித்தமையை மையப்படுத்தி பிரதிவாதி தனது விமர்சனங்களை முன் வைத்துள்ளார்.

அதனைவிட, தனது அரசியல் கருத்துக்கு உட்பட்டு, பிரதிவாதி ஒரே நாடு ஒரே சட்டம் எனும் கொள்கையை விமர்சித்துள்ளார். அத்துடன் பிரதிவாதி அவரது அரசியல் கொள்கையிலிருந்தவாறே, தற்போதைய ஆட்சியாளர்கள் மக்களை ஏமாற்றுகின்றமை, அரசியலுக்காக அவர்கள் பயன்படுத்தும் உக்திகள் தொடர்பிலும் விமர்சனங்களை முன் வைத்துள்ளார். இதனைவிட பயங்கரவாதம், அடிப்படைவாதம் ஆகியவற்றுக்கு எதிரான கருத்துக்களை முன்வைத்துள்ளார். அனைவரும் பேதங்களை மறந்து நாட்டின் முன்னேற்றுத்துகாக ஒன்று சேர வேண்டும் என அழைப்பு விடுத்துள்ளார். தேசிய ஒற்றுமையை வலியுறுத்தியுள்ளார். அசாத்சாலி ஏதேனும் ஒன்றினை கூறுவார், அதனை மையப்படுத்தி அவரை சிறையில் அடைக்கலாம் என அரசாங்கம் பார்த்துக்கொண்டிருப்பதாகவும் அதற்கு தான் அச்சப்படப்போவதில்லை எனவும் அவர் கூறியுள்ளார்.

சஹ்ரானுக்கு எதிராக, கோட்டாபய ராஜபக்ஷ முதல் இருந்த அனைத்து பாதுகாப்பு செயலர்களுக்கும் தான் முறையிட்டதாகவும் ஒருபடி மேலே சென்று ஜம் இய்யதுல் உலமா சபையினரையும் அழைத்துச் சென்று முறையிட்டதாகவும் அவர் அதில் கூறியுள்ளார். நாட்டில் அமுலிலுள்ள தனியார் சட்டங்கள் தொடர்பில் அவர் பேசியுள்ளார். தேச வழமை சட்டம், கண்டிய சட்டம், முஸ்லிம் விவாக விவாகரத்து சட்டம் தொடர்பில் பேசியுள்ளார். அச்சட்டங்கள் குறித்த அவரது கருத்தினை பதிவு செய்துள்ளார்.

நாட்டில் முஸ்லிம் விவாக விவாகரத்து சட்டம், முஸ்லிம்களின் சொத்துக்கள் குறித்த சட்டம் அமுலில் உள்ளன. அவை ஏற்றுக்கொள்ளப்பட்ட சட்டங்கள். அந்த சட்டங்கள் புனித அல் குர்ஆன், ஹதீசை அடிப்படையாக கொண்டு வகுக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் அச்சட்டங்களை சுயமாக எவரேனும் திருத்த முற்பட்டால் அவற்றை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை எனவும் அவற்றை திருத்தம் செய்ய தமது கருத்துக்களையும் பெற்றுக்கொள்ள வேண்டும் என அர்த்தப்படும் விதமாகவும் பிரதிவாதி கருத்து வெளியிட்டுள்ளார்.

பிரதிவாதியின் சிங்கள மொழி கையாள்கை தொடர்பில் அவதானம் செலுத்தும் போது, அவர் அதில் பூரண சிறப்பு தேர்ச்சி உள்ளவராக கருதமுடியாத நிலையில், 'ஏனைய சட்டங்களையே' அவர் நாட்டின் சட்டம் என குறிப்பிட்டுள்ளதாக தோன்றுகிறது. இந்நிலையில், குறித்த ஊடக சந்திப்பின் ஊடாக மத, இன பேதங்களை தோற்றுவிக்கும் வன்மத்தை தூண்டும் கருத்துக்களை பிரதிவாதி வெளியிடவில்லை என புலனாகிறது.

வழக்குத் தொடுநர் தரப்பு, பிரதிவாதி மத, இன பேதங்களை தோற்றுவிக்கும், வன்மத்தை தூண்டும் கருத்துக்களை வெளியிட்டதாக சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்க தவறியுள்ளது. எனவே அந்த சந்தேகத்தின் பிரதிபலனை பிரதிவாதிக்கு அளித்து, அவரை அனைத்து குற்றச்சாட்டுக்களில் இருந்தும் இந்த நீதிமன்றம் விடுவித்து விடுதலை செய்கிறது என தீர்ப்பறிவிக்கப்பட்டது.

இந்த தீர்ப்பு அறிவிக்கப்பட்ட பின்னர், அசாத்சாலிக்காக மன்றில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி மைத்திரி குணரத்ன மன்றில் விஷேடமாக கருத்துக்களை பதிவு செய்தார். இந்த தீர்ப்புக்கு நீதிபதிக்கு நன்றி தெரிவித்த அவர், இந்த தீர்ப்பு ஊடாக நீதி சாகவில்லை என்பது மீண்டும் உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் நாட்டின் மக்களுக்கு நீதிமன்றம் மீதான நம்பிக்கை அதிகரிக்க வழியேற்படுத்தியுள்ளதாகவும் தெரிவித்தார். இந்த வழக்கில் ஆஜரான சட்ட மா அதிபர் திணைக்களத்தின் அரச சட்டவாதி வசந்த பெரேராவுக்கும் விசாரணை நடத்திய சி.ஐ.டி.யின் அதிகாரிகளுக்கும் பக்கச்சார்பின்றி செயற்பட்டமைக்காக நன்றி தெரிவித்தார்.

### வழக்கின் பின்னணி

அசாத்சாலி பிரதானமாக இரு விடயங்களை மையப்படுத்தி கடந்த 2021 மார்ச் 16 ஆம் திகதி கைது செய்யப்பட்டார். ஒன்று கடந்த 2021 மார்ச் 9 ஆம் திகதி அல்லது அதனை அண்மித்த நாளொன்றில், இன, மத குழுக்களிடையே முரண்பாடுகளை ஏற்படுத்தும் விதமாக ஊடக சந்திப்பொன்றினை நடத்தி வெளியிட்ட கருத்துக்களை மையப்படுத்தியதாகும். மற்றையது மாவனெல்லை புத்தர் சிலை தகர்ப்பு விவகார சந்தேக நபர்களுக்கு உதவியளித்தமை தொடர்பிலான விவகார விசாரணையாகும்.

இந்நிலையில் அசாத்சாலிக்கு எதிராக கடந்த 2021 மார்ச் 9ஆம் திகதி அல்லது அதனை அண்மித்த நாளொன்றில், இன, மத குழுக்களிடையே முரண்பாடுகளை ஏற்படுத்தும் விதமாக ஊடக சந்திப்பொன்றினை நடத்தி வெளியிட்ட கருத்துக்கள் தொடர்பில் கொழும்பு மேல் நீதிமன்றில் கடந்த ஜூன் 25 ஆம் திகதி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க பயங்கரவாத தடைச் சட்டம் மற்றும் 2007 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க சிவில், அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச இணக்கப்பாட்டுச் சட்டம் ஆகியவற்றின்கீழ் சட்ட மா அதிபர் சஞ்ஜய் குமார் ராஜரத்னம் இது குறித்த குற்றப்பகிர்வுப் பத்திரிகையை முன்வைத்துள்ளார்.

எனினும் அசாத்சாலிக்கு எதிராக பயங்கரவாத தடைச் சட்டத்தின்கீழ் அல்லது ஐ.சி.சி.பி.ஆர். எனும் சிவில் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச இணக்கப்பாட்டு சட்டத்தின்கீழ் குற்றம் சுமத்த எந்த சாட்சியங்களும் இல்லை என்பதே நீதிமன்றின் முடிவு என கொழும்பு பிரதான நீதிவான் புத்திக ஸ்ரீராகல கடந்த செப்டெம்பர் 14 ஆம் திகதி அறிவித்திருந்தார்.

'இந்த விடயத்தில் கொழும்பு மேல் நீதிமன்றில் குற்றப் பத்திரிகை ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அவ்வாறான பின்னணியில், அக்குற்றப் பத்திரிகையுடன் தொடர்புடைய பிரதிவாதியை, கீழ் நிலை நீதிமன்றமான நீதிவான் நீதிமன்றின் ஊடாக விடுவிக்க, எந்த நீதிமன்ற அதிகாரமும் இல்லை' என அதன்போது குறிப்பிட்டிருந்தார்.

எனினும் மாவனெல்லை புத்தர் சிலை விவகாரத்தில், அசாத்சாலிக்கு எதிராக குற்றம் சுமத்த எந்த ஆதாரங்களும் இல்லை என சி.ஐ.டி.யே நீதிமன்றுக்கு அறிவித்திருந்தது. அத்துடன் கடந்த ஏப்ரல் 5ஆம் திகதி அசாத்சாலி சார்பில் கைது மற்றும் தடுப்புக் காவலை சவாலுக்கு உட்படுத்தி சிரேஷ்ட சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசாவால் உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டது.

சட்ட மா அதிபர், பொலிஸ் மா அதிபர் சி.டி. விக்ரமரத்ன, சி.ஐ.டி. பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் நிசாந்த டி சொய்ஸா, (அப்போதைய பணிப்பாளர்) சி.ஐ.டி.யின் விஷேட விசாரணைப் பிரிவு இலக்கம் 1 இன் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் ஜயந்த பயாகல, பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர, குறித்த அமைச்சின் செயலர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரால் ஜகத் அல்விஸ் ஆகியோர் அம்மனுவில் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டிருந்தனர்.

தொடர்ச்சியாக சி.ஐ.டி.யில் தடுத்து வைக்கப்பட்டிருந்த அசாத்சாலி, கடந்த மே 18ஆம் திகதி திடீர் சுகயீனம் காரணமாக சி.ஐ.டி.யினரால் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். இதன்போதே அவருக்கு இருதய கோளாறுக்கான சிகிச்சைகள் அளிக்கப்பட்டு வருகின்றன. அசாத்சாலி, கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் நிலையில், அவரை தற்போதைய சூழலில் சுகாதாரத் துறையின் அனுமதியுடன் கட்டணம் செலுத்தும் சிகிச்சைப் பிரிவொன்றுக்கு மாற்ற முடியும் என உயர் நீதிமன்றம் கடந்த மே 21ஆம் திகதி அறிவித்தது. அதன்படி இதுவரை, தேசிய வைத்தியசாலையின் கட்டணம் செலுத்தும் சிகிச்சை அறையில் சிகிச்சை பெற்று வரும் அசத்சாலி, தீர்ப்பின் பின்னர் வைத்தியசாலைக்கே மேலதிக சிகிச்சைகளுக்காக அழைத்துச் செல்லப்பட்டார்.

## அம்பாந்தோட்டை துறைமுகத்தை

# 99 வருடங்களுக்கு வழங்கிய தீர்மானம் குறித்து விசாரணை வேண்டும்

## விஜேதாச ராஜபக்ஷ சபையில் கோரிக்கை

(ஆர்.யசி,எம்.ஆர்.எம்.வசீம்)

அம்பாந்தோட்டை துறைமுகத்தை நிர்மாணித்த நிறுவனம் துறைமுகத்தை 35 வருடங்களுக்கு மாத்திரம் கேட்டிருந்த நிலையில், அதனை மறுத்து 99 வருடங்களுக்கு கேட்ட நிறுவனத்துக்கு வழங்குவதற்கு கடந்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருந்தது. இதுதொடர்பில் ஆணைக்குழு அமைத்து விசாரணை நடத்தவேண்டும் என ஆளும் கட்சி உறுப்பினர் விஜேதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சு, நீர்வழங்கல் அமைச்சு மற்றும் ராஜாங்க அமைச்சுக்கள் மீதான வரவு செலவு திட்ட குழுநிலை விவாதத்தில், அமைச்சர் ரோஹித்த அபேகுணவர்த்தன உரையாற்றுகையில், அம்பாந்தோட்டை துறைமுகத்தினால் தற்போது கிடைக்கப்பெற்று வரும் வருமானம் தொடர்பாகவும் கடந்த அரசாங்கம் அந்த துறைமுகத்தை 99 வருடங்களுக்கு குத்தகைக்கு வழங்கியது தொடர்பாகவும் குறிப்பிட்டுக்கொண்டிருக்கையில், சபையில் இருந்த விஜேதாச ராஜபக்ஷ, ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை எழுப்புகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

அம்பாந்தோட்டை துறைமுகத்தை நிர்மாணித்த நிறுவனம், இந்த துறைமுகத்தை 35வருடங்களுக்கு 780 மில்லியன் டொலர் செலுத்துவதற்கு கேட்டிருந்தது. என்றாலும் ஆட்சியில் இருந்த அரசாங்கம் 35வருடத்துக்கு கேட்ட நிறுவனத்துக்கு வழங்காது தற்போது வழங்கி இருக்கும் நிறுவனத்துக்கு 99வருடங்களுக்கு வழங்கி இருக்கின்றது. இதுதொடர்பாக அமைச்சரவையில் நான் பல விடயங்களை எடுத்துக்கூறினேன். அதன் காரணமாகவே நான் அமைச்சுப்பதவியில் இருந்து நீக்கப்பட்டேன். அதுதொடர்பில் மகிழ்ச்சியடைகிறேன்.

எனவே அம்பாந்தோட்டை துறைமுகத்தை நிர்மாணித்த நிறுவனமே குறித்த துறைமுகத்தை 35வருடங்களுக்கு கேட்டிருந்த நிலையில், துறைமுகத்தை அந்த நிறுவனத்துக்கு வழங்காமல் 99 வருடங்களுக்கு கேட்ட நிறுவனத்துக்கு வழங்குவதற்கு ஏன் தீர்மானித்தார்கள் என்பது தொடர்பாக ஆணைக்குழு ஒன்றையாவது அமைத்துஅது தொடர்பில் விசாரணை மேற்கொள்ள வேண்டும் என்றார்.

## திடீரென தீப்பற்றிய மோட்டார் சைக்கிள்

### புத்தளம் தில்லையடி பகுதியில் சம்பவம்

(புத்தளம் மேலதிக நிருபர்)

புத்தளம் தில்லையடி பகுதியில் உள்ள இரவு நேர ஹோட்டலுக்கு முன்பாக நேற்று முன்தினமிரவு மோட்டார் சைக்கிள் ஒன்று திடீரென தீப்பற்றி எரிந்துள்ளது. தில்லையடி பகுதியில் உள்ள ஹோட்டலில் உணவு எடுத்துச் செல்வதற்காக வருகை தந்த நபர் ஒருவருடைய மோட்டார் சைக்கிளே இவ்வாறு தீப்பிடித்துள்ளது.

குறித்த நபர் ஹோட்டலுக்கு முன்பாக மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு உணவுத் தேவைகளை முடித்துக் கொண்டு பயணிப்பதற்காக மீண்டும் மோட்டார் சைக்கிளை இயக்க ஆரம்பித்துள்ளார். இதன் போதே, குறித்த மோட்டார் சைக்கிள் திடீரென தீப்பற்றி எரிய ஆரம்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து , குறித்த ஹோட்டல் உரிமையாளர் உட்பட பணியாளர்களும் ஹோட்டலுக்கு வருகை தந்தவர்களும் கூட்டாக இணைந்து சில நிமிடங்களில் தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

எனினும் குறித்த மோட்டார் சைக்கிள் முழுமையாக எரிந்துள்ளது. உயிர்ச் சேதங்கள் எதுவுமில்லை என தெரிவிக்கப்படுகிறது. நாட்டில் தற்போது சமையல் எரிவாயுக்கள் திடீரென வெடித்துச் சிதறும் சம்பவங்கள் இடம்பெற்று வரும் நிலையில், இவ்வாறு மோட்டார் சைக்கிள் தீப்பிடித்து எரிந்தமை தில்லையடி பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.


## ஐடியல் பினான்ஸ் லிமிடெட்

கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஐடியல் பினான்ஸ் லிமிடெட் கிளைகளில் 31 ஒக்டோபர் 2021 வரை மீட்கப்படாமல் முதிர்ச்சியடைந்த மற்றும் சலுகை காலத்தை கோராத நபர்களின் ஆபரணங்கள் **28 டிசம்பர் 2021 திகதி காலை 10.00 மணிக்கு** கீழுள்ள இடங்களில் பொது ஏலத்தின் மூலம் விற்பனை செய்யப்படும்.

இல. 339, பிரதான வீதி, பண்டாரவளை
இல. 09/C, பிரதான வீதி, அநுராதபுரம்
இல. 117 பிரதான வீதி, எல்பிடிய
இல. 408, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்
இல. 34, சூரதிஸ்ஸ மாவத்தை, குருநாகலை
இல. 100, புதிய பஸ் தரிப்பிடம், மொணராகலை
இல. 28, பல்லேகம, எம்பிலிபிடிய
இல. 91, அநாகரிக்க தர்மபால மாவத்தை, மாத்தறை
இல.119/A கொட்டுகொடல்ல வீதி, கண்டி
இல. 03, பௌத்தாலோக்க மாவத்தை, கம்பஹா
இல. 164, பஸார் வீதி, வவுனியா
இல. 28, நுவரெலிய வீதி, வெலிமட.

*condition applied

IDEAL Finance

ஐடியல் பினான்ஸ் லிமிடெட்
இல.299, டாக்டர். கொல்வின் ஆர். டி சில்வா மாவத்தை (யூனியன் பிளேஸ்), கொழும்பு 02.
தொடலைபேசி. 0112396060 தொலைநகல் : 0112396757

ஏலத் திகதியை மாற்றும் உரிமை ஐடியல் பினான்ஸ்க்கு உண்டு



1 TEAM 1 NATION
Sri Lanka Cricket

## 2021ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கையை வடிவமைத்தல் மற்றும் மேம்படுத்தல் இலங்கை கிரிக்கட்

**(Design and Development of the Annual Report 2021 Sri Lanka Cricket)**

### ஆர்வ வெளிப்பாடுகளுக்கான (EOI) அழைப்பு

உலகளாவிய ரீதியில் அங்கீகாரம் பெற்ற சர்வதேச நாமமான இலங்கை கிரிக்கட் (SLC) நிறுவனமானது தமது 2021ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கையை திட்டமிடல், வடிவமைத்தல் மற்றும் அச்சு சேவைகள் போன்றவற்றை மேற்கொள்ள பிரபலமான சந்தைப்படுத்தல் தொடர்பாடல் / வடிவமைத்தல் மற்றும் மேம்படுத்தல் சேவைகளை வழங்கும் துறைசார் நிறுவனங்களிடமிருந்து ஆர்வ வெளிப்பாடுகளைக் கோருகிறது.

ஆர்வமுள்ள நிறுவனங்கள் அதன் சுருக்கமான விபரம் மற்றும் நற்சான்றிதழ்களுடனான ஆர்வ வெளிப்பாடு (EOI) கடிதங்களை **sponsorship@srilankacricket.lk** என்ற மின்னஞ்சல் முகவரிக்கு **2021 டிசம்பர் 08ஆம் திகதி மதியம் 12.00 மணி** அல்லது அதற்கு முன் SLCஇற்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

இது தொடர்பிலான மேலதிக விபரங்களை அறிந்துகொள்ள +94 779 429035 என்ற இலக்கத்தின் ஊடாக இலங்கை கிரிக்கட் நிறுவனத்தின் வணிக அபிவிருத்தியின் முகாமையாளரை தொடர்புகொள்ளவும்.

ஆர்வ வெளிப்பாடுகளை முன்வைக்கும் (EOI) மனுதாரர்களுக்கு மேற்குறித்த தலைப்பு தொடர்பில் இலங்கை கிரிக்கட் நிறுவனத்தின் தேவைகள் மற்றும் வழிகாட்டல்கள் ஆகிய அடங்கிய பத்திரங்கள் (RFP) இலங்கை கிரிக்கட் நிறுவனத்தால் வழங்கப்படும்.

எவ்வித அறிவித்தல்களுமின்றி இவ் ஆர்வ வெளிப்பாட்டினை தடைசெய்தல், திருத்தியமைத்தல் அல்லது மாற்றம் செய்வதற்கான முழு உரிமையும் இலங்கை கிரிக்கட் நிறுவனத்திற்கு உண்டு.

பிரதான நிறைவேற்று அதிகாரி
இலங்கை கிரிக்கட்



## பொதுமக்களுக்கான அறிவித்தல்

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

வெளிநாடுகளில் தொழில்புரிகின்ற சில இலங்கையர்கள், இலங்கையில் தம்மைச் சார்ந்திருக்கின்றவர்களுக்கு பணம் அனுப்புகின்ற போது, அறிந்தோ அறியாமலோ, சட்டத்திற்குப் புறம்பான வழிகளூடாக பணத்தை அனுப்புகின்றனர் என இலங்கை மத்திய வங்கிக்கு தகவல் கிடைத்துள்ளது.

அவ்வாறு பணம் அனுப்புகின்ற போது, சில தரகர்கள், வெளிநாட்டில் தொழில்புரிகின்ற இலங்கையர்களின் வெளிநாட்டு நாணயத்தைச் சேகரித்து, அதற்குச் சமனான தொகையை இலங்கை ரூபாவில் அத்தகைய பணியாளர்களைச் சார்ந்துள்ளோரின் கணக்குகளுக்கு நிதியியல் முறைமையினூடாக பணமாக அல்லது பரிமாற்றல்களாக வரவுவைக்கின்ற நிகழ்வுகள் தொடர்பில் மத்திய வங்கிக்கு தெரியவந்துள்ளது. பணம் தூயதாக்குதலைத் தடுப்பதற்கான சட்டத்தின் ஏற்பாடுகளை மீறுகின்றமைக்காக சட்டத்தின் நியதிகளுக்கமைய அவர்கள் தண்டனை விதிக்கத்தக்க தவறுகளைப் புரிகின்றனர் என்பது பற்றி பொதுமக்கள் அறியாதிருக்கக்கூடும். மேலும், கிடைக்கப்பெற்ற தகவல்களின் அடிப்படையில், அத்தகைய கொடுக்கல்வாங்கல்கள் போதைப்பொருள் கடத்தலுடன் அல்லது வேறு சட்டவிரோத நடவடிக்கைகளுடன் தொடர்புடையதாக இருக்கக்கூடுமென சந்தேகம் எழுந்துள்ளது.

ஆகவே, அறிந்தோ, அறியாமலோ இத்தகைய சட்டரீதியற்ற நடவடிக்கைகளுக்குள் சிக்கிக்கொள்ள வேண்டாமென்று வெளிநாட்டில் வதிகின்ற அனைத்து இலங்கையர்களுக்கும் அதேபோன்ற அவர்களைச் சார்ந்திருப்போருக்கும் இலங்கை மத்திய வங்கி அறிவிக்கின்றது.

சட்டத்திற்குப் புறம்பான தொழிற்படுத்துநர்களால் பாதிக்கப்படவேண்டாம் என்றும் இலங்கைக்கு பணம் அனுப்புகின்ற போது இலங்கை மத்திய வங்கியால் மேற்பார்வை செய்யப்படுகின்ற வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள் அல்லது சர்வதேச வங்கிகள் அல்லது நிதியியல் நிறுவனங்களூடாக மாத்திரம் பணம் அனுப்புவதை உறுதிசெய்யுமாறும் இலங்கை மத்திய வங்கி தொடர்புடைய அனைத்துத் தரப்பினரையும் வலியுறுத்துகின்றது.

இலங்கை மத்திய வங்கி, இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01
011-2477000 cbslgen@cbsl.lk www.cbsl.gov.lk



# சிறுவிளம்பரங்கள்

வீரகேசரி

### மைவெளிச்சம்

ஓம் சாயப்பா உங்கள் பிறந்த திகதி வருடம் மாதம் என்பனவற்றுடன் முன்கூடியே தொடர்பு கொண்டு வரவும். காதல் பிரச்சினை, தொழில் பிரச்சினை, குடும்பப் பிரச்சினை, வெளிநாட்டு பயணம் போன்ற பிரச்சினைகளுக்கு முன்கூடியே 077 7368640 தொடர்பு கொண்டு வரவும். www.eswari.com (காலை 10 மணி தொடக்கம் 6.00 மணிவரை) Dr.ஈஸ்வரி Hons JP , இல.21/1/1 ஜெம்பட்டாவீதி கொழும்பு 13.

### சேவை

நீங்கள் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? கவலையை விடுங்கள் நாங்கள் மீட்டு சந்தைப் பெறுமதி அவ்விடத்திலேயே தரப்படும். 077 6151283

### சேவை

நீங்கள் அடகு வைத்து மீட்டெடுக்க முடியாத நகைகளை எமது நிறுவனத்தின் ஊழியர்கள் மூலமாக நீங்கள் அடகு வைத்த நிறுவனத்திற்கு வருகைத்தந்து மீட்டு எடுத்து அதற்கான பெறுமதிப்பணம் அவ்விடத்திலேயே தரப்படும். நாடளாவிய ரீதியில் சினேக பூர்வமான சேவை. AAA Gold Center. 076 5684346

### விற்பனைக்கு

Nipun Furniture மாபெரும் Sale இப்பொழுது No.43, St.Lucia's Squars (Facing St.Lucia's Street), Kotahena, Colombo - 13 இல் உள்ள மண்டபத்தில் நடைபெறுகிறது. Teak Almaraha, Beds, Sofa TV / Tables, Display Cupboard, Dining Tables, Computer Tables, Display Cupboards, T.V Stands, Writing Tables Office Cupboards, Sammy Cupboards, Pantry Cupboards, Glass LCD TV Stands இன்னும் பல வீட்டுக்கு தேவையான தளபாடங்கள் குறைந்த விலையில் கிடைக்கும். தொடர்பு - 076 8779512 / 077 0622604

### தேவை

தெஹிவளையில் அமைந்துள்ள ஹோட்டலுக்கு வேலையாட்கள் தேவை. சமையலாளர், வெயிட்டர், டீமேக்கர், Sales Boy. 077 9474799, 077 9073183, 076 9904124

### தேவை

மேசன், வெல்டிங் பாஸ்மார் மற்றும் கையுதவியாட்கள் தேவை. 071 4017792/ 075 0473241

### தேவை

கிரிபத்கொடையிலுள்ள ஹோட்டலொன்றுக்கு சூன்பாண் முச்சக்கரவண்டி ஓட்டுனர் ஒருவர் தேவை. (071 3959548)

### பழுதுபார்த்தல்

Sathees Electronic LED, LCD TV Repairing. No.96, Kerawalapitiya Road, Hendala, Wattala. Mobile : 077 1549290

### கடை விற்பனைக்கு/ வாடகைக்கு

கொழும்பு 12 (Pettah) சென்ட்ரல் ரோட்டில் கடை/ வர்த்தக நிலையம். A/C Office & Bathroom, இரண்டு மாடி, 3.70 Perch. Main Street, Sea Street, Dam Street அருகாமையில், பிரதான வீதியில் அமைந்துள்ளது. 076 7672036

### தேவை

பேக்கரியில் கறி செய்யும் ஆள் தேவை. வயது 20 - 40 வரை சம்பளம் 1800/= சாப்பாட்டிற்கு 400/= தங்குமிடமும் வழங்கப்படும். தொடர்பு - 076 2658003

### ஜோதிடம்

பிரிவால் வேதனையா நல்ல நட்பை இழந்து விட்டீர்களா? வீண் கவலை வேண்டாம் நீங்கள் நினைப்பது நடக்கும் கைரேகை, எண் ஜோதிடம், ஜாதகப்பிரசன்னம் மூலம் தொழில் நஷ்டம், திருமணம், வெளிநாட்டு பயணம், அதிர்ஷ்டம், கடன் தொல்லை நீங்க மற்றும் எதிர்காலத்தை தெளிவாக அறிந்து நிம்மதியுடன் வாழ ஜோதிட மனவள ஆலோசகர் சாமி கங்காதரன் ஐயாவை தொடர்பு கொள்ளுங்கள். 077 2105957 இரகசியம் நூற்றுக்கு நூறு வீதம் பாதுகாக்கப்படும். No. 145/1, Galle Road, Colombo - 06. 0777 310088, 011 2055655

### தேவை

வயது 20 இற்கும் 35 இற்கும் இடைப்பட்ட மலையகத்தைச் சேர்ந்த தொழிலாளர் இருவர் தேவை. நாளொன்றுக்கு ரூபாய் 1700 + 50 தரப்படும். தங்குமிட வசதி உண்டு. 011 2933740, 077 9888748

### தேவை

பிரபல விடுதி (Lodge) ஒன்றிற்கு சுத்திகரிப்பாளர் (Cleaning) வேலைக்கு அனுபவம் உள்ள ஆண்/ பெண் தேவை. நேரில் வரவும். சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும். இல.176, சென்ரல் ரோட், கொழும்பு - 12. 011 2320499, 076 6696333

### தேவை

Vacancies Exist for Female Clerical Assistants. School Leavers Preferred with G.C.E (A/L) Residents of Colombo Area Considered. Apply to : P.O.Box - 293, Colombo - 11. Email : jtc@jayes.co

### தேவை

Vacancy Exist for a Male IT Technician with Experience. Salary Negotiable. Apply to : P.O.Box 293, Colombo - 11. Email : jtc@jayes.co

### தேவை

கொழும்பு வீடுகளில் தங்கியிருந்து சமையல் வீட்டு வேலைக்கு பெண்கள் தேவை. சம்பளம் 30,000/= - 35,000/= வழங்கப்படும். தோட்ட வேலைக்கு ஆண்கள் தேவை. 071 7539333 ஏஜன்சி

### மணமகன் தேவை

1992, யாழிந்து கோவியர், உத்திரட்டாதி, Programe Manager, யாழ்ப்பாணம், பதிவு #6113, புதன்கிழமை, 15 Dec 2021 வரையான பதிவுக்கு 20% விலைக்கழிவு, மற்றும் திருமணம் சரி வரும் போது தரகர்கூலி இல்லை. Appointments 076 6649401. www.EQMarriageService.com, Ensured Quality Lanka Pvt ltd., No.91 - 4/2, Galle Road, Bambalapitya, Colombo - 04

### தேவை

பேக்கரி பாஸ்மார் தேவை. வயது 20 - 40 வரை. சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும். சாப்பாட்டுக்கு 400/= தங்குமிடம் தரப்படும். தொடர்பு - 071 5406662

### தேவை

Electrician மற்றும் Electrical உதவியாளர்கள் தேவை. Electrical உதவியாளர்கள் சம்பளம் 2000/= Electrician சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும். தொலைபேசி - 077 9286652

### தேவை

திறமையான வயறிங் பாஸ்மார்கள் மற்றும் உதவியாளர்கள் தேவை. கொள்ளுப்பிட்டி மற்றும் யூனியன் பிளேஸ் வேலைத்தளத்துக்கு. MK Constructions - Dehiwala. 071 5156864 / 077 4902333/ 076 4575686

வீரகேசரியின் குறுந்தகவல் செய்திகளை உடனுக்குடன் தமிழில் பெற்றுக்கொள்ள

உங்கள் டயலொக் வலையமைப்பில்

**REG VK**

என்று பதிவிட்டு

**87960**

என்ற எண்ணுக்கு குறுஞ்செய்தி (SMS) ஒன்றை அனுப்புங்கள்.

நாள் ஒன்றுக்கு : ரூ.1.67 + பெறுமதிசேர் வரிகள்



# விளையாட்டு

## இரண்டாவது டெஸ்ட் இன்று

இந்தியா – நியூஸிலாந்து அணிகள் மோதும் 2ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி மும்பை வான்கடே மைதானத்தில் இன்று ஆரம்பமாகின்றது.

முதல் டெஸ்டில் இந்திய அணி நூலிழையில் வெற்றி வாய்ப்பை தவறவிட்டது. நியூஸிலாந்தின் கடைசி விக்கெட் ஜோடியின் சிறப்பான ஆட்டத்தால் போட்டி சமநிலையானது. இதை சரி செய்யும் வகையில் 2ஆவது டெஸ்டில் வெற்றி பெற்று இந்தியா தொடரை கைப்பற்றும் ஆர்வத்தில் உள்ளது.



## விளையாட தடை?

கே.எல்.ராகுல் மற்றும் ரஷீத் கான் ஆகியோர் ஐ.பி.எல்.லில் புதிதாக வரவுள்ள லக்னோ அணியுடன் ஒப்பந்த பேச்சுவார்த்தையில் ஈடுபட்டது உறுதியானால் இருவருக்கும் விளையாட ஓராண்டு தடை விதிக்கும் சிக்கல் எழுந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்விருவரையும் புதிதாக வரவுள்ள லக்னோ அணி விதிகளை மீறி மூளைச் சலவை செய்து அணியிலிருந்து வெளியேறச் செய்ததாக பஞ்சாப் மற்றும் ஹைதராபாத் அணி நிர்வாகங்களும் வாய்மொழியாக புகாரளித்துள்ளன.

## இலங்கையை முன்னிலைக்கு இட்டுச்சென்ற தனஞ்சய டி சில்வா

### எம்புல்தெனியவுடன் 9ஆவது விக்கெட்டுக்கான இணைப்பாட்டமாக 107 ஓட்டங்கள் சேர்ப்பு

மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான இரண்டவாது போட்டியின் நான்காம் நாளான நேற்று 3 விக்கெட்டுக்களை இழந்து 23 ஓட்டங்கள் முன்னிலையுடன் இலங்கை ஆடிக் கொண்டிருந்த வேளையில் களத்துக்கு வந்த தனஞ்சய டி சில்வா நேற்றைய நாள் ஆட்டம் நிறைவுவரை களத்தில் நின்று இலங்கையை 279 ஓட்டங்களால் முன்னிலையில் வைக்க முக்கிய பங்காற்றினார்.

அத்தோடு 9 ஆவது விக்கெட்டில் லசித் எம்புல்தெனிய மற்றும் தனஞ்சய டி சில்வா ஜோடி 107 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பெற்றுக் கொண்டது.

இந்த இன்னிங்ஸில் அபாரமாக ஆடிய தனஞ்சய டி சில்வா நேற்றைய நாள் ஆட்டநேர முடிவின் போது 153 ஓட்டங்களைப் பெற்று களத்தில் நின்றார். அவருக்கு துணை நின்ற லசித் எம்புல்தெனிய 25 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தார்.



இதனால் இலங்கை அணி 8 விக்கெட்டுக்களை இழந்து 328 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இந்த ஓட்ட எண்ணிக்கையுடன் மேற்கிந்திய திவுகளை விட 279 ஓட்டங்கள் முன்னிலை பெற்றுள்ளது. இன்று போட்டியின் கடைசி நாள் ஆட்டமாகும்.

Powered by
CDB
Your Friend



படப்பிடிப்பு: எம்.எஸ்.சுரேந்திரன்

## லங்கா பிரீமியர் லீக் தொடரில் தென்னாபிரிக்க வீரர்கள் ஆட மாட்டார்களாம்

### வெளிநாட்டு வீரர்களுக்கு தனிமைப்படுத்தல் கட்டாயம்; பி.சி.ஆர்., அன்டிஜன் இரண்டும் பார்க்கப்படும்

இலங்கைக் கிரிக்கெட் நிறுவனம் நடத்தும் லங்கா பிரீமியர் லீக் தொடர் எதிர்வரும் 5ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொழும்பு ஆர்.பிரேமதாச விளையாட்டரங்கில் ஆரம்பமாகிறது.

இது குறித்த ஊடகவியலாளர் சந்திப்பொன்று நேற்று நடைபெற்றது.

அதன்போது, தென்னாபிரிக்காவிலிருந்து எந்தவொரு வீரரும் பங்கேற்க மாட்டார்கள் என்று எல்.பி.எல். தொடரின் தலைவர் தெரிவித்தார்.

ஒமிக்ரோன் வைரஸ் அச்சுறுத்தல் தென்னாபிரிக்காவில் அதிகமாக இருப்பதால் இந்த முடிவு எட்டப்பட்டுள்ளது.

ஆனாலும் தற்போது நடைபெற்றுவரும் பத்துக்கு 10 லீக் தொடரில் பங்கேற்றுள்ள தென்னாபிரிக்க வீரர்கள் அங்கிருந்து நேரடியாக லங்கா பிரீமியர் லீக் தொடரில் பங்கேற்க முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும் வெளிநாட்டு வீரர்களுக்கு ஜயவர்தனபுர பரிசோதனை நிலையத்தில் பி.சீ.ஆர். மற்றும் அன்டிஜன் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுவதோடு மூன்று நாட்கள் அவர்கள் தனிமைப்படுத்தலில் வைக்கப்படுவார்கள் என்று பேராசிரியர் வைத்தியர் அர்ஜுண டி சில்வா தெரிவித்தார். மேலும் ரசிகர்களை மைதானத்துக்கு அனுமதிக்கப்படுவார்கள் என்றும் அனுமதி டிக்கெட்டுக்கள் பெற்றுக்கொள்வது குறித்த தகவல்கள் ஓரிரு நாட்களில் தெரிவிக்கப்படும் என்றும் இலங்கைக் கிரிக்கெட் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஆஸ்லி டி சில்வா தெரிவித்தார்.

## சீன டென்னிஸ் தொடர்கள் ரத்து

சீனாவில் நடைபெறவிருந்த அனைத்து மகளிர் போட்டிகளையும் ரத்துச் செய்வதாக மகளிர் டென்னிஸ் சங்கம் அறிவித்துள்ளது.

உயர்மட்ட அதிகாரியொருவர் மீது பாலியல் குற்றச்சாட்டை சுமத்திய டென்னிஸ் வீராங்கனை பெங் சுவாய், கடந்த சில வாரங்களாக காணாமல் போயுள்ளதாக கூறப்படுகின்றது.

இந்த விவகாரம் பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ள நிலையிலேயே ஹொங் கொங் உட்பட சீனாவில் நடைபெறவிருந்த அனைத்து டென்னிஸ் போட்டிகளையும் இரத்துச் செய்வதாக மகளிர் டென்னிஸ் சங்கம் அறிவித்துள்ளது.



## அஸ்ட்ராஸெனேகாவால் குருதி உறைவைத் தூண்டும் காரணி கண்டுபிடிப்பு



கொவிட்-19 கொரோனா வைரஸ் தொற்றுக்கான ஒக்ஸ்போர்ட்/அஸ்ட்ராஸெனேகா தடுப்பூசி மருந்தை ஏற்றிக் கொண்ட பின்னர் சிலருக்கு அரிதான முறையில் குருதி உறைவைத் தூண்டும் காரணியை கண்டறிந்துள்ளதாக தாம் நம்புவதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

பிரித்தானிய மற்றும் அமெரிக்க விஞ்ஞானிகள் குழுவினரால் மேற்கொள்ளப்பட்ட மேற்படி ஆய்வானது குருதியிலுள்ள புரதமொன்று தடுப்பூசி மருந்தின் முக்கிய உள்ளடக்கமொன்றை கவர்ந்திழுத்துக் கொள்வதன் காரணமாக ஏற்படும் நோயெதிர்ப்பு முறைமையுடன் தொடர்புபட்ட சங்கிலித் தொடரான பிரதிபலிப்பே இந்தக் குருதி உறைதல் நிலைக்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.



## உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான விண்ணப்பம் கோரல்!

2022 இல் நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத்தேர்தலில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பாக போட்டியிட ஆர்வமுள்ள அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

போட்டியிட விரும்புவோர் கீழே இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவம் போன்றதொன்றை தயார் செய்து, 31.12.2021 ஆம் திகதிக்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**S.Subairdeen**
**Secretary General**
**All Ceylon Makkal Congress**
**No.56, 1st Floor,**
**Supun Arcade Residencies,**
**Galle Road, Colombo 06.**
மின்னஞ்சல்: **acmcheadoffice@gmail.com**

(மாதிரி விண்ணப்பப்படிவத்தினை அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் **(www.acmc.lk)** பெற்றுக்கொள்ள முடியும்.)

**மாதிரி விண்ணப்பப்படிவம்:**

**உள்ளூராட்சி மன்றத் தேர்தல் - 2022**
**அகில இலங்கை மக்கள் காங்கிரஸ்**

முழுப் பெயர் :- ..........................................
பிறந்த திகதி :- .................... பாலினம் :- ..............
அடையாள அட்டை இலக்கம் :- ..............................
வதிவிட முகவரி :- ..............................
கல்வித் தகைமை :- ..............................
மாவட்டம் :- ..............................
பிரதேச செயலாளர் பிரிவு :- ..............................
கிராம அலுவலர் பிரிவு :- ..............................
தேர்தலில் போட்டியிட விரும்பும்:
அ) உள்ளூராட்சி மன்றம் :- ..............................
ஆ) வட்டாரம் :- ..............................
இ) வட்டாரம் அமைந்துள்ள கிராம சேவகர் பிரிவு/பிரிவுகள்:- .............

சமூக சேவைகள் தொடர்பான அனுபவம் :- ..............................
அரசியல் தொடர்பான அனுபவம் :- ..............................
தொலைபேசி இலக்கம் :- ..............................
மின்னஞ்சல் முகவரி :- ..............................

....................
கையொப்பம்

மேலே உள்ள தரவுகள் அடங்கிய விண்ணப்படிவம் ஒன்றை தயார் செய்து, 31.12.2021ஆம் திகதிக்கு முன்னர் மேலே குறிக்கப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

## தடுப்பூசி மருந்துகளை ஏற்றுவதைக் குறைப்பது புதிய வகை வைரஸுகள் தோன்ற வழிவகை செய்யும்

### உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை



கொவிட்-19 கொரோனா வைரஸ் தொற்றுக்கான தடுப்பூசி மருந்துகளை ஏற்றுவதைக் குறைப்பது மற்றும் அந்தத் தொற்றைக் கண்டறிவதற்கான பரிசோதனைகளைக் குறைப்பது ஆகியன இணைந்து புதிய திரிபுநிலைக்குள்ளான கொரோனா வைரஸ் வகைகள் உருவாகிப் பெருகுவதற்கான தளமொன்றை உருவாக்குவதாக உள்ளதாக உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரித்துள்ளது.

இந்நிலையில் உலக சுகாதார ஸ்தாபனத்தின் தலைவர் ரெட்ரொஸ் அதானொம் கப்பிறியேஸஸ், தொற்று ஏற்படும் உயர் அபாய நிலையிலுள்ளவர்களுக்கு உடனடியாக முழுமையாக தடுப்பூசி மருந்து ஏற்ற வலியுறுத்தியுள்ளார். உலகம் ஏற்கனவே பரவி வரும் உயர் தொற்று அபாயமுள்ள திரிபுநிலைக்குள்ளான டெல்ற்றா வைரஸ் தொற்றைத் தடுப்பதற்கு பயன்படுபவற்றை தொடர்ந்து பயன்படுத்தும் பட்சத்தில் ஒமிக்ரோன் வைரஸ் தொற்றிலிருந்து உயிர்களைக் காப்பாற்றக் கூடியதாகவிருக்கும் என ரெட்ரொஸ் அதானொம் கப்பிறியேஸஸ் தெரிவித்தார்.

புதிய திரிபுநிலைக்குள்ளான ஒமிக்ரோன் வைரஸ் தொற்று முதல் தடவையாக அமெரிக்காவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள நிலையில், அந்த வைரஸ் தொடர்பான அச்சம் உலக நாடுகள் மத்தியில் அதிகரித்துள்ளது. கடந்த நவம்பர் மாதம் 22 ஆம் திகதி தென் ஆபிரிக்காவிலிருந்து திரும்பிய கலிபோர்னிய மாநிலத்தைச் சேர்ந்த முழுமையாகத் தடுப்பூசி மருந்து ஏற்றிக் கொண்ட ஒருவருக்கே 7 நாட்கள் கழித்து ஒமிக்ரோன் வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

அமெரிக்க வெள்ளை மாளிகையானது சர்வதேச நாடுகளிலிருந்து அமெரிக்கா வரும் பயணிகளுக்கான பரிசோதனைகளை கடுமையாக்கும் தனது திட்டம் குறித்து அறிவித்துள்ளது.

## உலகச் செய்திகள்

## பாரிய போராட்டமொன்றை வட கொரியா எதிர்கொண்டுள்ளது

### கிம் ஜொங் உன் எச்சரிக்கை



வட கொரியா எதிர்வரும் வருடத்தில் பாதுகாப்பு, விவசாயம் மற்றும் கட்டிட நிர்மாணம் ஆகிய துறைகளில் முன்னேற்றம் காண்பதற்கு போராடத் தயாராக வேண்டியுள்ளதாக வட கொரிய தலைவர் கிம் ஜொங் உன் தெரிவித்ததாக அந்நாட்டு அரசாங்க ஊடகம் நேற்று வியாழக்கிழமை அறிக்கையிட்டுள்ளது.

கிம் ஜொங் உன் வட கொரிய தொழிலாளர் கட்சி மத்திய சபையின் வருடாந்தக் கூட்டத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்நாடு தற்போதும் பொருளாதார சிரமங்களை எதிர்நோக்கி வருகின்ற நிலையில் கொள்கை இலக்குகளை முன்னெடுப்பது மற்றும் இந்த வருட ஆரம்பத்தில் அறிமுகம் செய்யப்பட்ட 5 வருட பொருளாதார திட்டத்தை நிறைவேற்றுவது என்பவற்றில் ஆளும் கட்சி வெற்றிபெற்றுள்ளதாக கிம் ஜொங் உன் கூறியதாக வட கொரிய அரசாங்க செய்தி முகவர் நிலையமான கே.சி.என்.ஏ. அறிக்கையிட்டுள்ளது. வட கொரியாவின் ஏவுகணை மற்றும் அணுசக்தி நிகழ்ச்சித் திட்டங்கள், கொவிட்-19 கொரோனா வைரஸ் தொற்றுத் தொடர்பான முடக்கநிலை மற்றும் இயற்கை அனர்த்தங்கள் என்பன காரணமாக அந்நாட்டில் உணவு மற்றும் மின்சாரப் பற்றாக்குறை தொடர்ந்து நிலவுவதாக ஐக்கிய நாடுகள் முகவர் நிலையங்கள் தெரிவிக்கின்றன.

## நைஜீரியாவில் படகு விபத்து; 29 பேர் பலி

நைஜீரியாவின் வட கனோ மாநிலத்திலுள்ள ஆறொன்றில் படகொன்று கவிழ்ந்ததில் பாடசாலைச் சிறுவர்கள் உட்பட குறைந்தது 29 பேர் பலியாகியுள்ளனர்.

இந்த சம்பவத்தில் உயிரிழந்தவர்களில் அநேகர் மத நிகழ்வொன்றில் கலந்து கொள்ளச் சென்ற இஸ்லாமிய பாடசாலையொன்றைச் சேர்ந்த 6 வயதுக்கும் 12 வயதுக்குமிடைப்பட்ட வயதுடைய மாணவர்களாவர். அந்தப் படகில் 50 பேர் வரை பயணித்ததாக கூறப்படுகிறது. கடோ பிராந்தியத்திலிருந்து பக்வாயி பிராந்தியத்திற்கு மேற்படி படகில் பயணித்தவர்களில் 7 பேர் உயிருடன் மீட்கப்பட்டுள்ள நிலையில், ஏனையவர்களைத் தேடும் நடவடிக்கை தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகிறது. இந்த விபத்துக்கான காரணம் கண்டறியப்படவில்லை.

## ஜேர்மனியில் உலகப் போர்க் கால குண்டு வெடிப்பு; நால்வர் காயம்

ஜேர்மனிய முனிச் நகரிலுள்ள புகையிரத நிர்மாண தளத்தில் இரண்டாம் உலகப் போர்க் காலக் குண்டொன்று வெடித்ததில் குறைந்தது நால்வர் காயமடைந்துள்ளனர். மேற்படி காயமடைந்தவர்களில் ஒருவரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

புகையிரத நிலையத்துக்கு அண்மையிலுள்ள டொன்னர்பேர்கர் பாலத்திற்கு அருகில் இடம்பெற்ற நிர்மாண துளையிடும் செயற்கிரமத்தின் போது மேற்படி 250 கிலோகிராம் நிறையுடைய குண்டு வெடித்துள்ளது. இந்த வெடிப்பு சம்பவத்தையடுத்து அந்தப் பிராந்தியத்தில் கடும் வாகன நெரிசல் ஏற்பட்டதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

### பங்களாதேஷ்

## சுவரோவியத்திற்கு எதிர்ப்பு தெரிவித்த நகர மேயர் கைது

பங்களாதேஷ் பிரதமர் ஷெய்க் ஹஸினாவின் தந்தையை பிரதிபலிக்கும் சுவரோவியத்திற்கு அனுமதி வழங்க மறுத்த அந்நாட்டு மேயர் ஒருவரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

ஹஸினா 2009 ஆம் ஆண்டு பதவியேற்றது முதற்கொண்டு அவரது தந்தையும் சுதந்திர பங்களாதேஷின் முதலாவது தலைவருமான ஷெய்க் முஜிபுர் ரஹ்மானின் 1,000 க்கு மேற்பட்ட சுவரோவியங்களை அதிகாரிகள் காட்சிப்படுத்தியுள்ளனர். இந்நிலையில் வட ராஜ்ஷாஹி நகர மேயரான அப்பர் அலி மேற்படி ஓவியத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஒலிநாடா பதிவொன்றை வெளியிட்டதையடுத்துக் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

Printed and published by Express Newspapers (Cey) (Pvt) Ltd. at No. 267, Raja Mawatha, Ekala, Ja-Ela. On Friday, December 03, 2021